www.tamilarangam.net

சரிநிகர்
'SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 144 ஏப். 09 - ஏப். 22. 1998 விலை ரூபா 10.00

அடுத்த இதழ் ஏப்ரல் 30ல்

எச்சிற் சுகம் !

நீலனொடு சம்பந்தன் நெஞ்சறியச் சித்தனுடன்
தோழமைக்குத் தேவனுடன் தாசனுமாய் - கேளுமுங்கள்
கச்சையையும் உருவிப்பின் கம்பியெண்ண வைத்தோரின்
எச்சிலிலை நக்கிவந்த இதம் !

- ஈழ மோகம்




# 'தமிழ்க் கட்சிகள் எங்களுடனேயே !'

– அமைச்சர் மங்களசமரவீர

# புதிய வரி : புதிய சுருக்கு ?


# U.N.P. : குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டம்

–சார்ள்ஸ் அபேசேகர



அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள்:

# அடக்குமுறைக்கான அதிகாரம் ?



# வாசுவின் மௌனமும், வாலைச் சுருட்டும் பொ.ஐ.மு.வும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆளும் கட்சியும் ஆதரவு!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமத்தில் அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் பலரைப் படுகொலை செய்த சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசார் நீதிமன்றத்தின் முன் ஆஜராக்கப்பட்ட போது, அவர்களுக்குப் பிணை வழங்க முன்வந்தவர் அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆளுங் கட்சி அரசியல் பிரமுகரொருவராவார்.

அதற்காக மில்லியன் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுள்ளதுடன், அப்பணம் அப்பிரதேசத்திலுள்ள மதுபானக் கடை உரிமையாளர் ஒருவரது தயவால் சேகரிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இதே சமயம் இப்படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சந்தேக நபரான சார்ஜன்ற் மஞ்சுள என்ற பொலிஸ் அதிகாரி அப்பிரதேசத்திலுள்ள ஆளுங் கட்சி அரசியல் பிரமுகரது பாதுகாப்பின் கீழ் மறைந்திருப்பதால் அவரைக் கைது செய்ய முடியாதுள்ளதாகக் கூறப்படுகிறது.

## வந்து; சந்தி!

யாழ்ப்பாணத்திலுள்ள அரசு நிறுவன உயரதிகாரிகள் பலருக்கு புலிகள் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிகிறது. 'வந்து சந்திக்கவும்'. அல்லது 'பதவி விலகவும்' என்பதே கடிதத்தின் செய்தி.

அதிகாரிகள் பலர் இரகசியமாகச் சென்று சந்தித்து விட்டு வந்திருக்கிறார்களாம். சந்திக்கப் பயந்த சிலர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு வீட்டுடனேயே ஐக்கியமாகி விட்டார்கள்.

இந்த இரகசியச் சந்திப்பு விடயம் படை அதிகாரிகளுக்குக் கசிந்ததாலோ என்னவோ அவர்களும் இந்த அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பி இருககிறார்கள்; 'அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்துக்கு ஒத்துழைக்காவிட்டால் பயங்கராவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்போம்' என்று.

யாழ்ப்பாணத்திற்குப் படையினர் அழைத்தவுடன் தனிக்காட்டு ராஜாவாக சுருட்டிக் கொள்ளலாம் என்று பாய்ந்து வந்த அதிகாரிகளுக்குத் தான் திண்டாட்டம்.

## பஞ்சிகாவத்தைக் கதை!

யாழ்ப்பாணத் தேர்தலுக்கு பஸ்கள் அனுப்புவதற்காக மற்றைய பாகத்திலுள்ள ஒவ்வொரு டிப்போவிலிருந்தும் ஒவ்வொரு பஸ் கேட்டது அரசாங்கம். சிலர் கொடுத்தார்கள். சிலர் கொடுக்கவில்லை. கொடுக்காதவர்களிடமிருந்து பறித்தெடுத்ததையும் சேர்த்து 97 பஸ்களை அனுப்பி வைத்தார்கள். இவற்றில் நல்லதாகப் பார்த்து 16 பஸ்களை இராணுவம் எடுத்து விட்டது. மீதியில் பத்துக்கும் பதினைந்துக்கும் இடைப்பட்டவை 'நின்றும், கிடந்தும், உருண்டும்' ஓடுகின்றன அவ்வப்போது.

மீதி பஸ்களைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்த குறைந்தது இரண்டு மாதங்களாவது ஆகும் என்கிறார் ஒரு டிப்போ அதிகாரி. 'பஞ்சிகாவத்தை என்று நினைத்து பழைய பஸ்களை அனுப்பினார்களோ' என்கிறார் பிரயாணி ஒருவர். பஞ்சிகாவத்தையை அறிந்தவர்களுக்கு இது புரியும்!

## தொடரும் மிரட்டல்!

பொலிஸ் தாக்குதலுக்கும், கசிப்பு, கள்ளச்சாராய விபாபாரிகளது அச்சுறுத்தலுக்கும் உள்ளான அறநாயக்க லேக்ஹவுஸ் நிருபர் பிரதீப்குமார தர்மரத்ன வதிவிடமேதும் இல்லாததால் தமது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கிவரும் அதே சமயம், அவ்விடங்களிலும் அவருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப் படுவதாகத் தெரிய வருகிறது.

கடந்த வாரத்தில் ஒரு நாள் கொலைஞர்கள் சிலர் இவர் தங்கியிருக்கும் இவரது மாமியாரின் வீட்டுக்கும் வந்து அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அவர் தெரிவிக்கிறார். இக்கொலைப்பயமுறுத்தல் காரணமாக இவ் உறவினர்களும், நண்பர்களும் அவருக்கு இருப்பிடம் கொடுக்க அஞ்சுவதாகவும், தயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெண்களுக்குப் பட்டயம்!

இலங்கையிலேயே பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகம் நடைபெறும் மாவட்டமான அனுராதபுரத்தினுள் குறைந்தது இருதினங்களுக்கு ஒரு பாலியல் வல்லுறவுச் சம்பவம் இடம்பெறுவதாக அனுராதபுர சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எஸ்.எம்.விக்ரமசிங்ஹ கூறுகிறார்

## யாழ்ப்பாணச் செய்திகள்

யாழ். மாவட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா, யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் போது தனது இல்லத்தில் தங்குவதில்லை. யாழ் நகர 512வது படையணி அலுவலகத்திலேயே தங்குகிறார். பாதுகாப்புப் பிரச்சினைகளே இதற்குக் காரணமாம். இவரது வாசம் பெரும்பாலும் கொழும்பில் தான் என்பதும் அனைவரும் அறிந்ததே.

யாழ் நகர 512வது பிரிவின் படையணி கட்டளைத் தளபதி சுசந்த மென்டிஸ் பொது வைபவங்களில் தேநீர் குளிர் பானம் என்பன அருந்துவதில்லை. ரின் சோடா தான் அருந்துவது வழக்கம். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இவர் சோடா அருந்துகிறாராம்.

குருநகர் பகுதியில் அதிகாலையில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மீனவர்கள் அதிகாலையில் எழுந்து கடலுக்குச்சென்று விடுகின்றனர். மீனவர்கள் கடலுக்குச் சென்றதும் இராணுவத்தினர் இப்பகுதி வீடுகளுக்குச் சென்று கதவைத் தட்டுகின்றனராம். கதவு திறக்காத வீடுகளுக்கு கல்வீச்சும் இடம் பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பக்ஸ் மூலம் தகவல்களை அனுப்புவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வர்த்தகர் சிலர் பக்கம் ஒன்றுக்கு 150/=ரூபா கட்டணமாக அறவிட்டு வருகின்றனர். அண்மையில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர் ஒருவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு பக்ஸ் மூலம் தகவல் ஒன்றை அனுப்பிய போதே இவரிடம் 150 ரூபா கட்டணம் அறவிடப்பட்டுளளது.

பத்திரிகைகளின் முற்பக்கச் செய்தி ஆரவாரங்களுடன் ஆரம்பமான யாழ்ப்பாண மனித உரிமைகள் பணியகம் இன்று வரை தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால்; இருந்து வேலை செய்ய தள்பாடங்களே ஒழுங்காகத் தரப்படவில்லை என்று தொடங்கி அரசாங்கத்தின் அலட்சியத்தைப் புட்டு புட்டுப் வைக்கிறார்கள்.

பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்தது அரசு. தலைப்புச் செய்தி போட்டன தேசியப்பத்திரிகைகள். அதனை ஆமோதித்தார்கள் சமாதானத்தின் பாக்கியவான்கள்.

**மனித உரிமை 'வாழ்கிறது'**

**- எழுவான் -**

## நகரசபை : விசாரணைக்காக!

திருகோணமலை நகரசபையின் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஆளுநரால் குழுவொன்று அமைக்கப்பட்டது.

வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நாகேஸ்வரன், தம்பலகாமப் பிரதேச சபைக் கணக்காளர் குசலகுமார் ஆகியோரால் சமர்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையொன்றைத் தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் உதவிக் கூட்டுறவு ஆமையாளர் டபிள்யூ. டி. விஜேரட்ன, மண்முனைப் பிரதேசச் செயலாளர் புண்ணியமூர்த்தி நகர அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஏ.ஜெயரட்னம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

நகர சபைக்குச் சொந்தமான காணித்துண்டுகள் கைமாற்றப்பட்டமை, டிரக்டர் பெட்டிகள் நல்ல நிலையிலிருந்தும் பயன்பாட்டுக்குதவாதவை எனக்கழிக்கப்பட்டுக் குறைந்த விலையில் தனியாருக்கு கொடுத்தமை, கட்டிடச் செலவீனங்களில் மோசடி நிகழ்ந்தமை ஆகிய பல குற்றச்சாட்டுக்களை இந்தக் குழு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது.

இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் நகர சபைத்தலைவர் சூரியமூர்த்தி உட்பட பல உறுப்பினர்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும் எனக்கூறப்படுகிறது.

இவ் விசாரணைக்கு முன் நடவடிக்கையாக பல நகராட்சிமன்ற ஊழியர்கள் இடமாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் பலர் மட்டக்களப்புக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

**-விவேகி**

## ரெலோவுக்கில்லை மன்னிப்பு!

13வது திருத்தச் சட்டத்துடன் பொது மன்னிப்புக் கிடைத்து, ஜனநாயக அரசியல்நீரோட்டத்தில் இணைந்துள்ள ரெலோ இயக்க உறுப்பினரொருவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் சட்டத் துறையில் அது தொடர்பாகக் குழப்ப நிலையொன்று தோன்றியுள்ளது.

1996ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் திருகோணமலையில் வைத்துக் கைது செய்யப்பட்ட லக்ஷ்மன் ரட்ணம் என்பவர் மீதே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1989 ஜனவரி 1முதல் 1989 டிசம்பர் 31 வரையான காலப் பகுதியினுள் ரெலோ இயக்கத்தில் சேர்ந்து ஆயுதப்பயிற்சி பெற்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தை அவர் செய்துள்ளதாக மேற்படி வழக்கில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனாலும் 1987இல் பொது மன்னிப்புக் கிடைத்ததன் பின்பு ஈரோஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. போன்ற இயக்கங்களைப் போலவே ரெலோ இயக்கத்துக்கும் சுய பாதுகாப்புக்காக ஆயுதங்களுடன் ஜனநாயக அரசியலில் ஈடுபட அனுமதி கிடைத்திருந்தது.

அவ்வாறு இருக்கையில் சட்ட மா அதிபர் திணைக்களம் ரெலோ இயக்கத்தின் உறுப்பினரொருவர் மீது இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்தது தொடர்பாகக் கேள்விகள் எழுந்துள்ளன.

## மிரட்டுவது ஆளுங்கட்சி!

வடமேல் மாகாணத் தொடர்பூடகவியலாளர்கள் சங்கத்தின் அமைப்பாளர் கிஹான் ஏக்கநாயக்கவுக்குக் குருணாகல் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரொருவரினால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வடமேல் மாகாணத் தொடர்பூடகவியலாளர் சங்கம் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

திவயின பத்திரிகையின் குருணாகல் பிரதேசப் பத்திரிகையாளரொருவரை குருணாகல் பொலிசார் அழைத்துச்சென்ற சம்பவம் தொடர்பாகத் தகவல் அறியச் சென்றது தொடர்பாகவே ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளர் பத்திரிகையாளர் ஏக்கநாயக்கவுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுத்திருந்தார்.

## அடுத்த பிரதமர் யார்?

பொ.ஐ.மு. அரசின் அடுத்த பிரதமர் பதவிக்கு தி.மு.ஜயரத்ன, ரத்னசிறி விக்கிரமநாயக்க, தர்மசிறி சேனாநாயக்க போன்ற அமைச்சர்களில் பொருத்தமானவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு, கடந்த வாரம் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க அவர்களைச் சந்தித்த பிக்குகள் குழு கோரிக்கை விடுத்ததாகத் தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதமர் எதுவும் கூறவில்லையெனவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமரின் பிறந்த தினமான ஏப்ரல் மாதத்துடன் அவர் பதவியிலிருந்து விலகுவதாக எழுந்த செய்தியின் அடிப்படையில் இக்கோரிக்கை விடப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இதற்கிடையில் பிரதமர் பதவி வெற்றிடமாகும் தருணத்தில் லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்களைப் பதவியிலமர்த்துவது ஜனாதிபதியின் நோக்கம் எனவும் கூறப்பட்டது. இதன்படி பொ.ஐ.மு. அமைச்சர்களுக்கிடையில் பதவிப்போட்டி ஏற்பட்டுள்ளதுடன், அவர்கள் உயர் பிக்குக்ளிடம் இது தொடர்பாகக் கலந்துரையாடியதும், பிக்குகளின் இச்சந்திப்புக்குக் காரணமாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது ஒரு அலசல்

# யாழ்ப்பாணம் எப்படி இருக்கிறது

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு போய்வந்த நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்த போது, ''எப்படி யாழ்ப்பாணம் இருக்கு?'' என்று கேட்டேன்.

''யாழ்ப்பாணத்துக்கு என்ன? பெரும் கலகலப்பாக இருக்கு'' என்றார் அவர்.

''பெரும் கலகலப்பாக இருக்கா? எந்தப் பகுதியைச் சொல்லிறாய்?''

'பண்டு'க்கு உட்பட்ட நகரப் பகுதியைத் தான் சொல்லிறன். இந்தப் பகுதியில யுத்தம் நடந்த அறிகுறியே இல்லை. உடைந்த இரண்டொரு கட்டிடங்களையும், சன்னம் பாய்ந்த சுவர்களையும் தவிர''.

''பண்டுக்கு அப்பால் ஏதும் அசம்பாவிதங்கள் நடக்கிற அறிகுறி?''

''அப்படி நடப்பதாக பத்திரிகைகளில் தான் படித்தேன். சில நேரங்களில் தூர வெடிக்கிற ஷெல் சத்தங்களையும் இடைக்கிடை கேட்டன்.''

''மற்றப்படி யாழ்ப்பாணம் ஒழுங்கா இருக்கு என்றா சொல்லிற?''

''இல்லை ஒரு திருத்தம்''

''என்ன திருத்தம்?''

''ஒவ்வொரு சந்தியிலும், மூலையிலும், முடக்கிலும் காப்பரண்கள். அவற்றுக்கு முன்னால் 'இறங்கி வரவும்' என்ற அட்டை தொங்கும். அவ்விடங்களில் சைக்கிளை விட்டிறங்கி, 'இராணுவ தர்பாருக்கு' மரியாதை செலுத்துவது போல் நடந்து சென்று ஏறவேணும். இது முந்தி இந்திய இராணுவம் இருந்த காலத்தில் ஏறி இறங்கிய தைவிட இரட்டை மடங்காய் இருக்கு''

''நீ இப்படி ஏறி இறங்கியபோது உனக்கு என்ன மாதிரி இருந்தது?''

''நீயும் உன்னினமும் அடிமை அடிமை'' என்று யாரோ எனக்குப் பின்னால் குசுகுசுப்பதுபோல் பட்டது''

''உன்னைப் பொறுத்த வரையில் உன் உள்ளுணர்வுக்கு யாழ்ப்பாணத்து நிலைமை என்ன மாதிரிப் பட்டது?''

என்னைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணம், ஒரு பெரிய சுமுகமற்ற நிலையில் ஒரு போலி சுமுகநிலையை தரித்திருப்பது போலவே படுகிறது''

''இது பற்றி நீ யாழ்ப்பாணத்தில் யாரோடாவது கதைத்தாயா?''

''கதைத்தேன். பல புத்திஜீவிகளோடு கதைத்தேன்.''

''அவர்கள் என்ன சொன்னார்கள்?''

''அவர்கள் அடிக்க வந்து விட்டார்கள்! அவர்களுக்கு கொழும்பில் உள்ளவர்களிலும், அங்கு வரும் பத்திரிகைகளிலும் சரியான கோவம்''

''ஏன்?''

''யாழ்ப்பாணத்தில் மக்கள் சந்தோசமாகவும், அமைதியாகவும் இருப்பது இவர்களுக்கு பிடிக்கிறதில்லையாம். அதனால் தானாம் யாழ்ப்பாணத்தில் மக்கள் படையினரால் பலவிதத்தில் துன்புறுத்தப்படுகிறார்கள். பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப் படுகிறார்கள் என்று கொழும்பில் உள்ள தமிழரும், பத்திரிகைகளும் கூறிவருகின்றனவாம். கொழும்பிலும் வெளிநாட்டிலும் உள்ள தமிழருக்கு தமது இமேஜை பலப்படுத்திக் கொள்ள ஒரு தமிழ் மன்னன் தமிழ்ப் பகுதிகளை ஆளுகின்ற கற்பனை தான் தேவையாம். அங்கு தமிழ் மக்கள் படும் துன்பங்கள் பற்றி அவர்களுக்கு அக்கறையில்லையாம்.''

''தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி இவர்கள் அக்கறைப்படுவதாய் இல்லையா?''

''இவர்கள் இப்போ அக்கறைப்படுவதெல்லாம் போரையும் அழிவையும் நிற்பாட்ட வேண்டும் என்பது தான்''

''இப்படி இவர்கள் மனநிலை கீழிறங்கி போயிருப்பதற்குக் காரணம் என்ன?''

''கடைசியாக நடந்த இடப்பெயர்வின் போது (Exdus) இவர்கள் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்லவாம். அதுதான் ஊரோட ஒத்த விஷயம் என்று பொறுத்துக் கொண்டாலும் எங்கும் போக்கிடம் கிடைக்காது இவர்கள் கடைசியாக தம் சொந்த இடங்களுக்கு (யாழ் குடாநாட்டுக்கு) திரும்பிய போது, இவர்களைத் ''துரோகிகள்'' என்று தமிழ்த் தலைமை கூறியதுதான் இவர்களால் தாங்க முடியாமல் இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் இன்னொருவரும் குறுக்கிட்டு, 'இவர்கள் இந்திய இராணுவத்தின் காலத்தில் மக்களை விட்டுவிட்டு தாம் காட்டுக்குப் போனமாதிரி செய்திருக்கலாந் தானே? அப்படிச் செய்திருந்தால் இப்பவும் மக்களின் பெருமளவு ஆதரவு இருந்திருக்குமே?' என்றார். இதைக் கேட்டு விட்டு இன்னொருத்தர் 'அப்படிச் செய்யாததன் காரணம் றுவண்டாவில் ஏற்பட்ட மாதிரி இங்கேயும் ஒரு நிலைமையை ஏற்படுத்தி ஐ.நா. வைத் தலையிட வைக்கலாம் என்று இவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள். அது முடியாமல் போய் விட்டது' என்றார். இதைக்கேட்டு விட்டு இன்னொருத்தர், 'எது எப்படியாய் இருந்தாலும் புலிகள் எப்பொழுதும் அரசியலுக்கு முதன்மையளிக்காது, இராணுவ அணுகுமுறையை முதன்மைப்படுத்துவதைக் கைவிட வேண்டும். இராணுவ அணுகுமுறைக்கு முதன்மை அளிக்கும் (Military - Politico) பார்வையை இவர்கள் கைவிட்டால் இவர்களுக்கு எந்தப்பின்னடைவும் ஏற்படாது' என்றார்.

''இதுதான் யாழ்ப்பாணத்து புத்திஜீவிகளின் கருத்தா?'' நான் எனது நண்பனைத் துழாவினேன்.

''இல்லை கொஞ்சம் இளம் வயது புத்திஜீவிகள் இதற்கு மாறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்''

''அவர்கள் என்ன சொல்கிறார்கள்?''

''அரசாங்கம் 'சமாதானத்துக்கான யுத்தம்' என்று சொல்லி சமாதானத்துக்குள்ளேயே யுத்தத்தைப் புகுத்தும் போது புலிகள் இராணுவ அணுகுமுறைக்கு முதன்மை கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். எல்லா வித்திலும் தமிழ் மக்களை அரசாங்கம் பேய்க்காட்டி வருகிறது. உண்மையில் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அரசாங்கம் நம்புமானால் இத்தனை காலம் தீர்வுப்பொதியை இழுத்தடிக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது தீர்வுப்பொதி ஆரம்பத்தில் இருந்த சதைப் பிடிப்புகளையெல்லாம் இழந்து வெறும் எலும்புக் கூடாகவே மாறியுள்ளது. இந்த எலும்புக் கூட்டையே அரசாங்கம் எப்பவோ பேரினவாதப் புதை குழிகளுக்குள் போட்டிருக்கும், புலிகளின் இராணுவ அச்சுறுத்தல் இல்லாவிட்டிருந்தால் என்றுதான் அவர்கள் கூறுகிறார்கள். இறுதியாக அவர்கள் இப்படியும் சொன்னார்கள்''

''எப்படி''

''எப்படியும் வாழலாம் என்றால் வாழ்ந்து விட்டுப்போகலாம். ஆனால் நாம் நமது கலாசாரம், அடையாளம் என்பவற்றைப் பேணுவதற்கு சுதந்திரம் தேவையானால் கொஞ்சம் தியாகமும் செய்யத்தான் வேணும்'' என்றார்கள்.

''அப்படியானால் விடுதலை என்றபேரில் அவர்கள் மக்கள் மேல் சுமத்தும் எல்லா அனர்த்தங்களையும் விழுங்கிக்கொள்ள வேண்டும். என்று சொல்கிறார்களா?'' -நான்.

''அப்படி அவர்கள் சொல்லவில்லை. போராடுபவர்கள் தவறு செய்யும் போதும், அதனால் அவர்களுக்கு பின்னடைவு ஏற்படும் போதும், நாம் அவர்களை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பது புத்திசாலித்தனமானதல்ல. இந்நேரங்களில் தான் நாம் ஆக்கரீதியான விமர்சனங்களை முன்வைக்க வேண்டும். அது அவர்களையும் சிந்திக்க வைக்கும்'' என்றார்கள் அவர்கள்.

## மெல்லத் தமிழினி...

### தோது வாய்த்தால் கிழவியும் பாடுவாளாம்!

இந்த நாட்டின் தமிழ் மக்கள் பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் கீழ் படுகின்ற கஷ்டத்தைப் போல ஒரு காலத்திலும் கஷ்டப்பட்டதில்லை. யாழ்ப்பாணத்தில் ஐந்து லட்சம் மக்களின் வீடுவாசல்களை நாசமாக்கியது இந்த அரசு; வன்னியிலே 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை சிறையிலடைத்து வைத்திருப்பது இந்த அரசு. கொழும்பிலும் சரி, தோட்டப்புறத்திலும் சரி உள்ள தமிழ் மக்களுக்கு அது ஆற்றிவரும் கொடுமைகட்கு அளவே இல்லை...

யாருடைய வார்த்தைகள் இவை?

யாராவது தமிழ் பா.உ.வினது பேச்சு அல்லது ஏதாவது தமிழ்ப் பத்திரிகையின் அரசியல் பத்தியில் வந்த குறிப்பு என்று நீங்கள் சிலவேளை நினைக்கக் கூடும்.

ஆனால் இவர்கள் எல்லோரையும் பிடித்து விழுங்கிவிடக்கூடிய வேகத்துடன் இப்படிக் கூறியிருப்பவர் வேறு யாருமல்ல. சாட்சாத் ரணில் விக்கிரமசிங்க தான்.

மனிதர்களால் எப்படி எல்லாம் பேச முடிகிறது பாருங்கள். எல்லாம் அவரவர் இருக்கிற இடத்தைப் பொறுத்தது தான் என்பதற்கு வேறென்ன சான்று தேவை?

### கடவுள் காக்க!

இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததில் இங்கு சிலபேருக்குப் படுகுஷி. ராமராச்சியமே வந்துவிட்டது என்ற குதூகலம். பாபர் மசூதியை உடைத்த வரலாற்றுப் பெருமை மிக்க கட்சி அல்லவா அது? தனது வானரப் படையை அனுப்பி இலங்காபுரியை இன்னொரு தடவை தகனம் செய்ய மாட்ட தா என்ற ஏக்கமும் கூடவே இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க இந்திரா காந்தியிடம் ஓடிப் போனது அன்றைய கூட்டணி. இன்று இந்தக் கோஷ்டி பாரதீய ஜனதாவிடம் சரணடையத் துடிக்கிறது.

இந்தியா தன்னை சட்டரீதியாக ஒரு மத வாத அரசாக காட்டிக் கொள்வதில்லை. அதை அது காட்ட வேண்டும் அதாவது இந்து அரசாங்கமாக தன்னை அது காட்ட வேணும் என்றும் இவர்களுக்கு ஆசை.

பௌத்த பேரினவாதத்துக்கு பதில் இந்து மத மேலாதிக்கம் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்று துடிக்கும் மனம் இவர்களுக்கு.

நல்ல வேளை. இவர்கள் இன்னமும் சொற்ப பலத்துடன் தான் இருக்கிறார்கள். இல்லாவிடில் 'புத்தனார் தலை தத்தெனத் தத்துமே' என்று வரலாறு எழுதியதுபோல ஒரு நிலைமைக்கும் இறங்கி விட்டிருப்பார்கள்.

வாஜ்பாய் இலங்கையைப் பிடித்து, பௌத்தர்களை கழுவேற்ற கொஞ்ச கழுமரங்களையும் இவர்களுக்கு அனுப்பி வைத்தால் தான் இவர்களது ஜன்மம் சாபல்யம் அடையும் என்றளவுக்கு இவர்களுக்குள் வெறி இருக்கிறது.

தமிழர்களைச் செல்வா சொன்னது போல இவர்களிடமிருந்தும் 'கடவுள் தான் காப்பாற்ற வேணும்!''

### வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்!

மருதானையில் குண்டு வெடித்தால் அல்லது கொம்பனி வீதியில் குண்டு வெடித்தால் அது பொது மக்களைக் கொல்லும் நோக்குடன் புலிகளால் திட்டமிடப்பட்ட ஒரு செயல் என்று மிகவும் தெளிவாகக் கண்டுபிடித்து விடுகின்றனர் சில சமாதான வீரர்களும் பத்திரிகைகளும். தெற்கில் ஒரு இனக்கலவரத்தை தூண்டும் புலிகளின் இது போன்ற முயற்சிகள் இந்தப் பிரகிருதிகளின் செயற்பாடுகளினால் வெற்றி பெறாமல் தடுக்கப்பட்டு விட்டன. தமிழ் மக்கள் கொழும்பில் பாதுகாப்புடனும், சுதந்திரத்துடனும் வாழ அனுமதிக்கப்பட்டிருக்கின்றதே சிங்கள மக்களின் பெருந்தன்மைக்கு நல்ல உதாரணம் என்பது இவர்களது தத்துவம். என்ன பாதுகாப்பு என்ன சுதந்திரம் என்பதெல்லாம் கேட்கப்படக் கூடாத கேள்விகள்.


சுற்றிவளைப்பு, கடத்தல், அடித்துவிரட்டில், வீடுகளைத் தரைமட்டமாக்கல் எல்லாம் அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத நடவடிக்கைகள். புலிகள் சும்மா இருந்தால் ஒன்றும் நடந்திராது என்பது இவர்களின் சாரம்.

ஒரு பக்கத்தில் எரிச்சலை ஊட்டினாலும், மறுபக்கத்தில் இந்தக் கதைகளெல்லாம் எம் 'வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும்' என்ற ஆசையினால் செய்யப்படுபவையே என்று தோன்றுகையில் எதையும் சொல்ல முடிவதில்லை. ஆசை அதிகரித்து வெறியாக மாறும் போது அறிவை இழந்து விடுகிறது என்பார்கள். காமம் கதிர்வீச்சாய் ஆகாவிட்டால் 4 வயது குழந்தையை தகப்பனே வல்லுறவுக்குள்ளாக்கும் சம்பவங்கள் நடக்குமா என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வாசுதேவ நாணயக்கார



விக்கிரமபாகு கருணாரத்ன



விமல் வீரவன்ச

## வாசுவின் மௌனம் !

வாசு

**நீங்கள் சில காலமாகவே மௌனம் சாதித்து வருகிறீர்களே, ஏன்?**

எனது இந்த மௌனமானது பாரதூரமான நடவடிக்கையொன்றை எடுப்பதற்கு முன் ஏற்படும் மௌனமாகும்.

**அப்படி நீங்கள் எடுக்கப்போகும் பாரதூரமான நடவடிக்கை தான் என்ன?**

இனிமேலும் இந்த அரசாங்கத்துடன் இணைந்து பணிபுரிய முடியாத நிலைமையொன்று தோன்றியுள்ளது. இந்த அரசாங்கத்தில் தொடர்ந்தும் லங்கா சமசமாஜக் கட்சி இருக்கக்கூடாதென்ற முடிவிலே தான் நான் இருக்கிறேன்.

**நல்லது! உங்கள் கருத்தின்படி தவறு எங்குள்ளது?**

பொ.ஐ.மு. அணி முற்போக்கானது தான். ஆனாலும் பொ.ஐ.மு.வினுள்ளே உள்ளவர்களின் கைகளில் தான் தவறு உள்ளது. இன்று சந்திரிகாவைச் சுற்றி உள்ள சில அமைச்சர்கள் தாமாகவே அகல வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

**அப்படி அகல வேண்டிய அமைச்சர்கள் யார்?**

சி.வி.குணரத்ன, எஸ்.பி.திசாநாயக்க, மங்கள சமரவீர, கிங்ஸ்லி போன்றோர் அகல வேண்டும். இந்திக்க குணவர்த்தனவையும் அக்குவியலுக்குள் போட்டால் தவறில்லை.

**நல்லது! அவர்களுக்குப் பதிலாக அவ்விடத்துக்கு யார் வர வேண்டும்?**

பொ.ஐ.மு. அணிகளின் விருப்புக்களை நிறைவேற்றுவதில் வெற்றி பெற்ற அமரசிறி தொடங்கொட, பற்றி வீரக்கோன், மஹிந்த ராஜபக்ஷ, ஏ.எச்.எம்.பௌசி போன்ற அமைச்சர்கள் அவ்விடங்களை ஏற்க வேண்டும்.

**அப்படியானால், ஜனாதிபதி சந்திரிகா?**

பொ.ஐ.மு. அணிகளின் விருப்புக்களை நிறைவேற்ற அவர் புதிய செயல் மார்க்கமொன்றுக்குள் பிரவேசிக்க மாட்டாரேயானால் அவரும் அகல வேண்டும்.

**அப்போ அப் பதவிக்குப் பொருத்தமானவர் யார்?**

ஏன் மஹிந்த ராஜபக்ஷ இருக்கிறார். ரிச்சர்ட் பத்திரன உள்ளார். ○

## அரசின் கெட்ட கனவு !

விமல் வீரவன்ச

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் உங்களுக்கு உள்ள கொடுக்கல் வாங்கல்தான் என்ன?**

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் எதுவித கொடுக்கல் வாங்கலும் எமக்கில்லை. புலிகள் இயக்கத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்தது சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவும், றணசிங்ஹ பிரேமதாசவுமே. புலிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்த சந்திரிகா, புலிகளுக்கு நாட்டின் வடபகுதியைப் பத்து வருடங்களுக்கு ஒப்படைக்கப் போவதாகக் கூறினார். பிரேமதாச புலிகளுக்கு ஆயுதங்கள் பெற்றுக் கொடுத்தார். அவர்கள் இருவரையும் விட எமக்கென்றால் புலிகளுடன் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை.

**அப்படியாயின், புலிகளுடன் ஒன்று சேர்ந்து நீங்கள் பயங்கரவாதத்தை ஏற்படுத்தப் போவதாகக் கூறப்படுகிறதே?**

மனிதர்கள் மோசமான வேலைகளைச் செய்யப்போகும்போது கெட்ட கனவுகள் காண்பார்களாம். அரசாங்கத்துக்கும் இப்போது அந்த நிலைமை தான் ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் பரந்தளவிலான பொதுவான கடும் அடக்கு முறையொன்றைச் செய்யத் தயாராகுவதால் இவ்வாறான கெட்ட, மோசமான கனவுகள் காணத் தொடங்குகின்றது. அது இயல்பானதே. அரசாங்கம் இப்போதே அவ்வேலையைத் தொடங்கியுள்ளது. பொலன்னறுவையில் எமது முன்னணி ம.வி.மு. (ஜே.வி.பி) உறுப்பினரொருவரைப் படுகொலை செய்துள்ளது. அண்மையில் வரும் மாகாண சபைத் தேர்தல்களுக்கு இப்போதிருந்தே இவர்கள் துப்பாக்கிகளைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இது எமக்குப் புதியதொன்றல்ல. இது ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச போன்றோரின் ஸ்ரைல் ஆகும். அதே ஸ்ரைலில் தானே சந்திரிகாவும் வேலை செய்யப் போகிறார். ○

## வாலைச் சுருட்டும் பொ.ஐ.மு !

விக்கிரமபாகு கருணாரத்ன

**அண்மையில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ஐ.தே.க. அறிமுகப்படுத்திய மாகாண சபைத் தேர்தல்கள் எதிலுமே பங்குபற்ற மாட்டோம் என்றே அன்று, மாகாண சபை பற்றி இந்த அரசாங்கம் பேசியது.

ஐ.தே.கவின் இவ் அரசியலமைப்பை மாற்றிய மைத்துப் புதிய பிராந்திய முறையொன்றுக்குச் செல்வதாகவே அன்று ஜி.எல். பீரிஸ் சொன்னார். அப்படியானால் ஜி.எல்.பீரிஸ் அரசியலமைப்பு சீர்திருத்தச் சபையொன்றைக் கூட்டி மாகாண சபைகளை விடச் சிறந்த பிராந்திய முறையொன்றை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இப்போது என்ன செய்யப்போகிறார்?

வாலைக், கால்கள் இரண்டிற்கும் உள்ளே சுருட்டிக் கொண்டு ஐ.தே.க அறிமுகப்படுத்திய மாகாண சபைகளினுள் நுழையவே பொ.ஐ.மு. தயாராகிறது.

**அண்மையில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடப் போவதில்லையா?**

அன்று, இம் மாகாண சபைகளை அமைக்கவென துப்பாக்கிச் சூடு வாங்கியபடி, கழுத்தைக் கொடுத்துக் கொண்டு நாடு பூராவும் சென்றவர்கள் நாமே. அன்று சந்திரிகா இருந்ததும் எம்முடனேயே. அன்று, எம்மைச் சுட்டவர்களுக்கு உதவியதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரே தான். மாகாண சபைத் தேர்தலொன்று நடாத்தப்பட்டால் நாம் கலந்து கொள்ள முன்வருவோம். அவ்வாறு முன்வருவது கட்சிக்குத் தேவையான பிரச்சார இலாபம் பெற்றுக் கொள்ளுவது போன்ற தேவைகளுக்காகவே.

நன்றி : லக்பிம
தமிழில்: சி.செ.ராஜா ○

## பாதாள உலக உதவி !

**1992** ஒகஸ்ட் 7ம் திகதி புறக்கோட்டை ரயில் நிலையத்தின் முன், லலித் காமினி உட்பட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆர்ப்பாட்டத்தினைத் தாக்கும் நோக்கத்திற்கு சிறிசேன குரேயின் நண்பரான யு.எல் செனவிரத்னவுக்கு உதவியளித்ததாகக் குற்றச் சாட்டப்பட்ட முன்னாள் ஓ.ஐ.சி.யும் முந்நாள் ஏ.எஸ்.பி.யுமான ஏ.யு .அபேசிங்க ஜனாதிபதியின் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவின் பிரதானியாகச் செயற்படுகின்றார் எனத் தெரிய வருகிறது.

லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் ஐம்பத்தியோராவது பக்கத்தில் இவரைப்பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது. "புறக்கோட்டை ஓ.ஐ.சி. ஏ.யு. அபேசிங்க, யு.எல்.செனவிரத்னவுடன் அன்று காலை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்புவதற்கென பொலிஸ் அதிகாரிகளதும், பாதாள உலகத்தினரதும் உதவியைப் பெற்றார் என...." ஆணைக்குழு முன்னிலையில் அச் சாட்சியத்தை வழங்கிய பொலிஸ் சாரதி டி.ஜி. தயானந்தவின் சாட்சியத்தைத்தாம் உண்மை என்று ஏற்றுக் கொள்வதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏ.எஸ்.பி. ஏ.யு. அபேசிங்க அச்சாட்சியத்தை ஏற்றுக் கொள்ளாததுடன், ஆணைக்குழு தயானந்தவின் சாட்சியத்தை வேறு சாட்சியின் மூலம் உறுதிப்படுத்துகின்றதெனக் குற்றம் சாட்டியுள்ளார்.

அதேவேளை, பாதாள உலகத்தின் பிரபலஸ்தரான ரஞ்சித் பெர்ணாண்டோ ,யு.எல். செனவிரத்ன, புறக்கோட்டைப் பொலிஸில் ஓ.ஐ.சி. அபேசிங்கவுடன் பல தடவைகள் கதைத்துக் கொண்டிருந்ததைத் தாம், பல தடவைகள் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழு அறிக்கையின் ஐம்பதாவது பக்கத்தில், லலித் உள்ளிட்ட நபர்களைத் தாக்கிய குண்டர்களின் தலைவராக யு. எல். செனவிரத்ன செயற்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையின் 52வது பகுதியில் 14772 என்ற இலக்கத்தைக் கொண்ட பொலிஸ் சாரதி தயானந்தவின், மற்றும் ரஞ்சித் பெர்ணாண்டோ ஆகியோரின் சாட்சியின் படி யு.எல். செனவிரத்னவுடன் இணைந்து ஜனனாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பியது தண்டனைக்குரிய குற்றமாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அறியப்பட்ட ஏ.எஸ்.பி.- ஏ.யு.அபேசிங்க தற்போது ஜனாதிபதியின் போக்குவரத்துப் பாதுகாப்புப் பிரிவின் பிரதானியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. ○

## எனது புத்தகத்தைப் படித்த என்னிடம்...

நேற்றிரவு,
உன் புத்தகத்தைப் படித்தேனே
நான்!
அதாவது, உன்னுடைய உள்ளத்தை !
வெள்ளமாய் ஓடியதே உன் எண்ணம்.
அதில் தோணி விட்டேனே நான் !

சரிதான் அழுது நீ சொல்வது,
நாம் தவறிப் பிறந்த உலகம் தான்.
இது!
"உன் நட்பையும் வேண்டுமென்றால் பாடிக் கிழித்து விட்டு
துண்டு துண்டாய் வெடித்து அனல் காற்றில் பறக்கின்றேன்.
எந்த
அழகியின் விழிக்குள்ளும் விழுந்து கரிக்காமல்.
கரித்து நீள் விழிகள்
சிவந்து பழுக்காமல் "

என்றெல்லாம் ஓடும் உன்னுடைய வெள்ளத்தில்,
மூழ்கிக் குளித்தேனே, நான்!
தலை துவட்ட நேரமில்லை.
உனது புதுமைக்குள் நான் புதைந்து
என்னை மறந்தேன்.
இப்படியும் நீதான் சொல்லுகையில்,
அதுதான் –
"நீ என் நெஞ்சை சில நாளில் கடன் கேட்பாய்
மாலைப் பொழுதுகளில்
தனிமையிலே நீ மூழ்கி
அதன் பாடல்களைக் கேட்டு ரசிக்க!
மரங்கள் மழை விழுங்கி
பூக்கின்ற காலங்களில்
உன் கண்ணிரண்டை நான் வாங்கி என் கண்ணோடு கண்ணாக
என் முகத்தில் கோர்த்து,
பார்ப்பேனே அழகு!

நான் பார்த்தால்
நீ பார்த்த மாதிரியாய்!

என்றெல்லாம் நீ உன் நட்பொன்று பற்றி
பாடி வடித்தாயே மனம் பொங்கி!
யார், அந்த நட்பின் வேரறுத்தோன், நிறமென்ன?
அவனின்,
உடம்பெல்லாம் புள்ளியா பாம்பைப்போல் !

சோலைக்கிளி.

19.01.98

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# GST: மக்களின் கழுத்துக்கு வீசப்பட்ட சுருக்கு!

அருணன்

சந்திரிகா அரசாங்கம் வடக்கு கிழக்கில் போடுகின்ற குண்டுகள் பற்றி பலரும் அறிவோம். இப்போதெல்லாம் பல சக்தி வாய்ந்த குண்டுகளை அது வீசுவதாக யுத்த நிலவரம் பற்றிய பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் இந்தக் குண்டுகள் எல்லாவற்றையும் விட பெரிய குண்டொன்று இப்போது வீசப்பட்டிருக்கிறது. பலருக்கு இன்னமும் தெரியவில்லை. அல்லது இன்னும் அதன் வேகம் முழுதாக உறைக்கத் தொடங்கவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் கொண்டு வரப்பட்ட பண்டம் மற்றும் சேவைகளுக்கான வரிச் (Goods and Services Tax - G.S.T.) சட்டம் என்ற பெயரில் இந்தக் குண்டு பாராளுமன்றத்தில் இருந்து வீசப்பட்டது. வழமையாக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் ஏவப்படும் குண்டுகளைப் போலல்லாது, இது ஜனாதிபதியின் நிதியமைச்சின் அங்கீகாரத்துடன் வீசப்பட்டது. இக் கைக் குண்டு முதன் முதலாக வெடித்து தன் வேகத்தைக் காட்டத் தொடங்கியது ஏப்ரல் முதலாம் திகதி. இதன் விளைவுகள் எப்படி அமையப் போகின்றன என்பதை இன்னும் ஓரிரு மாதங்கள் தெளிவு படுத்தி விடும்.

பண்டம் மற்றும் சேவை வரி என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த வரியானது, முன்னைய விற்பனை புரள்வு வரி .(B.T.T.) யைப்போல வெவ்வேறு சத வீதங்களைக் கொண்டிருக்கப் போவதில்லை. மொத்த விற்பனை வரியானது 7%, முதல் 18% வரையாக ஒவ்வொரு தொழில் அல்லது வியாபாரத்தின் தன்மைக்கேற்ப வெவ்வேறு அளவுகளை கொண்டிருந்தது. ஆனால் புதிய G.S.T.யோ எல்லாவற்றிற்கும் பொதுவான 12.5% வரியை அறிவித்துள்ளது. விற்பனைப் புரள்வு வரியாக 18% வரியைக் கட்டியவர்கள் இனி 12.5% வரியே கட்ட வேண்டி வரும். அதாவது வரி குறைக்கப் பட்டுள்ளது. எனவே பொருட்களின் விலைகள் அதிகரிக்க நியாயமில்லை என்று காதுக்குள் பூ சொருக எத்தனிக்கிறது அரச இறைவரித் திணைக்களம். 8% வரி கட்டியவர்கள் இனி 12.5% கட்ட வேண்டியுள்ளதே என்று கேட்டால் அதற்கு ஒரு மழுப்பல் நியாயம் சொல்கிறார்கள்... 'ஓமோம் கொஞ்சம் விலை கூடும் தான்... ஆனால் வியாபாரம் பெருகும் போது இது தானாகவே குறைந்து விடும்.'

இந்த வரி அறிவிப்பைப் பற்றி விளக்கவென அரசு சார்பாக இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஒரு சில காரணங்களை வைத்திருக்கிறார். விலை கூடப் போவதில்லை என்று அவர் அடித்துக்கூற அந்தக் காரணங்களைக் காட்டுகிறார்.

இப்போதைய் புரள்வு வரி விதிப்பு எல்லை ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் ரூபா. ஆனால் புதிய முறைப்படி இது 18லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளளது. புத்தகங்கள், பாண், மா, பால், சீமெந்து, சீனி கருவாடு, சமையல் வாயு போன்ற பாவனைப் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கும் மேற் சொன்ன 18 லட்ச உச்ச எல்லைக்கு போகாத வரை வரிவிதிப்பு இல்லை. தவிரவும், மின்சாரத் திற்கும் வருமானம் குறைந்த பகுதியிரைக் கருத்திற் கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் வரி விதிப்பு இல்லாமல் செய்யப் பட்டிருக்கிறது... இப்படி அவர் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகிறார்.

ஆனால், இந்தக் காரணங்கள் எல்லாம் எப்போதும் விவாதத்துக் குரியவை. புரள்வு வரி எல்லை என்பது மட்டுமே விதிக்கப்படும் வரியின் அளவைத் தீர்மானிப்பதில்லை என்பதை திறைசேரியின் அறிக்கைகளைப் படித்தால் தெரியும். ஒருவர் தான் விற்பனை செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் வரிவிதிப்பைச் செய்து அதனை ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் திறைசேரிக்குச் செலுத்தியே ஆகவேண்டும் என்கிறது புதிய சட்டம். எனவே மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் எவரும் ஒரு பொருளை வாங்கும் போது அந்த வரியை செலுத்தியே வாங்க வேண்டும். அந்த மொத்த வியாபாரி அல்லது சில்லறை வியாபாரியின், வருட வியாபாரம் 18 லட்சத்தைத் தாண்டினாலும் சரி தாண்டாவிட்டாலும் சரி அவர் தான் வாங்கும் போது செலுத்திய வரியை பாவனையாளர் மீது சுமத்தவே செய்வார் என்பது வெளிப்படை. அவர் ஒரு போதும் அதை வரி தானே என்று ஒதுக்கிவிட்டு வியாபாரம் செய்யப் போவதில்லை. ஆக, விலை ஏற்றம் புரள்வு வரியின் அளவில் தங்கியிருப்பதாக முற்றுமுழுதாகக் கொள்ள முடியாது. மாறாக இந்த வரி மாற்ற சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வியாபாரிகள் விலைகளை அதிகரிக்கவே செய்வார்கள். ஏன் அரச நிறுவனங்கள் கூட இதைத் தான் செய்யும். ஒரு சின்ன உதாரணம் போதும் இதை விளக்க. 20% புரள்வு வரி அறவிடப்பட்ட ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தொலைபேசி விலைப்பட்டியல்களில் இனி 12.5% பண்டம் மற்றும் சேவை வரி அறவிடப்பட உள்ளதால், தொலைபேசிக்கான கட்டணம் குறையும் எனத் தோன்றுகிறதல்லவா. ஆனால், ரெலிகொம் தனது கட்டணத்தை ஏற்கெனவே 30%த்தால் அதிகரித்து விட்டது. ஆக கட்டண அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறதே ஒழியக் குறைந்து விடவில்லை.

வரிவிலக்கப்பட வேண்டிய பாவனைப் பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட மாட்டாது என்பது கூட சந்தேகத்துக்குரியதே. ஏனென்றால் விற்பனையாளர் மேற்குறிப்பிட்ட பாவனைப் பொருட்களை மட்டும் விற்பவராக இருப்பதில்லை. அவர் பிற பொருட்களையும் விற்கக் கூடுமாதலால் அவர்து வியாபாரத்தினால் அவரிடம் 18 லட்சத்திற்கு மேற்பட்ட தொகை வியாபாரம் புரளுமானால் அவர் வரி கட்ட வேண்டியவராவார். தமது வருமானத்தை அதிகரிக்க அவர்கள் தமது பாவனைப் பொருட்களின் விலையை அதிகரிக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. பாவனைப் பொருட்களில் கட்டற்ற போட்டியை விட பதுக்கலும் மோசடியுமே அதிகம் நடப்பதால் செயற்கையான விலையுயர்வை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. ஏற்கெனவே இந்த நிலைமை நடைமுறையில் இருக்கிறது. இப்பொதெல்லாம் ஒரு பக்கட் சீமெந்தின் விலையை ஒருவர் அதிக விலைக்கு விற்பதை கட்டுப் படுத்த எந்த வழிமுறைகளும் இல்லை. இதை அந்தந்தப் பிரதேச வியாபாரிகளே கூட்டாகச் சேர்ந்து தீர்மானித்து விடுகிறார்கள்.

இதைத் தவிர முன்னைய புரள்வு வரிமுறையில் பாதுகாப்பு வரியானது மொத்த விலைக்கே விதிக்கப் பட்டது. ஆனால் இப்போதைய முறையில் இது B.T.T.யுடன் சேர்ந்த மொத்த விலைக்கே விதிக்கப்பட உள்ளது. இதன்படி பாவனையாளர் ஒருவர் ரூபா 100 விலையுள்ள பொருளுக்கு இப்போது 12.5 % வரி இருப்பின் 100+ 12.50+ 4.50= 117/=வைச் செலுத்துகிறார். புதிய முறைப்படி 100+12.5+5.06= 117.56வை விலையாகச் செலுத்துவார்.

உள்நாட்டு கம்பியூட்டர் மென்பொருள் (Software) உற்பத்தியாளர் ஒருவர் இப்படிச் சொல்கிறார். 'இதுவரை எமக்கு 7% புரள்வு வரியும் 1% சுங்கவரியுமாக மொத்தம் 8%வரியே இருந்தது. இப்போது நாம் 12.5%யை செலுத்த வேண்டும். எனவே உள்ளூரில் தயாரிக்கப்பட்ட எமது மென்பொருள் (Software) எல்லாம் 4.5% விலையுயர்வுக்குள்ளாவதைத் தவிர்க்க முடியாது'

ஆக, விலை ஏறத்தான் போகிறது என்பதற்கு வேறென்ன சான்று தேவை? ஆனால் இதேவேளை இன்னொரு விடயத்தையும் சொல்ல வேண்டும். இந்த மென்பொருள் (Software) சந்தை அவ்வளவு போட்டியுள்ள ஒரு சந்தை அல்ல. இதற்குப்பதில் போட்டியுள்ள ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஒரு தொழிலை எடுத்தால் இப்படி விலை அதிகரிப்பதை அவர்களால் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

உண்மையில் இந்த வரியானது உள்நாட்டு உற்பத்தியாளர்களை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது. இறக்குமதி வியாபாரிக்கும் வெளிநாட்டு மூலதனக் கம்பனிகட்கும் உள்ள சலுகைகள் இந்த உள்நாட்டு உற்பத்தியாளர்கட்கு மறுக்கப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து பொருட்களை (Finished Goods) இறக்குமதி செய்வோருடன் போட்டி போட முடியாதபடிக்கு பட்ஜட் மூலம் அறிவிக்கப்பட்ட சுங்க வரித் தீர்வைக் குறைப்புக்கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஏற்கெனவே முடமாக்கியிருக்கின்றது. இந்தப் புதிய வரியானது கிட்டத்தட்ட அவர்களை அசைய முடியாமல் செய்து விட்டதென்றே சொல்ல வேண்டும். இது தொடர்பாக அண்மையில் அமைச்சர் சி.வி. குணரத்னவுடனான சந்திப்பொன்றின் போது கேள்வி எழுப்பிய போது, இலங்கையின் பிரபல உள்நாட்டு உற்பத்தியாளர்கள் ஒருவரின் பிரதிநிதிக்கு அமைச்சர் முன்னிலையில் அதிகாரியொருவர் அளித்த பதில் 'விலையைக் கூட்டுங்கள்' என்பது தான!

பாவம் அந்தப் பிரதிநிதி. சந்தையில் குவியும் இறக்குமதிப் பொருட்களின் காரணத்தாலும், வியாபாரப் போட்டியாலும் இப்போது விலையை நிர்ணயிப்பது தொழில் துறையினர் அல்ல, சந்தையே என்பதை அவருக்கு எப்படி விளக்குவது என்று புரியாமல் திகைத்துப் போய் திரும்பி விட்டார். 'போகிற போக்கில் கம்பனியை இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழியில்லைப் போல தெரிகிறது' என்கிறார் அவர். ஏற்கெனவே இப்படிப் பல கம்பனிகள் மூடப் பட்டு விட்டன. மிக அண்மைய உதாரணம் தான் தரமான குளிர் சாதனப் பெட்டிகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வந்த சிசில் நிறுவனம் இழுத்து மூடப்பட்டமையாகும். இதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

ஆக, இந்த அரசாங்கமும் அதன் இறைவரித் திணைக்களமும் சொல்லும் காரணங்கள் எல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கும், தாம் எடுத்த முடிவை நியாயப்படுத்துவதற்குமே சொல்லப்படுகின்றன என்பது தெளிவு.

ஒரு புறம் நம்நாட்டில் பாவனையாளர்களான மக்களும் மறுபுறம் உள்நாட்டுத்தொழில் துறையினருமே இந்த புதிய வரிக்குப்பிறகு அதிகமாக பாதிக்கப்படவுள்ளார்கள். ஆக, லாபம் அடைவதெல்லாம் நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்து விற்போரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் மட்டுமே. உண்மையில் சர்வதேச நாணயநிதியத்தின் கண்டிப்பான கோரிக்கைக்கு இணங்கவே இந்த வரி இங்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் யாருடைய நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று சொல்லத் தேவையில்லை. அது இவ்வரியை 17%மாக விதிக்கும்படி அரசாங்கத்துக்கு வலியுறுத்தியது. ஆயினும் அரசாங்கம் இதனால் ஏற்படப் போகும் அரசியல் நெருக்கடிகளுக்குப் பயந்து தற்போதைக்கு 12.5%மாக அதிகரிக்க உடன்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ்வரியை அறிமுகப்படுத்த ஒப்புக் கொண்டது உலக வங்கிக்கும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் பெரிய வெற்றியாகும்.

மொத்தத்தில் விற்பனைப் புரள்வு வரியை நீக்கி புதிய பண்ட மற்றும் சேவைகள் வரியை் அறிமுகப் படுத்தியதன் மூலம் அரசாங்கம் தனது அந்நிய விசுவாசத்தை மெய்ப்பித்துள்ளதுடன் தனது சொந்த மக்கள் மீதும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மீதும் பயங்கரமான தாக்குதலைத் தொடுத்துள்ளது.


ஆக, இக்குண்டு விரைவிலேயே நாடு பூராவும் பலத்த அனர்த்தங்களை ஏற்படுத்தப் போகிறது. கம்பனி மூடுவிழாக்கள், வேலையின்மை, சமூக அமைதியின்மை என்று பல வடிவங்களில் இது உருவாகப் போகிறது. வடக்கு கிழக்கு நிலையை நாடு பூராவும் உருவாக்க அதன் பின் நீண்ட நாள் எடுக்காது. ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஐ.தே.க : குண்டுச் சட்டியுள் குதிரையோட்டம்!

மேர்ஜ் தலைவர் சார்ள்ஸ் அபேசேகர

யுக்திய 98.03.22

மத்திய அரசின் அதிகாரம் நாட்டினுள் வாழும் அனைத்து இனங்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளப்படும் விதத்திலான தீர்வுத் திட்டமொன்று ஐக்கிய தேசியக் கட்சியால் இதற்கு முன்பு முன்வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் அரசின் முக்கிய நிறுவனங்களைக் கட்சி அரசியலிலிருந்தும், அவற்றின் தலையீடுகள் இல்லாது கொண்டு நடாத்துவதற்காகவும் தயாரிக்கப்பட்ட யோசனைகளும் அதில் அடங்கியிருந்தன. இவ் யோசனைகளின் நோக்கமானது பொலிஸ், மற்றும் தேர்தல்களை நடத்துவதற்குப் பொறுப்பான நிறுவனங்கள் ஆகியனவற்றுக்குச் சுயாதீனமாகத் தொழிற்பட இடமளிப்பதேயாகும். இப் பல்வேறுபட்ட நிறுவனங்களின் அமைவு, செயற்பாடு ஆகியன தொடர்பாகக் குறைபாடுகள் இருந்தாலும் எண்ணக்கரு என்ற வகையில் இவ் யோசனைகள் முக்கியமானதெனவும், வரவேற்கப்பட்ட வேண்டுமெனவும் இதற்கு முன்பு எழுதப்பட்ட பத்தியில் நான் தெளிவுறுத்தியிருந்தேன்.

ஐ.தே.க. தனது தீர்வுத் திட்டத்தில் இன்னொரு பகுதியையும் முன்வைத்துள்ளது. அதில் மத்திய அரசுக்கும், பிராந்தியங்களுக்குமிடையே அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் விதம் இவ் யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் யோசனை விபரீதம் மிகுந்ததொன்றாகும். அவற்றைப் படித்துப் பார்க்கும் போது ஐ.தே.க. நம் முன் உள்ள பிரச்சினையை விளங்கிக் கொண்டுள்ளதா? என்ற சந்தேகம் கூட ஒருவருக்கு எழக்கூடும்.

இவ் யோசனை இலங்கையர் என்ற ஆளடையாளம் என்ற தலைப்பின் கீழ் வரும் பகுதியிலிருந்தே ஆரம்பிக்கிறது. இலங்கையினுள் பல்வேறு இனத்தவர்கள் சகவாழ்வுடன் இதுவரை காலமும் சுமுகமாக வாழ்ந்து வந்ததாகவும், அதுவே புதிய அரசியலமைப்புத் திட்டமொன்றின் குறிக்கோளாகவும் இருக்க வேண்டியது என்பதும் அச் சொற்களினூடாகத் தெளிவாகிறது. இது மிகவும் தவறான முடிவாகும். யதார்த்தத்தை முழுமையாகவே நிராகரிப்பதாகும்.

பல்வேறு இனத்தவர்கள் சக வாழ்வொன்றை அனுபவிப்பார்களேயானால், இலங்கையர் என்ற ஆளடையாளத்தை அனைத்துப் பிரஜைகளும் ஏற்றுக்கொள்வார்களேயானால், அப்போது எம் முன்னால் நெருக்கடியொன்று இருக்காது போராட்டங்களும் இல்லை.

அதிகாரத்தைப் பகிர்வது பற்றி யோசிக்கக் கூடத்தேவை ஏற்படாது. பல்வேறு இனக் குழுக்களிடையே சகவாழ்வு ஒன்று இல்லாததனாலேயே அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது எம் முன் இருக்கும் கட்டாய பணியாகியுள்ளது. தனி நாடொன்றுக்கான ஆயுதப்போராட்டமொன்று ஏற்பட்டதும், இலங்கையர் என்ற ஆளடையாளத்தை ஏற்றுக்கொள்ளாத இனக் குழுக்கள் உள்ளதனாலேயே ஆகும்.

யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளாத அல்லது அரசியல் தேவைகள் காரணமாக அதனைத் தெரிவிக்கத் தயக்கம் காட்டும் ஐ.தே.க. அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக முன்வைத்துள்ள யோசனைகளை இன்றைய நிலைமைகளின் கீழ் கருத்திலெடுக்கும்போது அது வேடிக்கையானதே, அதேநேரம் துக்ககரமானதும் ஆகும். இப்போது அமுலில் உள்ள 13வது திருத்தச் சட்டத்திலிருந்தும், மங்கள முனசிங்ஹ பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகளிலிருந்தும் பின்னோக்கிப் போகமாட்டோம் எனக் கூறிய ஐ.தே.க., வட கிழக்குக்கு, ஏனைய மாகாணங்களை விட அதிகாரங்கள் அளிக்கும் சமனற்ற முறையொன்றைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறிய ஐ.தே.க., அதிகாரப் பகிர்வைத் தீர்வு என்ற முறையில் பலப்படுத்தும் தீர்வுத்திட்டமன்றி அதனைப் பலவீனப்படுத்தும் தீர்வுத் திட்டமொன்றையே இன்று முன்வைத்துள்ளது. இது தீர்வு என்ற முறையில் அதிகாரப் பகிர்வை நிராகரிக்கும் தீர்வுத் திட்டமாகும்.

அதிகாரப் பகிர்வு நிஜமாகவே பலப்பட வேண்டுமானால் அதிகாரம் கையளிக்கப்படும் பிராந்திய நிறுவனங்கள், மாகாண சபை என்ற பெயரிலோ அல்லது வேறு பெயரிலோ நீடித்து நிலைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவற்றின் அதிகாரங்களினுள் எவரும் தலையிட மத்திய அரசுக்கு உள்ள வாய்ப்பு மிகவும் மட்டுப் படுத்தப்பட்டதாகவே இருக்க வேண்டும். பிராந்தியங்களின் செயற்பாடுகளினூடாக முழு நாடுமே அச்சுறுத்தலுக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் மட்டுமே அவற்றைக் கலைக்க முடியுமானதாக இருக்க வேண்டும். ஆனாலும் ஐ.தே.கவின் தீர்வுத் திட்டம் பிராந்திய நிறுவனங்கள் நீடித்து நிலைப்பதை மிகவும் பரிகாசத்துக்குள்ளாக்குகிறது. பாராளுமன்றத்தின் சாதாரண வாக்கெடுப்பொன்றினால் மாகாண சபையொன்றைக் கலைக்க முடியும். அதாவது அதிகாரத்தில் உள்ள அரசாங்கங்களுக்கு எந்நேரமும் நினைத்தபடி மாகாண சபையொன்றைக் கலைக்க முடியும். இதற்கிணங்க அதிகாரப்பகிர்வு அரசியலமைப்பினால் பலப்படுத்தப்பட்ட, நீடித்து நிலைக்கக்கூடிய அடிப்படையொன்றைக் கொண்டதொன்றல்ல. அது கட்சி அரசியலின் தேவைகளுக்குட்படுகிறது. நிலவும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கோ அல்லது சமரசம் செய்வதற்கோ ஐ.தே.கவின் யோசனைகள் எவ்விதத்திலும் போதுமானதல்ல.


வட-கிழக்குக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் எண்ணக் கருவும் இவ் யோசனைகளினுள் உள்ளடக்கப்படவில்லை. இங்கே குறிப்பிடப்படும் விதத்தில் அனைத்து மாகாணங்களுக்கும் நியாயமான அதிகாரப் பட்டியலொன்று உள்ளன. அதற்குப் புறம்பாக இன்னொரு விருப்புக்குரிய பட்டியலும் உள்ளது. அவ் விருப்புக்குரிய பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பாவிப்பதும் மாகாண சபையொன்றின் விருப்புக்கேற்றவாறேயாகும். அப் பட்டியலின் அதிகாரங்கள் அனைத்தையுமோ அல்லது சிலவற்றையோ மாகாண சபையொன்று பாவிக்கத் தீர்மானிக்கிறது. இன்னொரு மாகாண சபையொன்று அவற்றைப் பாவிக்காது இருக்கத் தீர்மானிக்கும். சமனற்ற அதிகாரத்தைப் பகிர்வதை ஐ.தே.க. இவ்வாறே விளங்கிக்கொண்டுள்ளது. இத் தெளிவும் யதார்த்தத்தை மறுதலித்தலேயாகும்.

இவ்வாறு எல்லா விதத்திலும் விமர்சிக்கும் போது, ஐ.தே.கவின் யோசனைகள், அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை முன்கொண்டு செல்லாது, அதனை அகற்ற எடுக்கப்பட்ட முயற்சியாகவே இதனைக் கருத வேண்டிய நிலை எமக்கு ஏற்படும்.

○

*தமிழில் :*
*சி.செ. ராஜா*

---





# ALWAYS BREAK DOWN

டி.என்.எல் எனப்படும் டெலிஷான் தொலைக்காட்சிச் சேவையில் 'ஓல்வேஸ் ப்றேக்டவ்ன் (Always Break-down) என்றொரு நிகழ்ச்சியொன்று பிரதி வெள்ளிக் கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் முறையே பி.ப.8.05மணிக்கும், பி.ப. 1.30 மணிக்கும் இடம்பெற்று வருகிறது.

1997 உள்ளூராட்சி சபைத்தேர்தல் காலகட்டத்தில் நாட்டில் நிலவிய அரசியல் சூட்டோடு களமிறங்கிய இந்நிகழ்ச்சி இதுவரை 54 வாரங்களாகத் தொடர்ந்து ஒளிபரப்பாகி ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையினுள் பொம்மலாட்டக் கலை தொடர்பான தொழிநுட்பம் நலிவுற்ற நிலையில் இருந்தாலும், உள்ள குறைந்த வளங்களையும், அறிவையும் பாவித்து நிகழ்ச்சியைக் கொண்டு நடத்துவதில் அதன் தயாரிப்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளதுடன் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்தபடியே முன்பு பெற்றுக் கொண்ட பிரபலத்துவத்தை அதே போல் தக்கவைப்பதிலும் இந்நிகழ்ச்சி வெற்றிபெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

தொலைக்காட்சி ரசிகர்கள் மத்தியில் அண்மையில் எடுக்கப்பட்ட கணிப்பீடொன்றின்படி பெரும்பான்மை ரசிகர்களின் முதன்மைத் தெரிவாக இந்நிகழ்ச்சி அமைந்திருப்பதைக் காணக் கூடியதாகவிருந்தது. பொது மக்களின் பாராட்டைப்போலவே கல்வீச்சுகளும் எவ்விதத்திலும் குறைவானதாக வில்லை. பெரும்பாலும் அவ்வாரத்தில் நாட்டில் நடைபெறும் முக்கிய அரசியல் நிகழ்வுகளைத் தழுவியே நிகழ்ச்சி அமைவதும், ஓரளவாவது நடுநிலை பேணுவதுடன் அரசாங்கத் தலைவர்களைப்போலவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹ உட்பட எதிரணித் தலைவர்களையும் கிண்டலடித்தும் (டீ.என். எல். எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹவின் சகோதரரான ஷான் விக்கிரமசிங்ஹவுக்குச் சொந்தமானதாகும்.) அதே தலைவர்களை வேறு பெயர்களால் உருவமைத்து நிகழ்ச்சியில் நடமாடவிட்டிருப்பதும் சிறப்பம்சங்களாகும்.

இந்நிகழ்ச்சி மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் எனப் பலர் எதிர்வு கூறியிருந்தாலும், இதுவரை அவ்வாறு அரசியல்வாதிகளோ, எவரோ அச்சுறுத்தல் ஏதும் விடுக்காமையும் அவர்களில் சிலர் அதனை விரும்புவதாகப் பத்திரிகைகளில் கூடப்பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தினுள்ளும் இது ஜனரஞ்சகமான விடயமாக மாறியுள்ளதுடன், சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சியின் சில பகுதி உரையாடல்களைக் கூடப் பாராளுமன்றக் கூட்டங்களில் பாவித்துள்ளதாக ஹன்சாட் அறிக்கை சாட்சி பகர்கிறது.

இலங்கையின் எல்லாக் கலை வடிவங்களுக்கும் உள்ள பேரினவாத ''காய்ச்சல்'' இந்நிகழ்ச்சியையும் விட்டு வைக்காதது குறைபாடே.

இந்நிகழ்ச்சி டீ.என்.எல். இன் செய்திப் பணிப்பாளர் இஷினி விக்கிரமசிங்ஹ பெரேராவின் கருத்துப் படிவமான இதன் நெறியாளர் சத்தாமங்கல சூரியபண்டா.

இசை - சரத் குலாங்க, எழுத்துரு - ஹரித் குணவர்தன, தொகுப்பு - நாலக்க தயாநாத்.

**பொம்மைப் பாத்திரங்களுக்குக் குரல் கொடுப்போர்:-** நாமல் சூரியபண்டார, ஜகத் முத்துகுமாரண, சரத் சந்திரசிரி, ஹிலேறியன் பெரேரா, காமினி அம்பலன்கொட, சரத் குலதுங்க, அன்டன் ஜுட் கோமஸ்.

**பொம்மலாட்ட நெறியாள்கை:-** தம்மிக்க கல்யாணப்பிரிய, நலின் துஷார, நந்தன தீப்திகுமார, விஷால் குரே, கங்கானம்கே.

**ஒளிப்பதிவு:-** சந்திரபால அல்விஸ், தினேஷ் தர்மவர்தன, இரோஷ் லியனகே.

**கலை இயக்குனர்கள்:-** ஆரியதாச சில்வா, சோமசிறி வலல்லாவிட்ட.

**ஒலி/ஒளிப்பாதிவாளர்:-** பாரத குணதிலக்க.

**ஒளியமைப்பு:-** நிஹால் பெரேரா, சாமிந்த சிரிலால்.

**தயாரிப்பு நிர்வாகி:-** சமன் விக்ரமரத்ன.

○ சி. செ. ராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**தபால், தொலைத் தொடர்பு, தொடர்புசாதனத்துறை அமைச்சரும், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான பேச்சாளரும், சுது நெலும் இயக்கத்தின் தலைவருமான மங்கள சமரவீரவுடனான பிரேத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது. சமீபத்தில் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் விதிகளோடு சேர்த்து கொண்டு வரப்பட்ட கருத்துச் சுதந்திர மட்டுப்படுத்தல் குறித்த நேர்காணல் ஒன்றை ஏற்பாடு செய்வதற்காக அவருடன் தொடர்பு கொண்ட போது அவர் வழங்கிய அரை மணி நேரத்திற்குள்ளேயே இது பெறப்பட்டது.**

# புதிய தடைகளை மீறுவதற்கு அரசாங்கத்துக்கு உரிமை உண்டு, தொடர்பு சாதனங்களுக்கு இல்லை

## என்கிறார் மங்கள

**நேர்காணல் : என் சரவணன்**



***புலிகள் இயக்கத்தை தடை செய்வது குறித்து அரசாங்கத்தின் புதிய விதிகள் கருத்துவெளியிடும், கருத்து அறியும் சுதந்திரங்களைப் பறித்து-விட்டதாக உணரப்படுகிறது. இந்தப் புதிய விதிகள் புலிகளை விட ஏனையோரை அதிகளவு பாதிக்கிறது என்றே கொள்ள முடிகிறது எனக் கூறினால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?***

புலிகள் குறித்து செய்தியிடுவதில் கணிசமானளவு தணிக்கை ஏற்படும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்தத் தணிக்கை, புலித்தடை என்பது குறித்து பேசுகின்ற வேளையில் அதற்கான பின்னணிக் காரணங்களையும் நாம் உணர வேண்டும். ஆரம்பத்திலிருந்தே புலிகளைத் தடைசெய்யக் கோரும் யோசனைகள் பலர் மத்தியிலிருந்து எழுப்பப்பட்டாலும் கூட, நாங்கள் அதனைச் செய்யாததற்கான காரணம் நல்ல பிரதிபலிப்புகள் வருவதற்கான வாய்ப்புகளைத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே. ஆனால் இறுதியில் தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு வரை நடத்தப்பட்டதன் பின்னர் புலிக்ள் இயக்கமானது அப்படியான பிரதிபலிப்புகளை வெளிப்படுத்த தாம் எப்போதும் தயாராக இல்லை என்பதையும் தமது மிலேச்ச நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தப் போவதை உறுதியாகவே நாட்டுக்கும், உலகுக்கும் உணர்த்தியது. எனவே தான் இந்தத் தடையை மேலும் காலம் தாழ்த்துவதற்கான வாய்ப்பை அரசாங்கம் இழந்த நிலையில் தடையைப் பிறப்பித்தது.

இந்தத் தடையோடு சேர்த்து புலிகளை ஆதாரப் படுத்தப்பட்ட செய்திகளை வெளியிடுவதிலும் சில தணிக்கை முறைகளை தொடர்பூடகங்கள் அனுபவிக்க நேரிட்டுள்ளது தான். அதற்காக நாங்கள் வருந்துகிறோம். ஆனால் இந்தத் தணிக்கையை கொண்டு வராவிட்டால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு எங்களால் முகம்கொடுக்க முடியாது.

***பத்திரிகையாளர்கள் என்கின்ற ரீதியில் மக்களுக்கு உண்மையைத் தெரிவிப்பதற்கும் பக்கச் சார்பற்ற செய்திகளை வெளியிடுவதற்கும், எமக்கு இருந்த சந்தர்ப்பங்களும் கூட இந்த விதிகளுடாகப் பறிக்கப்பட்டு விட்டதாகவே உணர முடிகிறது?***

செய்தியிடலின் போது வெவ்வேறான கருத்துக்களைப் பிரசுரம் செய்வது மட்டுப்படுத்தப்படாது. ஆனால் புலிகள் இயக்கத்தின் அதே செய்திகளை அப்படியே வெளியிடுவதில் குறிப்பிட்ட மட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியேற்படும். அதே வேளை இதன் மறுபக்கத்தைப் பார்த்தால், புலிகள் இயக்கத்தின் செய்தியொன்றைக் கொண்டு எப்படி சமப்படுத்த முடியும் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது மேலும், மேலும் தன்னை நடுநிலையாக்க முடியாத, சமப்படுத்த முடியாத, நம்பகத் தன்மையை ஏற்படுத்த முடியாத ஒன்று என்பதை உறுதியாக நம்பவைத்துள்ளது. செய்திகளை சமப்படுத்துவதாயிருந்தால், அது புலிகள் அமைப்பின் செய்தியால் தான் செய்ய வேண்டுமென்பதில்லை. தமிழ் மக்களின் கருத்துக்களாலும் அதனைச் செய்ய முடியும். புலிகள் அமைப்பு சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளியிட எந்தத் தடையும் இல்லை.

***ஆனால் புலிகளின் செய்திகளை ஆதாரப்படுத்தி செய்தி வெளியிட முடியாது என்று தடை விதிக்கின்ற அரசாங்கத்தாலேயே அவ்விதி மீறப்படுகின்றதல்லவா? குறிப்பாக பாதுகாப்பு நிலவரம் குறித்த பத்திரிகையாளர் மாநாடுகளின் போது, 'புலிகளின் செய்தியை இடைமறித்து கேட்டபோது' என்று படை அதிகாரிகளால் புலிகளை ஆதாரப்படுத்தப்படுத்தி செய்தி வெளியிடுவதனுடாக அரசாங்கமே சட்டத்தை மீறுகிறதல்லவா?***

யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கம் இப்படி நடந்து கொள்வதில் தவறொன்றும் இல்லை. நாங்கள் சாதாரண நிலைமை குறித்துப் பேசவில்லை. நடைமுறையிலுள்ள யுத்த சூழ்நிலையின் மத்தியிலேயே பேசுகிறோம். அரசாங்கம் என்கின்ற ரீதியில் பிரச்சார வெற்றிகளுக்காக இப்படியான விடயங்களைக் கையாள்வது அரசாங்கத்துக்குள்ள உரிமை. ஆனால் வேறு நிறுவனங்களுக்கு இந்த உரிமைகளை வழங்குவது சிக்கல்களை ஏற்படுத்திவிடும்.

***புலிகளின் செய்திகளைக் கொண்டு எவ்வாறு செய்திகளை நடுநிலைப்படுத்த முடியும் என்று நீங்கள் கேட்டாலும் கூட ஒரு கருத்தை வெளியிடும்-அறியும் உரிமைக்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவமென்ன? புலிகளின் செய்திகள் நம்பகத் தன்மையற்றவை என்றால், அரசின் செய்திகளை மக்கள் நம்புகிறார்கள் என்று நம்புகிறீர்களா?***

அரசாங்கத்தின் செய்தியில் கூட மக்கள் கொண்டுள்ள சந்தேகத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் சமாதானத்துக்கான அதிகளவு முயற்சிகளை மேற்கொண்ட அரசாங்கம் என்ற வகையில், புலிகளால் யுத்தத்துக்கு வலிந்து தள்ளப்பட்ட அரசாங்கம் என்ற வகையில், யுத்தத்தின் மத்தியில் எமது கருத்துக்களுக்கு உறுதியளிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சில வேளை இதனைப் பிழையாகக் கருத இடமிருந்தாலும் யுத்தத்தின் போது பிரச்சாரப்பக்கத்தில் வெற்றி கொள்ள - விரும்பாவிட்டாலும்- நேரிட்டுள்ளது.

***ஆனால் இந்தப் பிரச்சாரப்படுத்தல் பத்திரிகைகளின் நடுநிலைக்கு குந்தகம் விளைவிப்பதாகவும், அரச தொடர்பு சாதனங்களைப் போலவே ஏனையவற்றை இயங்கச் செய்வதாகவுமல்லவா இருக்கிறது?***

இல்லை, நான் முன்னர் கூறியது போலவே, புலிகளின் செய்திகளை நம்பகமாகக் கொண்டு நடுநிலைமையாக நடந்து கொள்ள முடியாது என்றே நான் கருதுகின்றேன். எமது அரசாங்கம் யுத்தத்துக்கு முதன்மை வழங்கவில்லை. அரசாங்கம் தேர்தலின் போது கூறியது போலவே பதவிக்கு வந்த சிறிது காலத்துக்குள்ளேயே நேரடியாக பிரபாகரனுக்கு கடிதம் எழுதி புலிகளுடன் நேர்மையாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. அது மட்டுமன்றி அப்பேச்சுவார்த்தையை நல்ல முறையில் நடத்துவதற்காக சகல அமைச்சுக்களுக்கும் ஒரு வேலைத் திட்டம் போடப்பட்டது. அதில் பிரபாகரனினதும் புலிகளதும் கட்டுப்பாட்டில் எதிர்கால வட கிழக்கு புனரமைப்பு. அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒவ்வொரு அமைச்சினதும் செயற்திட்டங்கள் குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. அப்போது தபால், தொலைத் தொடர்பு அமைச்சராக இருந்த நானும் எனது அமைச்சின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய அதிவேக அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அவற்றிற்கு ஏற்படும் செலவுகள், எதிர்நோக்கப்படும் சிக்கல்கள் அவற்றைக் கையாள்வதற்கான வழிவகைகள் என்பன பற்றிய அறிக்கையை சமர்ப்பித்திருந்தேன். ஒவ்வொரு அமைச்சினதும் மொத்தமான நூல் வடிவிலமைந்த திட்டங்கள் கையளிக்கப் பட்டிருந்தன. இந்த அபிவிருத்திக்கு அப்பால் அரசியல் தீர்வுகளை நோக்கி, அதிகாரப் பரவலாக்க யோசனைகளையும் ஆராயத் தொடங்கியது. அபிவிருத்தி குறித்து நீங்கள் அக்கறைப்படுமளவுக்கு அரசியல் தீர்வு குறித்தும் ஆராயுமாறு நாங்கள் புலிகளிடம் கேட்டோம். பேரினவாதிகள் அண்மையில் ஜனாதிபதி டைம்ஸ் சஞ்சிகைக்கு வழங்கியிருந்த பேட்டி குறித்து எழுப்பிய பிரச்சினை உங்களுக்கு நினைவு இருக்கலாம். அவர்கள் ஜனநாயக வழிக்கு வந்தால் அவர்களின் அரசியல் பின்னணியை உறுதி செய்வதற்காக ஐந்துக்கும் பத்துக்கும் இடைப்பட்டக் வருட காலத்துக்கு குறிப்பிட்ட நிர்வாக அதிகாரம் வழங்குவது குறித்து பேசவும் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தோம். அவ்வளவு தூரம் கடந்தும் கூட சில மாதங்கள் கழிவதற்குள், 1995 ஏப்ரல் 19ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தில் தரித்திருந்த கப்பல்களின் மீது புலிகள் நடத்திய தாக்குதலின் மூலம் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்தத்தை முறித்து யுத்தத்தை தொடக்கினார்கள். எனவே எங்களுக்கும் யுத்தத்தை தொடர்வதைத் தவிர வேறு மார்க்கங்கள் இருக்கவில்லை. அப்படி யுத்தத்தை ஆரம்பிக்காது விட்டால் நாட்டு மக்கள் எங்களைச் சபிப்பார்கள். யுத்தத்தில் எங்களுக்குப் பூரண நம்பிக்கையில்லை. எனவே தான் இந்த நிலையிலும் சுது நெலும் இயக்கம் உட்பட பல்வேறு வெகுஜன இயக்கங்களினூடாக சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்துக்கு எதிரான பிரச்சார நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறோம். புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்று நாங்கள் இன்று கூற முடிந்துள்ளது. சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இன்று தென்னிலங்கையில் தங்களது சொந்த செலவில் தங்களது காலத்தை, வளத்தை செலவழித்து சிங்கள இனவாதத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். புலிகள் போன்ற இயக்கங்கள் தோன்றுவதற்கான வரலாற்று நியாயங்களைக் கூட அவர்களிடம் விளக்கி வருகிறார்கள். இந்தப் பிரச்சாரத்தின் காரணமாகத் தான் புலிகள் இன்னொரு கலவரத்தை உண்டு பண்ணவென நடத்திய தலதா மாளிகைக் குண்டு வெடிப்பின் போது கூட சிங்கள மக்கள் கலவரத்தில் ஈடுபடவில்லை. அதே வேளை தமிழ் மக்களிடமிருந்து புலிகளைத் தனிமைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் செய்து வருகிறோம். யாழ்ப்பாணத்தில் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறோம். எனது துறையை மட்டும் கூறுவதாயிருந்தால் முன்னர் ஒரு தொலைபேசிக்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கண்டிக்கும் வரவேண்டியிருந்தது. இன்று ஐ.டி.டி. வசதிகள் வரை அவர்கள் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக் கொள்ளும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. எனவே சிவில் சமூகத்தை மீளவும் நிறுவுகின்ற வகையில் நாங்கள் செயற்பட்டு வருகிறோம். ஆனால் பிரச்சினை தீர்வதற்கு அது போதுமானதல்ல என்பதை நாங்கள் அறிவோம். இன்று ஐ.தே.க. தமது யோசனைகளைத் தெரிவிக்கிறதோ இல்லையோ நாங்கள் எப்படியும் இந்த வருடத்துக்குள் நடைமுறைப்படுத்தியே தீருவோம். இதன் மூலம் பயங்கரவாத புலிகள் இயக்கம் தனிமைப்படும். அதன் பின்னர் ஏனையவற்றைப் பார்க்கலாம்.

***புலிகள் இயக்கத்தை யுத்தத்தின் மூலம் தோல்வியடையச் செய்து விடலாம் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?***

இல்லை! புலிகள் இயக்கத்தை தோல்வியடையச் செய்ய முடியாவிட்டாலும் அதனைப் பலவீனப் படுத்த முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. உலகில் எந்தவொரு பயங்கரவாத இயக்கத்தையும் முழுமையாக தோற்கடித்ததில்லை. ஆனால் புலிகள் புவியியல் நிலப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை இல்லாது செய்ய முடியும். ஆனால் அதன் பிறகு பிரித்தானியாவில் ஐ.ஆர்.ஏ போன்ற இயக்கங்களின் நிலைக்கு அது வரக்கூடும். புலிகளின் கெரில்லாப் பாணியிலான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்திவிட முடியாது. ஒவ்வொரு முறையும் புலிகள் இயக்கம் தாம் பலவீனப்பட்டிருக்கும் நிலையில் தான் பேச்சுவார்த்தைகளுக்கு வந்திருக்கிறது. எதிர்காலத்திலும் அப்படித்தான் ஏற்படலாம். ஆனால் அப்படியான சந்தர்ப்பங்களில் புலிகளை அரசியல் தீர்வை நோக்கித் தள்ளும் பொறுப்பு தமிழ் மக்களுடையது.

***ஆனால் தமிழ் மக்களை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம் ஏதும் அரசாங்கத்திடம் உண்டா? குறிப்பாக, இன்றைய அரசியல் யோசனைகள் கூட தென்னிலங்கை மக்களுக்கு அதுபற்றி தெரிந்தளவுக்கு வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாதே. எந்த மக்களுக்கு தீர்வு தேவைப் பட்டிருக்கிறதோ அவர்களின் கருத்தறிய, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?***

அது உண்மை. அந்த பிரச்சாரப் பக்கத்தில் எமது தரப்பில் உள்ள பலவினத்தை உணர்கிறோம். ஆனால் இன்றும் கூட எங்களால் முடிந்தளவு அந்தக் கடமையை பல்வேறு வழிகளினூடாக நாங்கள் செய்து வருகிறோம். நாளை கூட இது வரை கொழும்பு தெரியாத பல்கலைக்கழக மாணவர்களின் குழுவொன்று கொழும்பு வரவிருக்கிறது. இதற்கு முன்னரும் இப்படியாக வடக்கு மாணவர்களை அழைத்து வந்திருக்கிறோம். ஆனால் அவை போதுமானதல்ல.

***இன்றைய அரசியல் தீர்வு யோசனைகள் ஒருதலைப்பட்சமாகவே முன்வைக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் புலிகள் இயக்கமும் பல தடவைகள் கூறியிருந்த ஒன்று தான், அரசாங்கத்தோடு இருக்கும் தமிழ்க் கட்சிகள் கூட ஏற்காத ஒரு யோசனையை நாங்கள் பரிசீலிப்பது என்பது வேடிக்கையானது என்பது. அப்படியிருக்க இது எவ்வளவுக்கு சாத்தியமாகக் கூடியது?***

இல்லையே, இன்று தெரிவுக்குழுவில் இருக்கின்ற சகல தமிழ்க் கட்சிகளும் உடன்படுகின்றன. அவர்களின் ஒத்துழைப்பு எமக்கு இருக்கிறது. முடிந்தளவு உடனடியாக இதனை நடைமுறைப் படுத்தும்படி தான் அவர்கள் எம்மிடம் கோரிவருகிறார்கள். ஏன் தாமதிக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். மேலும் நாங்கள் இன்னொன்றையும் கருத்திற் கொள்ள வேண்டும். உலகில் எந்தவொரு நாட்டிலும் சகலரும் இணங்கிய ஒரு அரசியல் திட்டத்தை கொண்டுவந்ததாகச் சரித்திரமில்லை. இன்று வரை பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளது. ஆனால் நாங்கள் நேர்மையுடன் கூறுகிறோம். எமக்கு முடிந்த தீர்வை நாங்கள் முன்வைத்துள்ளோம். இதனை விட வேறு மார்க்கங்கள் இருந்தால் கூறட்டும். தமிழ் மக்களை மீண்டுமொருமுறை ஏமாற்றிவிட நாங்கள் தயாராக இல்லை.

***ஆனால் தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்தோடு இது குறித்துப் பேசுவதும் வெளியில் விடும் அறிக்கையும் வெவ்வேறானவையாக இருக்கிறதே? தீர்வு யோசனையில் உள்ள பிராந்திய அதிகாரம் தொடக்கம் அதில் உள்ள பௌத்தமத முன்னுரிமை வரை பல விடயங்களை அவை எதிர்க்கின்றனவே?***

நாங்கள் இலங்கை சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற நாடு என்பதை ஒரு விளங்கிக்கொள்ள வேண்டும். அதே வேளை அந்த சிங்கள பௌத்தர்களல்லாதவர்களை ஒடுக்கி வாழும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. பெரும்பான்மை மக்களின் அங்கீகாரமுமின்றி இந்த அதிகாரங்களைப் பகிர்ந்துவிட முடியாது. இதன் காரணமாகத் தான் இதற்கான பிரச்சாரங்களையும் தமிழ் மக்களை விட சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்கின்றோம்.

***ஐ.தே.க.வின் ஒத்துழைப்பின்றி இந்த யோசனையை நடைமுறைப்படுத்த முடியும் என்று நினைக்கிறீர்களா?***

அவர்களும் இதனை ஏற்றுக் கொண்டால் மிகவும் சட்டரீதியில் இலகுவாக முடிந்துவிடும். ஆனால் இது வாழ்வுக்கும் சாவுக்குமிடையிலான பிரச்சினை, இது இந்த நாட்டின் எதிர்காலம் குறித்த பிரச்சினை. இது இந்த நாட்டினது இளைஞர் தரப்புகளிரண்டு ஒருவரையொருவர் கொன்றொழிக்கின்ற பிரச்சினை. எனவே இந்தப் பிரச்சினை

→ 20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






PHOTO : ARJAN LALITHPEIRIES

## ஐம்பதாண்டுக் கல்வி :

# அதன் மறுபக்கம் !

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

இறுதிப்பகுதி

கடந்த 50ஆண்டு காலப்பகுதியில், இக்கால அளவுடன் விகிதாசாரமற்ற முறையில் பல சந்தர்ப்பங்களில் கல்வி முறையின் பொருத்தமின்மையும், குறைபாடுகளும் இனங்காணப்பட்டுப் புதிய சீர்திருத்தங்கள் முன் வைக்கப் பட்டன. 1943இன் கன்னங்கரா குழுவின் அறிக்கையின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த முயற்சிகள் பலவாகும்.

- 1961இன் தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆலோசனைகள்.
- 1964 தேசிய கல்வி முறைக்கான அரசின் ஆலோசனைகள்.
- 1966இல் ஐ.தே.கட்சியின் கல்விச் சட்ட வரைவு.
- 1972இன் கல்விச் சீர்த்திருத்தங்கள்
- 1981இன் கல்வி வெள்ளை அறிக்கை
- 1996 இன் தேசியக் கல்வி ஆணைக்குழுவின் ஆலோசனைகள்.

இவ்வாறு உயர்கல்விச் சீர்த்திருத்தங்களுக்கு மற்றொரு பட்டியல் உண்டு:

- 1942இன் இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டம்
- 1966இன் உயர்கல்விச் சட்டம் (தேசிய உயர்கல்விப் பேரவையும் கனிஷ்ட பல்கலைக்கழக அமைப்பும் உருவாக்கப்பட்டன.)
- 1972இல் புதிய உயர்கல்விச் சட்டம் (இதன்படி 1966இன் ஏற்பாடுகள் கைவிடப்பட்டு தனிப் பல்லைக்கழக அமைப்பு உருவாயிற்று.)
- 1978இன் உயர் கல்விச் சட்டப்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தனித்தனிப் பல்கலைக்கழகங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. 1978இன் பின்னர் இச்சட்டம் திருத்தங்களுக்குள்ளானது.

இவ்வாறான பல்வகைப்பட்ட சீர்திருத்த முயற்சிகள், கல்விமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய பொதுக் கருத்து இல்லாமல் போனதையே குறிக்கின்றது.

அடிக்கடி ஏற்பட்ட அரசாங்க மாற்றங்களின் காரணமாகக் கல்விக்கொள்கையும் தொடர்ச்சியற்று அடிக்கடி மாற்றங்களுக்குள்ளானது. கட்சி அரசியல் வேறுபாடுகள் காரணமாக எந்த அரசும் எதிர்ப்பின்றி கல்வி முறையைச் சீர்திருத்தி அமைக்க முயலவில்லை. குறிப்பாக 1966ஆம் ஆண்டிலும் 1981ஆம் ஆண்டிலும் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் கடும் எதிர்ப்புக்குள்ளாயின. ஒரு அரசாங்கம் அறிமுகம் செய்த சீர்திருத்தங்கள் அடுத்த அரசாங்கக் காலத்தில் மாற்றஞ் செய்யப்பட்டன. உயர் கல்வித் துறையில் ஐ.தே.கட்சி அரசு அறிமுகம் செய்த கனிஷ்ட பல்கலைக் கழகங்கள் (1965- 70), பல்கலைக் கழகக் கல்லூரிகள் (1990) என்பன பின்னர் அகற்றப்பட்டன. 1966ஆண்டு நிறுவப்பட்ட தேசியக் கல்விப் பேரவையும், 1972இன் தனிப்பல்கலைக்கழக அமைப்பும் அரசாங்கம் மாறிய பின் கைவிடப்பட்டன; கொழும்புப் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்த தொழில்சார் பயிற்சி நெறிகளும் பின்னர் கைவிடப்பட்டன. பாடசாலைக் கல்வி நிர்வாகத்துறையின் கொத்தணி முறையும் பல மாற்றங்களுக்குள்ளானது; கல்விக் கோட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுக் கைவிடப்பட்டன; தொழில்சார் கல்வி பாடசாலை மட்டத்தில் தொழில் முன்னிலைப் பாடம், வாழ்க்கைத் திறன்கள், தொழிநுட்பப் பாடம் எனப் பல பெயர்களைப் பெற்றுக் காலத்துக்குக் காலம் மாற்றங்களுக்குள்ளானது. க.பொ.த. சா/த, உ/த ஆகியவற்றினிடத்தில் 1972இல் தேசிய கல்விச் சான்றிதழ் (NCGE), உயர் தேசியக் கல்விச் சான்றிதழ் (HNCE) என்று புதிய பரீட்சைகள் இடம் பெற்று பின்னர் 1977இல் அவை மீண்டும் பழைய பெயர்களைப் (க.பொ.த) பெற்றன. 1987ல் அறிமுகம் செய்யப்பட்ட தொடர் மதிப்பீட்டு முறை ஓராண்டு காலம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டுப் பின்னர் கைவிடப்பட்டது. கல்வித்துறையில் அடிக்கடி செய்யப்பட்ட மாற்றங்கள் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைத் தொடர்ந்து குழப்பத்தில் ஆழ்த்தின. இவை கல்வி முறையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் குந்தகமாகவே அமைந்தன. கடந்த 50ஆண்டு காலப்பகுதியில் கல்வித்துறை, பல கல்விச் சீர்த்திருத்தங்களின் பரிசோதனைக் களமாகவே விளங்கிற்று. வளர்முக நாடொன்றின் சமூக, பொருளாதார, கலாசார நிலைமைகளையும், தேசிய அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்ட ஒரு கல்வி முறையை உருவாக்கும் முயற்சியில் இலங்கை வெற்றியடைந்ததாகக் கூற முடியாது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலக்கல்வி முறைச் சீர்திருத்தங்கள் முக்கியமாகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்குக் கல்வி வாய்ப்புக்களை விரிவு செய்வதை நோக்காகக் கொண்டவை. கல்வியில் சமவாய்ப்பும், சமூக நீதியும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. 1940இன் பின்னர் இலவசக்கல்வி (1945), மத்திய பாடசாலைகள், படிப்படியாகத் தாய்மொழிகள் போதனா மொழிகளாக்கப்பட்டமை, உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றமை, இலவச பாடநூல், இலவச சீருடை, 5 ஆம்வகுப்புப் புலமைப் பரிசில், உயர்கல்விக்கான அனுமதியில் மாவட்ட அனுமதிப்பங்கு- இவையாவும் பின்தங்கியவகுப்பினரின் கல்விவாய்ப்புகளை விரிவு செய்யும் முறையில் அறிமுகம் செய்யப்பட்ட முக்கிய கல்விச்சீர்த்திருத்தங்களாகும். இவை கிராமப் புறங்களில் வாழ்ந்து வரும் பின்தங்கிய விவசாய மக்களுக்கு உதவியமை பற்றியும், கல்விவாய்ப்புக்களின் விரிவின் பலன் அவர்களுக்குக் கிட்டியமை பற்றியும் 50ஆண்டுகாலக் கல்வி வளர்ச்சிபற்றிய பலருடைய கட்டுரைகள் ஏற்கெனவே விபரமாக விளக்கியுள்ளன. சமூக நீதியை நிலைநாட்ட முற்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் சாதகமான பெறுபேறுகளைப் (நான் உட்பட) பலரும் விபரமாக ஆராய்ந்துள்ளனர். அப்பட்டியலை இக்கட்டுரையில் தவிர்த்துள்ளோம். எழுத்தறிவு வீதம் அதிகரிப்பு, மாணவர் சேர்வு வீதத்திலேற்பட்ட அதிகரிப்பு, மக்களின் கல்வி மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன அவற்றுள் சிலவாகும். எவ்வாறாயினும், சமூக நீதியையும், கல்வியில் சமவாய்ப்புக்களையும் மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிறுபான்மை இந்தியத் தமிழர்களைச் சரியாக எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். சமவாய்ப்புகளை உறுதி செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இவ் இனக் குழுவினரைப் பொறுத்த வரையில் வெற்றி பெறவில்லை:

- எழுத்தறிவு வீதத்தில் தேசிய எழுத்தறிவு வீதத்துடன் ஒப்பிடும் போது இந்தியத் தமிழரது எழுத்தறிவு பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.
- மாணவர் சேர்வு வீதம், ஆசிரியர்-மாணவர் வீதம், கல்வி இடைநிறுத்தவீதம், பல்கலைக்கழக மாணவர் அனுமதி போன்றவற்றில்.

இந்தியத்தமிழர் பின்தங்கியுள்ள நிலைமையை கீழ்வரும் அட்டவணையில் காட்டியுள்ளோம்.

| பாடசாலை ஆண்டு | தேசிய வீதம் (இடைநிறுத்தம்) | பெருந்தோட்டப் பாடசாலைகள் (இடைநிறுத்தம்) |
|---|---|---|
| ஆண்டு 5 | 4.6 | 28.5 |
| ஆண்டு 6 | 5.4 | 29.4 |
| ஆண்டு 7 | 6.1 | 14.1 |
| ஆண்டு 8 | 7.3 | 24.0 |
| ஆண்டு 9 | 8.4 | 20.0 |

சுதந்திரத்துக்குப் பின்னர் நீண்ட காலமாக இந்தியத் தமிழருக்குரிய பெருந்தோட்ட மாவட்டங்களின் தமிழ்ப் பாடசாலைகள் தேசிய கல்வி முறைக்கு அப்பாலேயே செயற்பட்டு வந்தன. நாடற்ற மக்களின் கல்வி நிலையங்கள் என்ற முறையில் அவர்களுடைய 600 பாடசாலைகளும் அரசால் பொறுப்பேற்கப்படாது தனியாக இயங்கி வந்தன. இம்மக்களுக்குரிய பாடசாலைகள் வசதி குறைந்த சிறிய பாடசாலைகளாகவே (1-2 ஆசிரியர்களைக் கொண்டு) விளங்கின. 1977இன் பின்னரே இப்பாடசாலைகள் அரசால் பொறுப்பேற்கப்பட்டு வெளிநாட்டு உதவித் திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டன. அதுவரை இப்பாடசாலைகள் தேசிய கல்வி முறையுடன் ஒன்றிணைக்கப்படாது அதற்கு அப்பால் இயங்கின. மேலும் இப்பாடசாலைகள் தராதரம் நிறைந்த ஆரம்பக் கல்வியையே வழங்கின. இடைநிலைக் கல்வி வசதிகள் (க.பொ.த சா/தரம், உ/தரம்) பெருந்தோட்ட நகர்ப்புறங்களில் காணப்பட்டாலும் அவை எண்ணிக்கையில் குறைந்தவை.

- க.பொ.த. விஞ்ஞான உயர்நிலை வகுப்புகளைக் கொண்ட 1 ஏ.பி பாடசாலைகள் 9 மட்டுமே காணப்படுகின்றன. (சிங்களப் பாடசாலைகள் 125)
- 718 பெருந்தோட்ட மாவட்டப் பாடசாலைகள் 80 வீதமானவை ஆரம்பப் பாடசாலைகள். (சிங்களப் பாடசாலைகளில் 30 வீதம் மட்டுமே ஆரம்பப் பாடசாலைகள்)
- மொத்தத்தில் 5 வீதமான தமிழ்ப் பாடசாலைகள் மட்டுமே (40) க.பொ.த. உ/தரம் வகுப்புகளைக் கொண்டவை. (சிங்களப் பாடசாலைகளில் 25 வீதமானவை (607) பாடசாலைகள் அத்தகையவை.) எல்லா வகையிலும் தமிழ் மாணவர்களுக்கான இடை நிலைக் கல்வி வாய்ப்புக்கள் மிகவும் குறைவு.
- இந்நிலையில் மலையக பெருந்தோட்ட மக்களில் 3 வீதமானவர்கள் மட்டுமே க.பொ.த. தகுதிகளைக் கொண்டவர்களாக உள்ளனர். (நகர்ப்புற மக்களில் 16வீதமானவர்கள் இத் தகுதிகளைக் கொண்டவர்கள்)
- பெருந்தோட்ட மக்களில் 32வீதமானவர்கள் பாடசாலைக்குச் செல்லாதவர்கள். (நகர்ப்புறத்தில் 7.4வீதம் -1986)

குறைந்த அளவில் காணப்படும் இடைநிலைப் பாடசாலைகளில் (1 ஏ பி + 1 சி+2ஆம்வகை = 154பாடசாலைகள்) மிகக் கடுமையான ஆசிரியர் பற்றாக் குறையும் உண்டு. விஞ்ஞான, கணித ஆசிரியர் பற்றாக்குறை 1000; மொத்தத்தில் பற்றாக்குறை 4367 (1996இல்)

- மொத்த பாடசாலை மாணவர் தொகை 198,454; இவர்களில் 60 வீதமானவர்கள் (120,000) ஆரம்பநிலை மாணவர்கள்) 1400 பேர் மட்டுமே க.பொ.த. உ/தர மாணவர்கள்; நாட்டில் க.பொ.த. உ/தரப் பரீட்சைக்கு அமரும் 150,000 மாணவரில் மலையகப் பாடசாலை மாணவர்கள் 500 பேர் மட்டுமே; உயர் வகுப்புகளை நெருங்க நெருங்க பெரும்பாலான மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தம் செய்கின்றனர். (1994). இதனால் தான் உயர் வகுப்புகளில் (ஆண்டு 12,13) மலையக மாணவர் தொகை குறைந்து காணப்படுகிறது. எமது மதிப்பீட்டின்படி பிற இனத்தவரின் கல்வி நிலையுடன் ஒப்பிடும் போது க.பொ.த. உ/தரம் வகுப்புகளில் குறைந்தபட்சம் 7000-8000 மாணவர்களாவது இருத்தல் வேண்டும்.

- மலையகப் பாடசாலை மாணவர்களில் கல்வி இடைநிறுத்த வீதம் தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது மிக அதிகம் (1990).
- 33,000 பல்கலைக்கழக மாணவர்களில் 100-150 பேராவது மலையக மாணவர்களாக இருப்பதும் இன்றைய நிலையில் சந்தேகமே.

சாதாரண எழுத்தறிவு வீதத்திலும் மலையக மக்களின் நிலையும் பின்தங்கியே உள்ளது. இலங்கையின் பின் தங்கிய மக்கள் பிரிவினரின் எழுத்தறிவுடன் ஒப்பிடும் போதும் நிலைமை அவ்வாறே உள்ளது;. கிராமிய விவசாயி 92.5%, நகர்ப்புறத் தொழிலாளர் 73.4%, அண்மையில் சந்திரா குணவர்தன செய்த ஆய்வொன்றின்படி உண்மையில் 59.7%.

தோட்டத் தொழிலாளர்களே எழுத்தறிவு உடையவர்கள்; பெருந்தோட்டப் பெண்களின் எழுத்தறிவு 38.1% மட்டுமே.

சுதந்திரத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கல்விக் கொள்கைகளும், நடவடிக்கைகளும் நாட்டின் பின் தங்கிய கிராமப்புற, நகர்ப்புற மக்களுடைய கல்வி மேம்பாட்டையே நோக்காகக் கொண்டவை. 50 வருட கால நடவடிக்கைகளினால் இப்பிரிவினர் கண்ட கல்வி முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்நடவடிக்கைகள் முக்கிய பின்தங்கிய பிரிவினரான மலையக மக்களை எட்டவில்லை என்பதாலேயே அவர்களுடைய கல்வி நிலை பற்றிய குறிகாட்டிகள் எதிர்மறைப் போக்கைக் காட்டுகின்றன. எமது நாட்டின் 50 ஆண்டுகால கல்வி வளர்ச்சியின் முக்கிய எதிர்மறைவிளைவு பெருந்தோட்ட மக்களின் பின்தங்கிய கல்வி நிலையாகும்.

நாட்டின் பாடசாலைக் கல்வியில் ஏற்பட்ட விரிவு ஒரு முக்கிய சாதனையாக அமைந்த போதிலும், தேசியக் கல்வி முறை பற்றிய விரிவான நவீன கல்விச்சட்டமொன்று இயற்றப்படாமை ஒரு முக்கிய குறைபாடாகும். இன்றைய கல்வி முறைக்கா[illegible] சட்ட அடிப்படையைத் தருவது ஆங்கிலேயர் காலத்தைய 1939ஆம் ஆண்டின் கல்விச் சட்டமாகும். கடந்த 50 ஆண்டு காலத்தில் இயற்றப்பட்ட விசேட ஏற்பாடுகள், சட்டத் திருத்தங்கள், பிரமாணங்கள் என்பன நிறைய உண்டு. எந்தச்சட்டவிதி நடைமுறையிலுள்ளது என்பது பற்றித் திட்ட வட்டமாகக் கூற முடியாதுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிலைமைக்கு எச்சட்ட ஏற்பாட்டைப் பயன்படுத்துவது என்பது பற்றிய குழப்ப நிலையும் உள்ளது. சுருங்கக்கூறின் ஒரு புதிய கல்விச் சட்டம் ஒரு முக்கியத் தேவையாகும், 1995ஆம் ஆண்டு அரசாங்கம் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்த போது 1939ஆம் ஆண்டின் கல்விச்சட்ட விதிகளையே பயன்படுத்தியது.

கடந்த 50ஆண்டு காலக் கல்வி முறைச் சீர்த்திருத்தங்களினூடாகத் தேசியக் கல்வி முறையொன்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கக் கல்வி முறை, இலவசக்கல்வி, தாய்மொழியே போதனா மொழி ஆகிய அம்சங்கள் தேசியக் கல்வி முறையின் அம்சமாக விளங்கின. ஆயினும் 1977க்குப்பிற்பட்ட காலப்பகுதியில் நடை முறைப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக்கொள்கை, தனியார் துறையினரின் பங்கை வலியுறுத்தியமையைத்தொடர்ந்து ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு கட்டணம் அறவிடும் சர்வதேசப் பாடசாலைகள் பெருகி வருகின்றன. இவை தேசியக் கல்விமுறைக்கு அப்பால் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு வர்த்தக ரீதியாக செயற்பட்டு வருகின்றன. இப்பாடசாலை முறை, அரும்பாடுபட்டு உருவான தேசியக் கல்வி முறையுடன் ஒன்றிணைந்த முறையில் செயற்படவில்லை என்பதால் கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

50 வருட காலப்பகுதியில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்கள் தொடர்ச்சியான, உறுதியான ஒரு கொள்கையினடிப்படையில் கல்வி வளர்ச்சி ஏற்படத் தடைகளை விதித்தன. கல்விக்கான நிதிவளங்களுக்கு அரசாங்கமே பொறுப்பு வகித்தமையால் கல்வி முறை பரந்த அளவில் விரிவடைந்தபோது அதற்கேற்ப நிதிவளங்களை ஒதுக்கீடு செய்வது சிரமமாக இருந்தது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியிருந்த சில பிரிவினர்கள், அரசாங்கம் அறிமுகம் செய்த இலவசக்கல்வி வாய்ப்புகளைப் பெற்றுத் தம்மை முன்னேற்றிக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய பிள்ளைகளில் 20-30 வீதத்தினர் பாடசாலை முறையிலிருந்து விரைவில் அகன்று விடுவதால் 'யாவருக்கும் கல்வி' என்ற இலக்கை அடைய முடியாதுள்ளது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1978 அரசியல் திட்டம் தொடர்ச்சி...



## மாகாண சபை:

# தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் சுயாதீனம் பெறாதிருக்க சிங்கள அரசு காட்டிய அக்கறை!

**பல்கலைக்கழக பௌதீக அபிவிருத்தியைப் பொறுத்தவரையும் கூட தமிழ்ப் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. ருகுணு பல்கலைக் கழகமும் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒரே காலத்தில் உருவாக்கப்பட்ட போதும் வளர்ச்சியைப் பொறுத்தவரை மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசமே உள்ளது.**

**பாடத்திட்டங்களை உருவாக்குவதிலும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் இல்லாததன் அபாயகரமான விளைவை கண்முன்னே காண முடிகிறது. இன்று மத்திய அரசினால் பொய்யுரைகளுடன் புனையப்பட்ட பாடத்திட்டங்களையே தமிழ் மாணவர்களும் கற்க வேண்டி ஏற்பட்டுள்ளது.**

**1978** ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மாகாண சபை அரசாங்க முறை பற்றிய கட்டுரைத் தொடரை நான் எழுதிக் கொண்டிருந்த போது எனக்கு ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவலொன்று வந்தது. அதாவது இந்தியாவில் பதவி ஏற்றுக்கொண்ட புதிய பாரதீய ஜனதா அரசாங்கம், வடக்கு கிழக்கில் மாகாண அரசாங்கமுறையை மீண்டும் அமுல்படுத்தும் படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது என்பதே அத் தகவல். இதற்கேற்ற வகையில் 10 வருடத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தைப் புலிகளிடம் கையளிக்கும்படியும் கேட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. மாகாண அரசாங்கத்தினை சுயாதீனமாக நடாத்துவதற்கு யாப்பிலுள்ள ஏற்பாடுகள், போதாமல் இருக்கின்ற போது பாராளுமன்றத்தின் மூலம் அதற்கான சட்டங்களை உருவாக்கிக் கொடுக்கும்படி வற்புறுத்தியதாகவும் கூறப்படுகின்றது. அரச தரப்பில் இருந்தும் புலிகள் தரப்பில் இருந்தும் இதற்குப் பச்சைக் கொடிகள் காட்டப்பட்டுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுவாக இனப்பிரச்சினைக்கான தீர்வு வேறு வழியில்லாமல் மாகாண சபையை நோக்கியே நகர முடியும் என்பது அரசியலாளர்களால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று தான். அரசியல் ஆய்வாளரான கலாநிதி சரவணமுத்துவும் ஒரு தடவை இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தான் தீர்வு என்றால், தமிழ் மக்கள் இது விடயத்தில் பாரிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய கட்டாய நிலையொன்று இன்று தோன்றியுள்ளது. இதனை வற்புறுத்தத் தான் இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே இத்தகவலைத் தெரிவிக்க முற்பட்டேன். யாப்பிலுள்ள ஏற்பாடுகளை நுணுக்கமாகப் பார்த்து இதன் போதாமைகளை வெளியே கொண்டு வந்து அதனை நிவர்த்தி செய்வதற்கு அரசை நிர்ப்பந்திக்க வேண்டிய வழிவகைகளை நாம் கண்டாக வேண்டும்.

இனி என் தொடருக்கு வருகின்றேன். சென்ற இதழில், மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களில் காணி, பாதுகாப்பு விடயங்களைப் பார்த்தோம். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அதனைப் பிரயோகிப்பதற்கான அதிகாரங்கள், அவ்வதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்ற தளத்திலிருந்தே அவ்விடயங்களைப் பரிசீலித்தோம். இத்தடவை மேலும் சில முக்கிய விடயங்களைப் பார்ப்போம்.

### கைத்தொழில்

இலங்கை முழுவதிலும் கைத்தொழில் பற்றிய தேசியக் கொள்கையை உருவாக்கும் அதிகாரம் மத்திய அரசிடமே இருக்கும். மாகாண சபைகள் அத்தேசியக் கொள்கைக்கு ஏற்ப மாகாண மட்டத்தில் கைத்தொழில் திட்டங்களை உருவாக்கலாம் எனக் கூறப்பட்டது.

இதன் உண்மையான அர்த்தம் மத்திய அரசின் கருத்தின்படிதான் மாகாணசபைகள், திட்டங்களை உருவாக்கலாமே தவிர சுயாதீனமாக மாகாண சபை எதனையும் உருவாக்கி விடமுடியாது என்பதாகும். மத்திய அரசின் கைத்தொழில் பற்றிய தேசியக் கொள்கை, இடைத்தர, கீழ் மட்ட கைத்தொழில் திட்டங்களை உருவாக்குவதற்கே மாகாண அரசுகளுக்கு அனுமதியை வழங்கியுள்ளது. பாரிய கைத்தொழில் நிறுவனங்களை மாகாண சபை உருவாக்கவும் முடியாது. தற்போது வடக்கு-கிழக்கில் செயற்படும் பாரிய கைத்தொழில் நிலையங்களைப் பொறுப்பேற்கவும் முடியாது.

உண்மையில் வடக்கு-கிழக்கில் தற்போது தற்போது இருக்கும் பாரிய தொழிற்சாலைகளான சீமெந்து தொழிற்சாலை (காங்கேசன்துறை), இரசாயனத் தொழிற்சாலை (பரந்தன்), காகிதத் தொழிற்சாலை (வாழைச்சேனை), இல்மனைற் தொழிற்சாலை (புல்மோட்டை) என்பன அதிகளவு வருமானத்தினைத் தரும் தொழிற்சாலைகளாகும். (இதில் சீமெந்து தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை என்பன தற்போது இயங்குவதில்லை.) இவ்வருமானங்கள் எல்லாம் மத்திய அரசிற்கே போய் விடுகின்றன. மேலும் மாகாண எல்லைக்குள் கண்டு பிடிக்கப்படுகின்ற கனிப் பொருட்களும் மத்திய அரசிற்கு உரியது என்றே கூறப்படுகின்றது.

தமிழ் மக்களின் அபிவிருத்திக்கு உதவப் போகின்ற அவர்களின் சொத்துக்களை அவர்களுக்கே பயன்படுத்த அனுமதி மறுப்பதை எந்த வகையில் நியாயமாகக் கொள்ள முடியும். இவையல்லாமல் தமிழ் மக்களின் மாகாண அரசு எந்த வகையில் நிதியீட்டத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அமெரிக்கா, கனடா அரசியல் யாப்புகளில் கைத்தொழில் தொடர்பான அதிகாரங்கள் மாநில அரசுகளிடமே வழங்கப்பட்டுள்ளன.

### போக்குவரத்து

பாராளுமன்றச் சட்டத்தினால், ஆக்கப்பட்ட தேசிய பெருந்தெருக்கள், புகையிரத சேவைகள், நீர்வழி, ஆகாயவழிப் போக்குவரத்து, கடல், தரை, ஆகாய பயணிகள் போக்குவரத்து என்பன மத்திய அரசின் அதிகாரங்களுக்குட்பட்டவையாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

தேசியப் பெருந்தெருக்கள் எவை என்பது பற்றி யாப்பில் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. பாராளுமன்றமே அதனைத் தீர்மானிக்கும் என மட்டும் கூறப்பட்டது. தெருக்களைப் பொறுத்தவரை A, B, C, D, E என ஐந்து வகைத் தரங்களைக் கொண்ட தெருக்கள் இலங்கையில் உள்ளன. இவற்றில் மாகாண சபை செயற்படத் தொடங்கிய காலத்தில் A, B தெருக்கள் மட்டுமே தேசிய பெருந்தெருக்கள் என நடைமுறையில்,கருதப்பட்டது. இதனால் C, D, E தெருக்களைப் பொறுப்பெடுக்கும் வகையில் சொற்பகாலம் பதவியில் இருந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை சட்டத்தினை நிறைவேற்றியது. ஆனால் சிறிது காலத்திலேயே பாராளுமன்றம் A,B தெருக்களோடு C தெருக்களும் பெருந்தெருக்கள் என்ற வகைக்குள் அடங்கும் என ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இதன் பின்னர் D, E தெருக்கள் என அழைக்கப்படுகின்ற குச்சு ஒழுங்கைகள் மட்டுமே மாகாண சபைகளின் அதிகாரத்தில் விடப்பட்டன.

இது விடயத்தில் எத்தகைய தெருக்களாக இருந்தாலும் சரி மாகாண எல்லைக்குள் உள்ள தெருக்களை, ஏன் மாகாண அரசாங்கத்தின் அதிகாரத்திற்குள் விடக் கூடாது என்பதற்கான மறுப்பு நியாயங்கள் அரச தரப்பிலிருந்து இது வரை வரவில்லை. அமெரிக்கா, சுவிஸ், கனடா மட்டுமல்ல, இந்தியாவில் கூட அம் மாநிலத்தின் எல்லைக்கு உட்பட்ட தெருக்கள் பற்றிய அதிகாரம் மாநில அரசுகளிடமே விடப்பட்டுள்ளன.

புகையிரதச் சேவைகள் பற்றிய விடயங்கள் அனைத்தும் மத்திய அரசாங்கத்திடம் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. புகையிரத சேவை அதிகளவிலான வருமானத்தினைத் தரக்கூடிய துறை என்ற வகையில் மாகாண எல்லைக்குள்ளான புகையிரத போக்குவரத்து அதன் பாதைகள் பற்றிய அதிகாரத்தினை ஏன் மாகாண அரசுக்கு விடக் கூடாது. இதனூடாக மாகாண சபை தனக்கான வருமானத்தினைக் கூட பெற்றுக் கொள்ள முடியுமல்லவா?

ஏனைய தரைப் போக்குவரத்து அதிகாரம் கூட முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப் படவில்லை. இதில் எவ்வளவு தூரம் மாகாண பை அதிகாரத்தினைப் பிரயோகிக்கலாம் என்பது தொடர்பாக பாராளுமன்றம் ஒரு சட்டத்தினை இயற்றிக் கொடுக்க வேண்டும் என்றே கூறப்பட்டது. எனினும் பேச்சுவார்த்தைக்ளின் போது உள்ளூர் போக்குவரத்துக்கள் இந்தியாவில் உள்ளது போல மாகாண அரசிடம் இருக்கும். இந்த வகையில் C.T.B. என அழைக்கப்படுகின்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை, மாகாண அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவே இருக்கும் எனக் கூறப்பட்டது. இதன் அடிப்படையில் அதனைப் பொறுப்பெடுப்பதற்கான சட்டத்தினையும் வடக்கு-கிழக்கு மாகாண சபை நிறைவேற்றியது. ஆனால் சொற்ப காலத்திலேயே பாராளுமன்றம் வேறோர் சட்டத்தினை இயற்றி அவ் உரிமையை இல்லாமல் செய்தது.

இவ்விடயத்தில் தமிழக அரசு, பல போக்குவரத்துக் கழகங்களை பல்வேறு மாவட்டங்களிலும் நிறுவி திறம்படச் செயற்படுத்தி வரும் முறைமை எமக்கும் உதாரணமாகக் கூடியது.

கடல் வழியான கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து என்பனவும் மத்திய அரசிடம் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இது விடயத்திலும் மாகாண எல்லைக்குள்ளான போக்குவரத்துக்கள் மாகாண அரசிடத்திலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நீண்ட கடல் பரப்பினைக் கொண்டிருப்பதனால் மக்களிடையேயான உறவுகளுக்கும் பொருளாதார அபிவிருத்திகளுக்கும் தமிழ் மக்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட கடற் போக்குவரத்து மிக மிக அவசியமானதாகும். இதே போல நீண்ட நிலப் பரப்பினைக் கொண்டுள்ளமையினால் ஆகாயப் போக்குவரத்தும் அவசியமாக உள்ளது.

### மீன் பிடித்தொழிலும் கடல்வளமும்

மீன்பிடித் தொழில் உட்பட கடல் வளம் பற்றிய அதிகாரங்கள் மத்திய அரசிற்கு உரியது என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் தமிழர் தாயகத்தின் நீண்ட கடற்பரப்பில் தமிழ் மக்களுக்கான அதிகாரம் இல்லாமல் போகின்றது. தமிழ் மக்களின் பொருளாதார உயிர் நாடி விவசாயமும் கடற்தொழிலுமே ஆகும். கடற் தொழில் தொடர்பான அதிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாமல் எவ்வாறு தான் தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்ய முடியும்.

மேலும் துறைமுகங்கள் பற்றிய அதிகாரங்களும் மத்திய அரசிடமேயுள்ளது. இதில் சர்வதேச போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம் தவிர்ந்த ஏனைய மாகாண எல்லைக்கு உட்பட்ட துறைமுகங்களை ஏன் மாகாண சபைகளுக்கு கொடுக்க முடியாது.

கைத்தொழில், போக்குவரத்து கடற்தொழில், துறைமுகங்கள் சம்பந்தமான ஏற்பாடுகளை நுணுக்கமாகப் பார்க்கின்ற போது அதில் தமிழ்மக்களுக்கு அதிகாரங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இதனூடு பொருளாதார ரீதியாக, தமிழ் மக்கள் சுயாதீனம் பெற்றுவிடக் கூடாது என்பதில் பேரினவாதிகள் கொண்டுள்ள கவனத்தை அறிய முடிகிறது.

தமிழ் மக்கள் எப்போதும் தங்கள் தயவில் இருக்க வேண்டும் என்பதே பேரினவாதிகளின் எண்ணம். அதிகளவிலான சுயாதீனத்திற்கு பங்கமாக வந்துவிடலாம் என அவர்கள் கருதுகின்றனர்.

### கல்வி

கல்வியைப் பொறுத்தவரை தேசியப் பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள் ஆசிரிய கலாசாலைகள் கல்விக் கல்லூரிகள் என்பன மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும். ஏனைய கனிஸ்ட இடைநிலைப் பாடசாலைகளே மாகாண அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு பா்டத் திட்டத்தினை தீர்மானித்தல் பரீட்சை வினாக்களைத் தீர்மானித்தல் என்பனவும் மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கும் எனவும் கூறப்பட்டது.

வடக்கு-கிழக்கின் தேசியக் கல்லூரிகளில் பெரும்பாலானவை அரசினால் உருவாக்கப்பட்டவையல்ல. இந்து மத நிறுவனங்களினாலும் கிறிஸ்தவ மிஸனரிகளினாலும் உருவாக்கப்பட்டவையே அவையாகும். அவற்றின் வளர்ச்சியிலும் அரசாங்கத்தின் பங்கை விட தமிழ் மக்களின் பங்கே அதிகமாகும். மாகாண அரசாங்கத்தின் கீழ் அவை வராததினால் அவைகளின் தொடர்ச்சியான வளர்ச்சி தடைப்படுகின்றது. பேரினமயப்பட்ட மத்திய அரசு இதற்கு பெரிதாக உதவப் போவதில்லை. ஒரு தேசியக் கல்லூரியின் அதிபர் "தேசிய பாடசாலையாக நாம் இருப்பதனால் மாகாண அரசாங்கத்திலிருந்து கிடைக்கக் கூடிய வளங்களை இழந்து விட்டோம், ஆசிரியர் பற்றாக்குறையைக் கூட எம்மால் தீர்க்க முடியவில்லை" என குறைப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு வந்திராத ஒரு காலத்தில், தமிழ்ப் பகுதிகளின் அறிவெழுச்சி சின்னமாகவும் பல்வேறு துறைகளில் தமிழ் மக்களின்று வழிகாட்டியாகவும் இத் தேசியக் கல்லூரிகளே திகழ்ந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது.

பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையிலும் அதன் அதிகாரம் மத்திய அரசிடம் இருப்பதனால் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகளைக் காண முடியவில்லை. பல்கலைக் கழகம் என்பது வெறுமனவே பட்டதாரிகளை உருவாக்கும் உற்பத்திக் கூடமல்ல. மாறாக ஒரு பிரதேசத்தின் அனைத்து அபிவிருத்திக்குமான வழிகாட்டியும் அதுதான். புதிய அபிவிருத்தி மாதிரிகளை உற்பத்தி செய்யும் பரிசோதனைக் கூடமும் அதுதான். இந்த வகையில் தமிழ் மக்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக அது இருக்கின்ற போது மட்டுமே தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய பணிகளை அதனால் மேற்கொள்ள முடியும். பல்கலைக்கழகங்களின் பௌதீக வளங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

மேலும் கல்வியில் சமத்துவம் நிலவுகின்றது என அரசு ஆர்ப்பரித்து கூறுகின்ற போதும், பல கற்கைப் பீடங்கள் தமிழ் பகுதிப் பல்கலைக் கழகங்களில் இல்லை. பொறியியல், சட்டம், பல்மருத்துவம், மிருக மருத்துவம் போன்ற பீடங்கள் இல்லை. இவை எமது பல்கலைக் கழகங்களில் உருவாக்கப்படவில்லை. கடற் தொழில் பீடம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்கெல்லாம் பல்கலைக்கழக அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும். இந்தியாவில் ஒரு சில பல்கலைக்கழகங்களை விட ஏனைய பல்கலைக் கழகங்களின் அதிகாரம் மாநில அரசுகளிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக பௌதீக அபிவிருத்தியைப் பொறுத்தவரையும் கூட தமிழ்ப் பிரதேசப் பல்கலைக்கழகங்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றன. ருகுணு பல்கலைக் கழகமும் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒரே காலத்தில் உருவாக்கப்பட்ட போதும் வளர்ச்சியைப் பொறுத்தவரை மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசமே உள்ளது.

பாடத்திட்டங்களை உருவாக்குவதிலும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் இல்லாததன் அபாயகரமான விளைவை கண் முன்னே காண முடிகிறது. இன்றைய நிலையில் மத்திய அரசினால் பொய்யுரைகளுடன் புனையப்பட்ட பாடத்திட்டங்களையே தமிழ் மாணவர்களும் கற்க வேண்டி ஏற்பட்டுள்ளது. ஒரு நல்ல உதாரணம் தற்போதைய வரலாற்றுப் பாடத்திட்டம், அதில் தமிழ் மக்களின் வரலாறு புறக்கணிக்கப்பட்டு சிங்கள மக்களின் வரலாறு மட்டுமே இலங்கையின் வரலாறாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

**-செம்பாட்டான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலித்தடை: மக்களை அந்நியப்படுத்தும் முயற்சியில் மற்றொரு மைற்கல்!

வி.ரி.தமிழ்மாறன்

தலதா மாளிகைக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அரசாங்கம் உடனடியாகவே புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதாக அறிவித்தது. கட்டடத்தைத் திருப்பிக் கட்டுவோம் என்பதற்கு அடுத்ததாக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய செய்தியாக இது அப்போது அமைந்திருந்தது. வேறு எதனையும் அறிவிக்கக்கூடிய நிலையில் அரசாங்கம் அப்போது இருந்திருக்கவுமில்லை. பேச்சுவார்த்தைக்கான கதவுகளை நிரந்தரமாக மூடிவிடும், வீணான அழிவுகளுக்கு வித்திடும் என்றெல்லாம் இத்தடை விபரிக்கப்பட்டது. இத்தகைய தடைகள் வேறுபல நாடுகளில் வெவ்வேறு கால கட்டங்களில் இருந்தவைதான். ஆனால் ஸ்ரீ லங்காவின் சட்டம் இரு விடயங்களில் வித்தியாசமானதாகத் தெரிகின்றது எனலாம். அதாவது இங்குதான் இத்தகையதொரு சட்டம் அவசரகால நிலைகளின் கீழான ஓர் ஒழுங்கு விதியாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றது ஏற்கனவே இது விடயத்தைக் கையாளுவதற்கெனப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையிலுள்ளது. இந்த நாட்டுப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் ஏனைய நாடுகளின் பயங்கரவாதத் தடைச் சட்டங்களுக்கும், இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன என்பது வேறு விடயம்.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதியினால் பிறப்பிக்கப்படும் அவசரகால நிலை ஒழுங்குவிதிகள் ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின்படி சட்டங்களாகவே கொள்ளப்படுகின்றன. ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளைத் தவிர ஏனைய எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அவசரகாலநிலை ஒழுங்குவிதிகளினால் மேலோங்கி நிற்க முடியும். அதாவது சாதாரண நியதிச் சட்டங்களைவிட அவை பலம் கூடியவை. நாடு ஏறக்குறைய 25 வருடங்களாக அவசரகால நிலையின் கீழ் இருக்கின்றது என்பதையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும். நாட்டின் சாதாரண சட்டங்களை இடை நிறுத்தி வைக்கும் விதத்தில் ஜனாதிபதி அவசரகாலநிலை ஒழுங்கு விதிகளை ஆக்கிக் கொண்டே இருக்கலாம்.

மறுபுறத்தில் இந்த ஒழுங்கு விதிகள் பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கப்படுபவையல்ல. அத்துடன் அவை நிறைவேற்றப்பட்டு விட்டதென்பதற்கு அத்தாட்சியாகச் சபாநாயகர் ஒப்பம் இடுவதுமில்லை. பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம் பெறுபவையுமல்ல. சட்ட மூலத்தின் வடிவத்தில் இல்லாமையினால் இவை அரசியலமைப்புக்கு முரணான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன என்று ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்துக்குச் செல்லவும் முடியாது. சாதாரண சட்டங்களுக்காயின் இந்தச் சோதனைகளெல்லாம் இருக்கும். அத்துடன் அரசியமைப்பின் ஏற்பாடுகளுக்கு மேலாகச் செல்ல முடியாவிட்டாலும் இந்த ஒழுங்கு விதிகள் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடியே பல அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பறித்து விட வல்லன என்பதுதான் இங்குள்ள பிரச்சினையாகும்.

ஆக மொத்தத்தில் ஜனாதிபதி இந்த விதிகளைப் பாவித்துப் பாராளுமன்றத்துக்கு இணையாகச் சட்டமும் ஆக்க முடியும் என்பது மட்டுமல்ல, இருந்து வருஞ் சட்டங்கள் சிலவற்றை ஒத்தி வைத்திடவும் முடிகின்றது. இது ஜனநாயக சமூகமொன்றில் மிகவும் பாரதூரமான விடயமாகும். இதனாலேயே இந்த ஒழுங்கு விதிகளை உயர்நீதிமன்றம் மீளாய்வு செய்து இவை அரசியலமைப்பின் ஏற்பாடுகளை மீறுகின்றனவா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கின்றது.

## புலித்தடை தரும் புதிய பிரச்சினைகள்

1998 ஜனவரி 27 ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியின் மூலம் விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் அறிவித்தல் வெளியாகியுள்ளது. எனவே மேலே கூறிய விடயங்கள் யாவும் இந்த ஒழுங்கு விதிக்கும் பொருந்தும் என்பதை முதலில் கவனிக்க வேண்டும். அதாவது இந்த விதி பல்வேறு நியதிச் சட்டங்களை இடைநிறுத்தி வைத்துவிடும். இந்த விதியின் 2 ஆம் பிரிவு யாருக்கு இது ஏற்புடையதாகும் எனக் கூறுகின்றது.

விடுதலைப் புலிகளை மட்டுமன்றிச் சாராம்சத்தில் அவர்களது தற்போதைய அல்லது முன்னைய செயற் [illegible]கும் வேறு நிறுவனங்கள், அமைப்புக்கள், ஆட்கள் குழுவுக்கும் இவை ஏற்புடையனவாகும். இவையும் தடைச் செய்யப்பட்டனவாகவே கருதப்பட வேண்டும்.

3 ஆம் பிரிவின் படி, ஆளெவரும் இங்ஙனம் தடை செய்யப்பட்ட அமைப்பின் சீருடை, ஆடை, சின்னம், அல்லது வேறு அடையாளங்களை அணிந்தால்,

அத்தகைய அமைப்பின் கூட்டமொன்றைக் கூட்டினால் அல்லது அதற்குச் சமூகமளித்தால் அல்லது அங்ஙனம் தடை செய்யப்பட்ட அமைப்புடன் தொடர்புடைய ஏதேனும் நடவடிக்கையில் பங்குபற்றினால் அல்லது தொடர்பு பட்டிருந்தால்,

உறுப்பினர்களைச் சேர்த்துக் கொடுப்பதன் மூலம் அல்லது அந்த அமைப்புக்குச் சந்தாப் பணம் கொடுப்பதன் மூலம் அல்லது நிதி சேகரித்துக் கொடுப்பதன் மூலம் அல்லது தகவல்களை வழங்குவதன் மூலம் அல்லது அதற்கு மற்றும் உதவிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் ஆதரவளிப்பின்,

அங்ஙனம் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படுவதை, விளங்கப்படுவதை, அல்லது தண்டிக்கப்படுவதைத் தடுக்கும், இடைஞ்சல் விளைவிக்கும் அல்லது தலையிடும் நோக்கத்துடன் அவருக்கு உதவுதல், அவரை மறைத்து வைத்தல் அல்லது வேறேதேனும் விதத்தில் ஒத்தாசையாக இருத்தல், அல்லது

அங்ஙனம் தடைசெய்யப்பட்ட அமைப்பினால் அல்லது அதன் உறுப்பினர் எவரேனும் சார்பில் பிரசுரிக்கப்படும் அல்லது பிரசுரிக்கக் கருதப்படும் ஏதேனும் எழுத்துமூல அல்லது அச்சுமூல விடயத்தை ஆக்குதல், அச்சிடல், விநியோகித்தல், அல்லது பிரசுரித்தல் அல்லது ஆக்குதலில், அச்சிடலில், விநியோகித்தலில் அல்லது பிரசுரித்தலில் சம்பந்தப்படுதல், அல்லது

அந்த அமைப்பின் நோக்கங்களை முன்னெடுக்கும் விதத்தில் அந்த அமைப்பின் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரது கட்டளை, தீர்மானம், பிரகடனம், அறிவுறுத்தல்களை எந்த விதத்திலேனும் இன்னொருவருக்கு ஏதேனும் விதத்தில் தெரிவித்தல் அல்லது தெரிவிக்க முயலுதல் என்பவற்றுக்காக இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட வேண்டும் என்பதுடன் இங்ஙனம் தண்டிக்கப்பட்டதன் மேல் ஏழு வருடங்களுக்குக் குறையாததும் 15 வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத் தண்டனை விதிக்கப்படவும் வேண்டும்.

ஒழுங்கு விதியின் 4 ஆம் பிரிவின் படி ஆளெவரும் பணம், பங்குகள், வங்கிக் கணக்குகள் என்பவற்றை அங்ஙனம் தடை செய்யப்பட்ட அமைப்பினால் பயன்படுத்தப்படுவதற்கு அல்லது அதற்கெனக் கருதப்பட்டு வைத்திருப்பின் அமைச்சரானவர் தனக்குப் பொருத்தமெனக் காணும் அத்தகைய விசாரணை ஒன்றன் பின்னர் திருப்திப்படின் அவர் எழுத்து மூலக் கட்டளையின்படி, அவர் வசமிருக்கும் அத்தகைய பணம், பங்குகள், வங்கிக் கணக்குகள் அல்லது இக்கட்டளை ஆக்கப்பட்டதன் பின்னர் அவர் வசம் வரக்கூடியவை. அத்துடன் அந்த அமைப்புக்குச் சொந்தமான அசையும், அசையாச் சொத்துக்கள் யாவும் அரசிடம் ஒப்படைக்கப்படுவதாக விளம்பல் வேண்டும்.

அமைச்சரின் தீர்மானம் இறுதியானதும், முற்றானதுமெனவும், அது நீதிமன்றமெதிலும் எவ்விதத்திலும் கேள்விக்குட்படுத்தப்பட முடியாததென்றும் கூறுகின்றது.

5 ஆம் பிரிவு சந்தேகமகற்றும் பிரிவாக அமைந்துள்ளது. அதாவது



இந்த ஒழுங்கு விதிகள், மனிதாபிமான உதவிகள் தொடர்பில் அரசாங்கத்தோடு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனங்களது உரிமைகளைப் பாதிக்காது என்று கூறப்பட்டுள்ளது.

இனி இவற்றுள்ளான முரண்பாடுகளைப் பார்ப்போம்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) விடுதலைப் புலிகள் இயக்கம் என்று குறிப்பிட்டுச் சொல்லா விட்டாலும் மேலே சொன்ன எல்லா விடயங்களையும் தடை செய்கின்றது. அத்துடன் அச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படவும் இடமுண்டு. ஆனால் இங்கே சொத்துப் பறிமுதல் நீதிமன்றம் ஒருவரைப் பயங்கரவாதத்துக்குக் குற்றவாளியாகக் கண்ட பின்னரே செய்யப்பட முடியும். அது மட்டுமன்றி வழமையான நீதிமன்றப் பாதுகாப்புக்களும் அங்கே இருக்கும் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யலாம்.

ஆனால் அண்மைய தடை ஒழுங்கு விதிகளின் கீழான நிலை தானென்ன? நீதிமன்றம் சம்பந்தப்படாமல், அமைச்சரே முடிவெடுக்கின்றார். அதுவும் தான நினைக்கும் பொருத்தமான விசாரணை ஒன்றின் பின்னர் எனக் கூறப்படுகின்றது. அமைச்சர் யாரை விசாரணைக்கென நியமிக்கப் போகின்றார்? படை அதிகாரிகளையா? சொத்துப் பறிமுதல் என்பதும் 7-15 வருடகாலச் சிறைத் தண்டனை என்பதும் மிகப் பாரதூரமான விடயங்களாக இல்லையா?

இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், அமைச்சர் வெளி நாட்டு நிறுவனங்களை மனிதாபிமான உதவிகளுக்கென அனுமதிக்கின்ற அதே வேளையில் இத்தகைய பணிகளிலீடுபடும் உள்நாட்டு நிறுவனங்கள் எதற்கும் விதிவிலக்கு அளிக்கத் தவறி விடுகின்றார். ஆயின், இது அரசியலமைப்புக் கூறும் சமத்துவ உரிமை மீறலா (உறுப்புரை 12) மீறலாகாதா? உள்நாட்டு நிறுவனங்கள் எதுவுமே மனிதாபிமானப் பணியாற்றத் தகுதியற்றவையா? இரு இன மக்களும் பரஸ்பரஞ் சந்தித்து உண்மையான நிலவரத்தைக் கண்டறியக் கூடிய ஒரு வாய்ப்பும் இதன் மூலம் தடுக்கப்படுகின்றதா? யார் மீது யாருக்கு நம்பிக்கையில்லை என்ற வினாவும் இங்கே எழத்தான் செய்கின்றது.

கவனத்தை ஈர்க்கும் இன்னொரு விடயம் யாதெனில், வெளிநாட்டு நிறுவனம் என்று குறிப்பிடும்போது பாதுகாப்பு அமைச்சரால் விதித்துரைக்கப்படும் என்று கூறப்படுகின்றது. ஏனைய இடங்களிலெல்லாம் வெறுமனே அமைச்சர் என்றே கூறப்படுகின்றது. இவர் பாதுகாப்பு அமைச்சரா அல்லது வேறு அமைச்சரா என்பதும் தெளிவில்லை. வழக்கமாகப் பொருள்கோடல் பிரிவில் அமைச்சர் என்பது யாரைக் குறிப்பிடும் என்று கூறப்பட்டிருக்கும். ஆனால் இந்த ஒழுங்கு விதியில் அப்படி எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. அத்துடன் ஸ்ரீ லங்காவின் பாதுகாப்பு அமைச்சர் என்பது ஜனாதிபதியே என்பதையும் இங்கு கவனத்தேயாக வேண்டும்.



விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் அல்லது முன்னெடுத்த நடவடிக்கைகள் என்று 2 ஆம் பிரிவு கூறுகின்றதல்லவா. எதை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் என்பதும் கூறப்படவில்லை. ஆயின், கலாச்சார நடவடிக்கைகளும் இதனால் தடுக்கப்படுகின்றதா? அல்லது ஒரு விடயத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்தார்கள் என்பதற்காக அதனை வேறு யாருஞ் செய்ய முடியாதா என்ற வினாவும் எழக் கூடும். உதாரணமாக, வடக்கு-கிழக்கு இணைப்புக்காகச் சாத்வீகப் போராட்டம் நடாத்த முடியாதா? இக் கருத்தை வலியுறுத்திக் கூட்டம் போட அல்லது பிரச்சாரம் செய்ய முடியாதா?

எத்தகைய அல்லது எதற்கான செயற்பாடுகள் என்று கூறப்படாமையினால் தேவையேற்படும்போது வசதிக்கேற்ப பொருள் கொள்ளப்பட முடியும். விடுதலைப் புலிகளது ஆதரவு இயக்கங்களையும் தடை செய்யும் நோக்கத்தில் இச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் தொடர்புகளை யார் தீர்மானிப்பது?

அமைச்சர் நடாத்தும் விசாரணை என்பதுதான் மிகவும் பாரதூரமானதாக உள்ளது. பலரும் நினைப்பது போல அமைச்சரின் முடிவை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியாது என்பது சரியல்ல. அமைச்சர் எதேச்சாதிகாரமான முடிவை எடுக்கும் பட்சத்தில், நிச்சயம் அதனை நீதிமன்றம் தட்டிக் கேட்கும். உதாரணமாக 1989 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டளைகள் பிரிட்டிஷ் நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. விசாரணைகள் என்பது உண்மையிலேயே விசாரணையாக இருக்க வேண்டும். அது விசாரணை தானா? அல்லது கண்துடைப்பா? என்பதை நீதிமன்றால் தீர்மானிக்க முடியும்.

சர்வதேச ரீதியில் விசனத்துக்குரிய மற்றொரு விடயம் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தின் மீதான தடையாக இப் புலித்தடை பாவிக்கப்படப் போகின்றமையேயாகும். ஐ.ஆர்.ஏ. தொடர்பான நிகழ்ச்சிகளைக் காட்டக் கூடாது என 1988 இல் பி.பி.ஸி.க்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பில் 1988 நவம்பர் 21 ஆந் தேதிய **The Independent (London)** நாளிதழில் பி.பி.ஸி.யின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் **John Birt** வருமாறு எழுதினார்:

"பிரிட்டிஷ் ஒலிபரப்பு செய்தித் துறையே பயங்கரவாதத்தின் தற்போதைய இலக்காகி விட்டது. வட அயர்லாந்தில் இரண்டு தசாப்தங்களாக உள்ள பயங்கரவாதத்தின் பின்னர், எமது அரசாங்கம் இறுதியில் எடுத்திருக்கும் நடவடிக்கையானது, அது பயங்கரவாதத்தை ஒடுக்குகின்றதோ? இல்லையோ? ஜனநாயக சமூகத்தின் மிகவும் போற்றப்படும் மூலாதாரங்கள் மீது சேதத்தை விளைவிக்கின்றது என்பது மட்டும் நிஜமாகின்றது- அதாவது கருத்து வெளியிடுஞ் சுதந்திரமும் தகவற் சாதனங்களது சுதந்திரமும் பாதிப்படைகின்றது."

[illegible] மாற்று அபிப்பிராயம் கொள்ள மறுக்கும் என் போன்றவர்களுக்கு இத்தகைய தடைச் சட்டமானது இருக்கின்ற நம்பிக்கைகளையும் தகர்ப்பதாகவே அமைந்துள்ளது. சமாதானம் தூரத் தூரத் தொலைந்து கொண்டிருக்கின்றது. அதைத் தேடுவதான சத்தங்கள் மட்டும் பல்வேறு ஒலிகளில் ஒலித்துக் கொண்டேயுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யுத்தத்திற்கு சமாதானம் என்றும் பெயர்

சமாதானத்துக்கு யுத்தம் என்றும் ஒரு பொருள் இருக்கிறதா என்று யாராவது சொல்லுங்களேன். ஏன் என்று கேட்கிறீர்களா?

சரி, இலங்கையில் சமாதானத்தைப் பற்றிப் பேசுபவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள். ஜனாதிபதி பேசுகிறார்; எதிர்க் கட்சித் தலைவர் பேசுகிறார்; முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பேசுகிறார்கள்; அமைச்சர்கள் பேசுகிறார்கள்; தமிழ் கட்சித் தலைவர்கள் பேசுகிறார்கள்; போதாததற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பேசுகின்றன. அதுவும் ஜனநாயகத்துடனான சமாதானம் பற்றி!

இப்போது இன்னும் கொஞ்சம் புதிதாகச் சமாதானக் குழுக்கள் முளைத்திருக்கின்றன. கலேவெல பிரதேசத்தில், பிரதேச செயலாளர் அதாவுட தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிராம அதிகாரிகளும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் மதகுருமார் களும் கலந்து கொண்டனராம். இக்கூட்டத்திலேயே கிராம அதிகாரிகள், சமாதான நீதிவான்கள், மதகுருமார்கள், ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர் போன்றோரைக் கொண்ட சமாதானக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றினுடைய பிரதான பணி இராணுவத்திலிருந்து விலகி ஓடியோரை சுதந்திரப் பொன்விழாவை ஒட்டி ஜனாதிபதி வழங்கிய காலக்கெடு முடிவடைவதற்கு முன் மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதாம்.

அதற்காகப் பிரதேசச் செயலாளர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களில் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் கிராம அதிகாரிகளிடம் கொடுத்திருக்கிறார்.

சமாதானக் குழுக்களின் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது; சமாதானத்துக்காக. அதாவது யுத்தத்துக்காக, விளக்கமாகச் சொன்னால் யுத்தம் மூலம் சமாதானத்துக்காக, இன்னும் விளக்கமாகச் சொன்னால் ஈராக்கிற்கு எதிராக யுத்தத் தொடுக்கும் முனைப்பில் இருக்கும் அமெரிக்கா சொல்வது போல என்று சொல்லலாமா?

## கோஷம் போடும் கூட்டம் !

திரும்பவும் தொழிற்சங்கப் போராட்டங்கள் தீவிரமாகத் தொடங்குகின்றன. இந்த ஒரு மாத காலத்தில் வைத்தியர்கள், தபால் ஊழியர்கள், தாதிமார்கள், தொழிநுட்ப உதவியாளர்கள் என்று அரச நிர்வாகத்தின் முக்கிய பிரிவுகளில் இத்தொழிற் சங்கப் போராட்டம் தீவிரம் பெறத் தொடங்குகிறது. அரசு இதை எப்படி முகம் கொள்ளபோகிறது என்பதிலும் இதை தடுக்க என்னென்ன சட்டங்களைக் கையிலெடுக்கப் போகிறது என்பதிலும் நாம் அவதானம் செலுத்துதல் அவசியம். ஏனெனில் எந்த ஒரு நியாமான போராட்டத்தையும் கடுமையாக நசுக்கும் குணம் கொண்ட ஒரு முதலாளித்துவ அரசே இது. இப்போது கொண்டு வந்திருக்கும் புலித் தடைச்சட்டங்கள் கூட இதற்குத் தான் பயன்படப் போகிறது என்பதில் ஐயமில்லை.

ஏனெனில், 96இல் நடாத்தப்பட்ட மின்சாரசபை ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தையும் புலிகளோடு இணைத்து ஒடுக்கியது அரசு என்பது வரலாறு. புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகிறார்கள் என்ற பாதுகாப்பு அமைச்சரின் அனுமானமே இப்போராட்டத்தினை நசுக்கப் போதுமானது. ஏற்கெனவே இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு கூட இத்தகைய குணாம்சம் இருந்தாலும் ஆகக் கடைசியில் நீதிமன்றத்திற்காகவது போகலாம். ஆனால் புதிய சட்டம் அதையும் மறுக்கிறது. எனக்கிருக்கின்ற கேள்வி எல்லாம் தென்னிலைங்கையில் மனித உரிமைகள் பேசும் அமைப்புகள், ஸ்தாபனங்கள், இடதுசாரி இயக்கங்கள் எல்லாம் இது பற்றி எந்த ஒரு பிரக்ஞையும் இல்லாமல் இருப்பது ஏன் என்பது தான். ஒரு வேளை இது ''பயங்கரவாதிகளை'' அடக்க மட்டுமே பயன்படும் என அரசு கூறுவதை நம்புகின்றன போலும். பாவம் அவர்கள் அரசுகளின் ஜனநாயக முகமூடிகளையும் மீறித் தெரியும் கோரப்பற்களை கண்டும் காணா ல் இருக்கும் கால கட்டங்களில் தான் அவர்கள் மீதான அடக்கு முறைக்கும் அனுமதி கிடைக்கின்றது என்பதை இன்னும் புரியாதவர்களாகவே இருக்கின்றனர். அப்படிப் புரியும் போது அது நாட்கள் கடந்தவையாகத் தான் இருக்கும். அதுவரைக்கும் இத்தகைய அரசுகளின் இருப்பிற்காகவும் தங்களின் வயிற்றுக்காகவும் வீதியில் இறங்கி சுலோகம் தூக்குவார்கள் இவர்கள்.

## 'நிர்வாண' பென்ஸ்

இந்நாட்டில் யார் சமாதானத்திற்கு எதிரிகள்? யுத்தத் திற்கான காரணங்களை வளர்ப்பவர்கள் யார்? எந்த ஒரு தீர்வு யோசனையையும் அது தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அடியோடு அலட்சியம் செய்யும் தீர்வாக இருந்தால் கூட முழு மூர்க்கமாக எதிர்ப்பவர் யார்?

புலிகளையே இதற்குப் பதிலாக வெளியுலகிற்குச் சொல்லி வரும் சந்திரிகா அரசு, மூர்க்கமாக யுத்தத்திற்கு ஆதரவளிக்கின்ற தும், உண்மையான சமாதான எதிரிகளுமான சக்திகளுடன் கைகுலுக்கிக் கொண்டு வெளிப்படையாகவே தன்னுடைய போலி சமாதான முகமூடியைக் கழற்றவும் தொட்ங்கி விட்டது. சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டத்தை அடியோடு நிராகரித்து, அதைக் கடுமையாக எதிர்த்து வரும் பௌத்த பீடங்களில் ஒரு பீடமான மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரிற்கு 50 இலட்சத்திற்கும் மேலான பெறுமதி கொண்ட பென்ஸ் காரினை அன்பளிப்பாக வழங்கியதன் மூலம் தானும் தன்னுடைய அரசும் பௌத்த பேரினவாத சக்திகளுடன், உண்மையான சமாதான எதிரிகளுடன் எந்த ஒரு உடன்பாட்டிற்கும், சமரத்திற்கும் தயார் என்பதை மீள ஒரு முறை வெளிக்காட்டியுள்ளது. எந்த சமாதானத்திற்காக யுத்தம் செய்கின்ற இந்த அரசு அதன் எதிரிகளுடன் கைக்குலுக்கிக் கொள்கிறது? கஷ்டப்பட்டு கட்டிக்காத்து வரும் போலி ஜனநாயக சமாதான முகமூடிகள் கிழிந்து போவதைக் கூட அது கவனத்திற் கொள்ளவில்லை. ஏனெனில் இப்படியெல்லாம் செய்தாலும் கூட அதனை சமாதான அரசு எனக் கூற தமிழ்க் கட்சிகளும், அதற்காக சுலோகம் தூக்கும் மனித உரிமைகள் அமைப்புகளும், இடதுசாரி அமைப்புகளும் இருக்கும் வரை அது ஏன் பயப்படப் போகின்றது? யுத்தத்தால் அகதியாக்கப்பட்டு மரநிழலிலும், வெற்றுத்தரையிலும், பட்டினியுடன் நோய்களையும் தாங்கி ஒவ்வொரு வினாடியும் வாழ்விற்காய் போராடி யுத்தத்தை அடியோடு வெறுக்கும் தமிழ் மக்களிற்கு அடக்கு முறையையும், பட்டினியையும் கொடுக்கும் அரசு சமாதான எதிரிகளிற்கு மட்டும் பல இலட்சம் செலவளிக்கத் தயங்காது என்பது தெளிவு.

நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் வெற்றிக்காய் சாந்தி பூசை செய்து, அதை நடாத்தும் தலைவர்களிற்கு தம்கையாலேயே பொட்டு வைத்து ஆசீர்வதித்த போதும் கப்பித்தாவத்தை மதகுருக்கள் தமிழர் என்பதால் உள்ளே போட்டு அடைத்தது போல் இது இன்னமும் கனக்க செய்யும்!

## சமாதானமே போ !

இதுவரை காலமும் இலங்கையில் பணியாற்றி வந்த சர்வதேச சமாதானப் படையை (Peace Brigades International) நாட்டை விட்டு வெளியேறுமாறு அரசு பணித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

'பக்கச்சார்பாக நடக்கிறீர்கள், ஆகவே நாட்டை விட்டு வெளியேறுங்கள்' என்ற உத்தரவே அரசிடமிருந்து அவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

இவ்வெளியேற்ற உத்தரவுக்கு வெளிநாட்டமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பாராளுமன்ற அலுவல்கள், திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு ஆகியனவே பின்னணியில் இருந்தனவாம்.

இவ்வுத்தரவின் பிரகாரம் கொழும்பு -6 அநுலா வீதியில் இயங்கி வந்த அலுவலகத்தை மூடிவிட்டு அவர்கள் ஏப்ரல் 4ம்திகதி நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

இதுவரை காலமும் இலங்கையின் மனி உரிமை மீறல்களைக் கண்காணிப்பதிலும், சமாதானத்திற்கான முன்முயற்சியிலும் ஈடுபட்டு வந்தது இவ்வமைப்பு.

ஒரு புறத்தில் சமாதானத்தைப்பற்றிப்பேசிக் கொண்டே மறுபுறத்தில் அதில் அக்கரைப் படுபவர்களை நாட்டை விட்டு வெளியேறுபவர்களை எப்படி அழைக்கலாம்?

பதிலை சமாதான, ஜனநாயகக்காரர்களிடம் விட்டு விடுவோம்!

## ETHNIC CAR AND MONEY

மார்ச் 31 செவ்வாயன்று வவுனியா ரெயிலில் வந்த 300 பேரை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்துக் கைது செய்து கொண்டு போகின்றனர் படையினர்.

அதற்கு முந்திய, பிந்திய தினங்களில் கொழும்பில் தமிழர் வாழும் பகுதிகள் அனைத்தும் சுற்றி வளைக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் விசாரணை என்ற பெயரில் கைது செய்து அழைத்துச் செல்கின்றனர் படையினர்.

கொழும்புக்கு வந்த காரணம் என்ன என்பது தான் பிரதானமான கேள்வி. நியாயமான காரணங்கள், தஸ்தாவேஜுகள், அடையாள அட்டைகள் என எவை இருந்தாலும் இதிலிருந்து தப்ப முடியாது.

யாழ்ப்பாணத்தில் நியாயமான காரணம் காட்டி படையினரின் விசாரணை, சோதனை முடித்து வந்தவர்களும் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் அரசாங்கமே அவ்வப்போது இளைஞர்களையும் யுவதிகளையும் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்து வருகிறது. தெற்கின் 'பண்பாட்டையும்', 'இன நல்லிணக்கத்தை'யும் காட்ட என்று சொல்லி.

கூட்டிவருபவர்களை கொழும்பின் பொலிஸ் நிலையங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் அழைத்துச் சென்று காட்டினால் அவர்களுக்குப் புரியும் அரசாங்கத்தின் இன நல்லிணக்கத்தின் சுயரூபம்.

மறுபுறத்தில் இவ்வாறு இங்கு அழைத்து வரப்படுபவர்களுக்கு அரசாங்கத்தின் தீர்வுப் பொதிப் பற்றிப் பாடமும் எடுக்கப்படுகிறதாம். இதற்கு பல்கலைக்கழக, புத்திசீவிகளைப் பயன்படுத்துகிறது அரசாங்கம். அதுவும் இன நல்லிணக்கத்தின் கீழ் அதாவது Ethnic Harmony யின் கீழ்.

அது என்ன Ethnic Harmony, Ethnic Car and money அல்லவா என்று நீங்கள் சொல்வது கேட்கிறது. கேட்க வேண்டியது அவர்களுக்கல்லவோ?

— கா ந. த்ரன் —

## மட்டு: மாணவியைத் துரத்தும் படையினர்

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதியான பழுகாமத்தைச் சேர்ந்த, 16வயதுடைய மாணவி இராசநாயகம் துவேனிகா, இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கப்பட் டுள்ளார். மார்ச் மாதம் 18ம் திகதி நடைபெறவிருந்த சங்கீத வாய்மூலப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக 16ம் திகதி தனது ஊரில் இருந்து வந்து கல்லடியில் தனது உறவினர் வீட்டில் தங்கி நின்று 17ம்திகதி தனது பரீட்சைக் கான அனுமதிப் பத்திரத்தை பாடசா லையில் இருந்து பெற்றுக் கொண்டு செல்லும் போது, மட்டக்களப்பு நகரில் வைத்து இம்மாணவி இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இம் மாணவி பாடசாலையில் இருந்து வெளியே செல்லும் போது 2.15மணி யாக இருந்தது. அதன் பிறகே இவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். கைது செய்யப்பட்டவுடன் இவர் பற்பொடிக் கம்பனி முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டிருக்கிறார். அங்கு வைத்து இம்மாணவி மிகவும் ஆடைகள் களையப்பட்ட நிலையில் மோசமான முறையில் தாக்கப்பட்டிருக்கிறார். இம்மாணவி விசாரணைக்கு உட்படுத் தப்படும் போது அம் முகாம் உயர் அதிகாரியும், தமிழ் இயக்க உறுப்பி னர்களும் விசாரணையை மேற் கொண்டிருக்கிறார்கள்.

அன்று மாலை 6.30 மணியளவில் இராணுவ வேன் ஒன்றில் அம்மாணவி யும், அவர் கொண்டு வந்த சைக்கிளும் ஏற்றப்பட்டு கல்லடியில் மாணவி நின்ற வீட்டில் கொண்டு சென்று விடப்பட்டிருக்கிறார்.

அன்றிரவு அந்த உயர் அதிகாரியும், இன்னும் சில சீருடையணிந்தவர்க ளும் 11 மணியளவில் வீட்டுக்கு வந்து எங்கே அந்தப் பெண் என்று மிரட்டி யிருக்கின்றார்கள். நல்ல வேளையாக அன்றிரவு மாணவி வேறு ஒரு வீட்டில் மாறி இருந்திருக்கின்றார்.

இதற்கு முன்னர் உயர்தர வகுப்பு மாணவன் மகாராஜாவை (17) சித்தா குழுவினருடன் சேர்ந்த இராணுவ புலனாய்வு பிரிவினர் கல்லடியில் வைத்து சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவத்தை ஒப்புநோக்கும் போது இம்மாணவியை கொலை செய்வதற் கான முயற்சியா இது என்பது சந்தேகமாகிறது. அன்று மகாராஜா சுட்டுக் கொல்லப்பட்ட போதும், இன்று இந்த மாணவி கண் மூடித்தன மாகத் தாக்கப்பட்ட போதும் கல்வித் திணைக்களமோ, எந்த அமைப்புக் களோ குரல் கொடுத்ததாகத் தெரிய வில்லை. 1997ம் ஆண்டில் இருந்து 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 7க்கும் மேற்பட்ட மாணவர்கள் சுட்டுக் கொல லப்பட்டிருக்கின்றார்கள். கல்வித் திணைக்களம் இவ்வாறான விடயங் களில் சிறிதளவேனும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இன்று இராணுவ சிப்பாய்களினால் வன்மு றைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இம்மாணவி தொடர்பாக எந்தப் பெண்கள் அமைப்புக்களும் குரல் கொடுக்க முன் வரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளைப் பாராட்டுவது எப்படி?

தமிழில் : அருண்

சின்ன விடயங்களைப் பெரிது படுத்தாதீர்கள். எந்த விடயத்தைப் பெரிது படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அவ்வளவுக்கு முக்கியமில்லாத குழப்படிகளைக் கவனிக்காது விட்டு விடுங்கள். சிறுவர்கள் முயற்சி செய்தலும் தவறிழைத்தலும் என்ற படிமுறையினூடாகவே கற்றுக் கொள்கிறார்கள் என்பதை மறந்து விடாதீர்கள். புறக்கணிக்கப்பட முடியாத தவறான நடத்தைகள் உடலியல் ரீதியான தண்டனையல்லாத விதத்தில் நேரடியாக எதிர்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, தெளிவாக விதிமுறைகளை அறிவித்தல், விதிமுறைகள் மீறப்பட்டால் என்ன நடக்கும் என்று விளக்குதல், ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சூழலை மாற்றியமைத்தல் என்பவற்றைச் சொல்லலாம்.

### பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களுடன்

பாடசாலைக்குச் செல்லும் வயது வரும் போது குழந்தைகள் சில முடிவுகளைத் தாமாகவே எடுக்கும் வயதை அடைந்து விடுகிறார்கள். அதாவது அவர்கள் சில வேளைகளில் பெற்றோர் சொன்னபடி செய்யாமல், தமது நண்பர்கள் அங்கீகரிப்பவற்றைச் செய்வார்கள். தம்மை ஒரு குழுவின் உறுப்பினராக குழந்தைகள் உணர்வது மிகவும் முக்கியமானது. எனவே குழந்தைகட்கு தெளிவான விதிமுறைகளை பெற்றோர்கள் அறிவிக்க வேண்டும். அத்துடன் அதன்படி நடத்தல் முக்கியமானது என்பதை விளக்கவும் வேண்டும். பெற்றோர் தமது குழந்தைகளின் நடவடிக்கைகளால் என்ன பின்விளைவுகள் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதற்கு உதவ வேண்டும். அதேவேளை அவர்கள் இந்த வயதில் இவற்றை முதல் முறையாகவே செய்கிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. குழந்தைகள் உடலியல் ரீதியாகவோ உயிர் ரீதியாகவோ பாதிப்படையக் கூடிய நிலைமைகள் உருவாக வாய்ப்புக்கள் இவ்வேளைகளில் ஏற்படலாம். அவர்களுக்கு பெற்றோர்கள் உதவ வேண்டும். நீங்கள் இந்த வயதில் ஆதரவாக தனக்கு உதவியிருக்கிறீர்கள் என்று உங்கள் குழந்தை நம்புமானால், அது உதவிக்காக மற்றச் சிறுவர்களிடம் போவதற்குப் பதில் உங்களிடமே வருவதுடன் வெளிப்படையாகவும் உங்களுடன் நடந்து கொள்ளும்.

உங்கள் குழந்தைகள் செய்யும் நல்ல விடயங்களில் கவனத்தைச் செலுத்துங்கள். பெரும்பாலான நேரங்களில் எமது குழந்தைகள் என்ன செய்யக் கூடாது என்பதை நாம் சொல்கிறோம். ஆனால் அது எதைச் செய்தால் எமக்கு விருப்பமாக இருக்கும் என்று நாம் கவனமில்லாமல் இருந்து விடுகிறோம். உங்கள் குழந்தை எதைச் செய்வதை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கச் சிறந்த முறை, அந்தக் குழந்தை செய்யும் நல்ல காரியங்களைப் பாராட்டுவதும், அதைப் பலமூட்டுவதுமாகும். பலமூட்டுவது என்பது குழந்தையை தின்பண்டம் ஒன்றை வாங்கித்தர வெளியே அழைத்துச் செல்வது, ஒரு விசேடமான வீடியோவைத் தருவித்துக் காட்டுவது, அல்லது ஒரு சாதாரண அணைப்பு அல்லது 'அது நல்ல ஒரு வேலை' என்று பாராட்டுவது, அல்லது உன்னையிட்டு எனக்குப் பெருமையாக இருக்கிறது என்றோ, 'உன்னிலே எனக்கு நல்ல விருப்பம் ஏற்படுகிறது' என்றோ தெரிவிப்பது ஆகும். குழந்தைகள் அவர்களிடம் நாம் எதை எதிர்பார்க்கிறோம் என்று கற்றுக் கொள்கிறார்கள். நாம் எதை முக்கியமாகக் கருதுகிறோம் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கா விட்டால் அவர்கள் இதை விளங்கிக் கொள்ளப் போவதில்லை.

உங்களுக்குக் கோபம் வருவதாக நீங்கள் உணர்ந்தால், அந்த இடத்தை விட்டு வெளியேறி விடுங்கள். உங்கள் கவனம் தம்மீது இருக்கிறது என்பதை ஒரு பெறுமதியான விடயமாகக் குழந்தை கருதுகிறது. நீங்கள் வெளியேறி விடும் போது அதன் மீதான உங்கள் கவனம் இல்லாமல் போவதால் அது தான் தண்டிக்கப் பட்டு விட்டதாக உணர்ந்து கொள்கிறது. உண்மையில் நீங்கள் அமைதியுறும் போதே அது தண்டிக்கப்படுகிறது.



PHOTO : JANAK MAYADUNNA

குழந்தையின் தோள்களை இறுகப் பிடித்து அதன் கண்களை நேராகப் பார்த்து நீங்கள் உறுதியாகச் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்.

உங்களது எதிர்பார்ப்பில் எப்போதும் ஒரே மாதிரியாக இருங்கள். தவறான நடவடிக்கை குறித்த உங்கள் எதிர்வினை எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். குழந்தையைப் பராமரிப்பவர்களும் அவ்வாறே செய்கிறார்கள் என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள். ஒரே மாதிரியாக நடந்து கொள்ளல் என்பது ஒரு நல்ல கற்பித்தல் ஆகும்.

உங்களுக்கும் உங்கள் குழந்தைக்குமிடையில் தொடர்பாடலுக்கான வழிகளைத் திறந்து வையுங்கள். இதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய விதத்தில் உங்கள் தேவைகளை வெளிப்படுத்த முடியும்.

பேசித்தீர்த்தல் முறைமை, பிரச்சினைகளைத்-தீர்க்கும் திட்டங்கள் என்பனவற்றை குழந்தைகட்கு கற்பிப்பதுடன் மாதிரிகளையும் காட்டுங்கள். கோபத்தையும், எதிர்ப்புணர்வையும் கட்டுப் படுத்துவதன மூலம் எப்படி சிறப்பான முறையில் முரண்பாடுகளைத் தீர்க்க முடியும் என்று காட்டுங்கள்.

நீங்கள் உங்கள் குழந்தை ஒரு குறிப்பிட்ட விதத்தில் இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்பதை விளக்குங்கள். அத்துடன் அது ஏன் அப்படி நடக்கவில்லை என்ற அதன் விளக்கத்தையும் காது கொடுத்துக் கேளுங்கள். இவ்வாறு நடப்பதால் ஏற்படும் விளைவுகளை அது தெரிந்து கொள்ள விடுங்கள். அது ஒரு புத்திசாலித்தனமான முடிவை எடுப்பதற்கு அவசியமான தகவல்களை வழங்குங்கள்.

தெளிவான விதிமுறைகளை உருவாக்கி அதன் படி ஒழுகுங்கள். ஒரு தவறான நடத்தைக்கு என்ன விளைவு வரும் என்று நீங்கள் சொன்னீர்களோ, அதை நடைமுறைப்படுத்துங்கள். உங்களது வார்த்தைகள் உறுதியானவை என்பதை அவர்கள் உணர வேண்டும். ஆனால், நீங்கள் சொல்லும் 'விளைவுகள்' நியாயமானவையாகவும் நடைமுறைப் படுத்தப்படக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். எந்தக் குழந்தையையும் ஒரு பெற்றோர் இரண்டு வாரங்களுக்கு ஒரு அறையில் தடுத்து வைக்க முடியாது. அது மட்டுமல்ல அப்படி அவர்கள் செய்யவும் கூடாது. ஆனால் தடுக்கப்பட்ட ஒரு பிரதேசத்திற்கு உங்கள் குழந்தை தன் சைக்கிளை ஓட்டிச் செல்லுமாக இருந்தால் அதற்கு அந்தச் சைக்கிளை ஒரு நாளைக்கோ அதிகமாகவோ பாவிக்க அனுமதிக்காமல் விடலாம். குழந்தையின் தவறின் அளவைப் பொறுத்து!

### நான் எனது குழந்தையை அடித்தால் நான் ஒரு கூடாத பெற்றோரா?

பெரும்பாலான பெற்றோர்கள் சில சந்தர்ப்பங்களில் மன அழுத்தத்துக்குள்ளாவதுடன் ஆதரவற்றவர்களாகவும் தம்மை உணர்கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் தாம் ஒரு பெற்றோராக இருப்பதற்குரிய தன்மைகளை இழந்து விடுவது ஆச்சரியத்திற்குரியதல்ல. அனேகமாக எல்லோரும் அவ்வப்போது பெற்றோரின் இயல்பை இழந்து விடுவது உண்டு. சில நேரங்களில் அவர்கள் குழந்தைகளை அடித்து விடுவதும் உண்டு. முக்கியமானது என்னவென்றால், உண்மையில் தாங்கள் தான் நிதானமிழந்து விட்டோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பது தான். இம்மாதியான நிலைமைகளைக் கையாள எப்போதும் வேறு சிறந்த வழிகள் இருக்கின்றன. உண்மையில் கைவிடப்பட வேண்டியது என்னவென்றால் அடித்தல், அடித்தற்காகக் கவலைப்படல், 'திருந்துவதற்காக அனுமதித்தல்' பிரச்சினைப்படல் பிறகு அடித்தல் என்ற வட்டத்தில் திரும்பத் திரும்பச் செல்லல் தான். நீங்கள் கோபம் கொண்டு குழந்தையை அடித்து விட்டால் அடுத்த தடவை அடிக்காதிருப்பதற்காக உறுதியாகவும் பொறுப்புணர்வுடனும் முடிவெடுங்கள். அதுதான் முக்கியம்.

*பெரும்பாலான கனேடியர்கள் குழந்தைகளை அடிப்பதைத் தவறு என்று கருதுகிறார்கள். 80%க்கு மேற்பட்டவர்கள் தாம் தமது குழந்தைகளை அடித்ததற்காக வருத்தப்படவோ, கழிவிரக்கம் கொள்ளவோ செய்கிறார்கள். இது பெற்றோர் தாம் குழந்தைகளை அடிப்பது அதற்கு நல்லது செய்வதற்காக அல்ல, மாறாக தமது சொந்த எரிச்சல் உணர்வு காரணமாகவே என்பதையே காட்டுகிறது.*

*''வார்த்தைகளால் எமது குழந்தைகளை எம்மால் வென்றெடுக்க முடியாவிட்டால் அடித்தல் மூலமாக அதை ஒரு போதும் செய்ய முடியாது.''*

**-சுவீடிஷ் பாராளுமன்ற உறுப்பினர்**

## தொண்டாவின் துரோகங்கள் ! விடுபட்டவை இவை :

பெப்ரவரி இதழ் 141, பக்கம் 10ல் தொண்டமானின் துரோகங்கள் எனும் தலையங்கத்தின் கீழ் வெளியான தங்கள் கருத்துக்களுடன் பின்வரும் துரோகங்களையும் பட்டியல் போட்டுக் காண்பிக்கும்படி வேண்டுகின்றேன்.

1. பெருந்தோட்டத் துறைத் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு கட்டியெழுப்பிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனத்திலிருந்து முக்கிய தலைவர்களான அசீஸ், வெள்ளையன், இராஜலிங்கம் போன்றவர்களை வெளியேற்றத் திரைமறைவில் சதி செய்தமை.
2. புதிய சந்தாப்படிவங்களை கையளித்து சிதைந்து போகும் காங்கிரஸ் சங்கத்துக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கும் தந்திரோபாயம். காலத்துக்கு காலம் வேலைநிறுத்தம் செய்விப்பதும், பின்னர் அது தனக்குச் சாதகமானதும் பின்வாங்குவதும்.
3. 1983ம் ஆண்டு ஜூலைமாதம் இலங்கையில் நடைபெற்ற வன்செயல்களை கொஞ்சமேனும் கண்டிக்காமல், ஐ.தே.க மந்திரி சபையில் சுயலாபத்துக்காக தொடர்ந்து ஒட்டிக்கொண்டு, அதில் இருந்து விலகாமல் தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு துரோகம் செய்தமை.
4. 1977ம் ஆண்டுக்கு முன்னர் மலையகத்தில், அன்றைய ஆட்சியாளர்கள் சுவீகரிக்க திட்டமிட்ட 8000 ஏக்கர் காணிப்பங்கீட்டு விடயத்தை எதிர்த்த போது காலஞ்சென்ற சிவனுலட்சுமணன் சூடுபட்டதை தேர்தல் குண்டாக பாவித்து பின்னர் வாக்குப் பிச்சைக் கேட்ட தொண்டமான், ஐ.தே.க ஆட்சியின் போது 17 ஆண்டுகள் தோட்டக் காணிகளில் வெளியார் குடியேற்றம் செய்யப்பட்டதை தெரிந்தும் தெரியாதது போல் நடிப்பது.
5. பயங்கரவாத தடைச் சட்டத்தின் பேரில் மலையகத்தில் கைது செய்யப்பட்ட குற்றமற்றவர்களின் விடுதலைக்காகப் போராடாமல் அரசுக்கு பக்கச் சார்பாக செயல்பட்டு வருவது.
6. அரசியல் செல்வாக்கைப் ப்யன்படுத்தி தனது குடும்ப உறுப்பினர்களான, மகன் இராமநாதன் அவர்களை கல்வியமைச்சராகவும், பிரசாவுரிமையற்ற தனது பேரனை இலங்கைப் பிரசையாகவும், அதன் பின்னர் இ.தொ.காவில் ஜனநாயக மரபுகள் அனைத்தையும் மீறி உயர் பதவியில் அமர்த்தியமை.
7. மலையகக் கல்வி வளர்ச்சிக்கு இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் முட்டுக்கட்டையாக செயல்படுவது.

→19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “தந்தைவழிச் சம்பிரதாயங்களே பெண்களை நிர்ணயிக்கின்றன”

— குமாரி ஜெயவர்தனா







குமாரி ஜெயவர்தனா

***உலகத்திற்கு முதலாவது பெண் பிரதமரை வழங்கிய இலங்கையில், தற்போது அரசாங்கத்தின் தலைவியாக ஒரு பெண் தொழிற்படுகின்றார். இவ்வாறு இலங்கையில் பெண்களின் அரசியல் பங்களிப்புகள் உயர்வாகக் காணப்படுவதனால், பெண்களின் சமூக நிலை உயர்ந்துள்ளதெனக் கூற முடியுமா?***

உலகத்தில் முதல் பெண் பிரதமராக ஒரு பெண் பதவியலமர்ந்தமை 60களில் இடம் பெற்றதொரு சம்பவமாகும். அது அன்று போல் இன்றும் பெருமை கொள்ளக் கூடிய விடயமாகும். எனினும், அரசாங்கத் தலைமைத்துவத்தை ஒரு பெண் ஏற்றுக் கொண்டதனால், நாட்டின் ஏனைய பெண்களின் நிலையும் உயர்வடையும் எனக் கூறமுடியாது.

பெண்களுக்கு இருக்கும் பொதுப் பிரச்சினைகள் தொடர்பாக பெண்கள் இன்னும் அறிவுபூர்வமாக செயற்பட வேண்டும். அரசாங்கத்தின் தலைவி பெண்ணாக இருக்கும் பட்சத்தில், நாட்டின் ஏனைய பெண்களுக்கும் விடுதலை கிடைத்து விட்டது என எண்ணுவது தவறு. எமது நாட்டின் மக்களிடையேயும், ஏன் வெளிநாட்டில் உள்ள பலரிடையேயும் இந்தத் தவறான அபிப்பிராயம் உள்ளது. ஒரு பெண் ஜனாதிபதியானவுடன் நாட்டில் தாய் வழிச் சமூகம் தோன்றி விடாது.

எமது நாட்டுப் பாராளுமன்றத்தில், பெண்களின் பிரதிநிதித்துவம் 10%க்கும் குறைவானதே. மாகாண சபை மட்டத்தில் இது 1%ம் மட்டுமே. அரசியல் பங்களிப்புத் தொடர்பாக எந்தவித சட்டக் கெடுபிடிகளும் இல்லாத நிலையில், இவ்வாறு குறைவான பெண்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவது பற்றிப் பெண்கள் வெட்கப்பட வேண்டும். மாகாண சபை வேட்பாளர்களில் 25% பிரதிநிதித்துவம் பெண்களுக்கு ஒதுக்கப்படும் யோசனை வெற்றியளிப்பின் அது பெண்கள் பெற்றுக் கொள்ளும் பெருவெற்றியாக அமையும்.

***பெண்களினது அரசியல் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவது தொடர்பான செயற்பாடுகளை, நடைமுறைப்படுத்துவது கடினமான காரியமல்லவா?***

அரசியலில் பிரவேசிக்கும் பெண்களுக்கென பயிற்சி நெறிகளை மேற்கொள்ள, அவர்களை உற்சாகமூட்ட நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனினும் இன்றைய அரசியல் நடைமுறைகள் தொடர்பாக பெண்களிடையே அதிருப்தி காணப்படுவதாகத் தோன்றுகின்றது. வன்முறைச் செயல்கள், ஏழ்மை, குடும்பத்தினரின் மற்றும் ஆண்களின் எதிர்ப்புணர்வு போன்ற காரணங்களினால் பெண்கள் அரசியலுக்கு வரத் தயக்கம் காட்டுகின்றனர் என நாம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலைமையைச் சரிசெய்ய பெண்களுக்காக பெரும் காரிமாற்ற வேண்டிய தேவை எமக்கு உள்ளது என்பதே எனது கருத்து.

***அரசியல் தலைமைத்துவத்தினை ஏற்ற கணவன்மார்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களது துணைவிமார் அரசியலுக்குள் பிரவேசிப்பது ஆசிய நாடுகளில் அதிகம் இடம் பெறுகிறது. இது தொடர்பாக உங்களது அபிப்பிராயம் யாது?***

இது தொடர்பாக நாம் அதிக கவனம் எடுத்து வருகின்றோம். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் ஆட்சி நிர்வாகம், அரசியல் குடும்பங்களுக்கு உரித்தாவதைக் காணக் கூடியதாக உள்ளது. இது ஒரு விதத்தில் அரச பரம்பரை ஆட்சிமுறைக்கு ஒப்பானது.

தெற்காசியாவில் நிலவிவரும் இவ் அரசியல் தொடர்பாக பொது மக்களிடமே கேள்வி கேட்க வேண்டும். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அரசியலுக்கு வரத் தயக்கம் காட்டுகின்ற போதிலும், அரசியல் குடும்பங்களில் இந்நிலைமை வேறுபட்டதாகவே உள்ளது. அவர்கள் சிறுவயது முதலே அரசியல் தொடர்பாக பரிச்சயம் கொண்டிருக்கின்றனர். இந் நிலைமைக்கு இது ஒரு காரணமாகும்.

இந்து, பௌத்த கலாசாரம் நிலவும் நாடுகளில், அனைத்தையும் தமது கலாசாரத்துக்குள் உள்வா[illegible]கும் இயல்பு காணப்படுகின்றது. இந்து மதத்தின்படி, புத்தர் கூட கிருஷ்ணனின் அவதாரம் எனக் கருதப்படுகின்றது. இதன்படி இவர்களது குடும்பத்தில் இணையும் வேறு நபர்களால் கூட குடும்ப அங்கத்தவர்களாகி விடுகின்றமையைக் காணலாம். சோனியா இத்தாலியப் பெண் என்ற போதிலும் திருமணத்தின் பின் இந்திய, இந்துக் குடும்பத்திற்கு உரித்தானார். இந்தியத் தலைவர்கள் பலர் இருக்கும் போது சோனியாவுக்கு காங்கிரஸ் கட்சியில் விசேட இடம் கிடைத்தமை தொடர்பாகச் சர்வதேச மக்கள் வியப்புற்றுள்ளனர். எனினும், இன்று சோனியா இத்தாலியப் பெண்ணல்ல. அவரது இந்திய இயல்புகள், இந்திய மக்களின் வரவேற்புக் குள்ளானது. ஆங்கிலப் பெண்ணான டொரின் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கையில் இவ்வாறான வரவேற்பு இருந்தது. 1952 தேர்தலில், அக்குரஸ்ஸை தொகுதி மக்கள் அவருக்கு வாக்களித்ததும் இதனாலே தான். அவரது எதிராளியான சரத் விஜேசிங்க, தேர்தல் கூட்டங்களின் போது வெள்ளைக்காரப் பெண்ணுக்கு வாக்களிக்க வேண்டாமெனக் கோரியிருந்தார். எனினும் மக்கள் அவரை வெளிநாட்டுப் பெண்ணெனக் கருதவில்லை.

பெண், திருமணமான பின்னர் அவளது அடையாளத்தை இழந்து குடும்பத்தின் ஒரு பகுதியாகி விடுகிறாள். அவளது பெயர் கூட மாற்றமுறுகின்றது என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே கணவனின் பின் அரசியலுக்கு வர இயல்பாகவே அப் பின்னணி வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

ஒரு உருவத்தில் பாதி ஆண், பாதி பெண் எனக் கூறப்படுகின்றது. இதனால் மேலிடத்தில் இருப்பது ஆணா, பெண்ணா என்பது பிரச்சினைக்குரியதல்ல. எனவே இவ் அனைத்து விடயங்களும் இங்கு செல்வாக்குச் செலுத்துகின்றதெனலாம்.

***எவ்வளவுதான் சமூகம் மாற்றத்தைக் கண்ட போதிலும் பெண்களுக்கு தொழிற்துறையில், ஆடைத் தொழிற்சாலை, ஆசிரியர் பணி மற்றும் பராமரிப்புச் சேவை என்பனவற்றிலேயே அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்நிலைமையை நீங்கள் எவ்வாறு இனங் காண்கிறீர்கள்?***

ஆண்களை விட பெண்களை நிர்வகிப்பது இலகுவானது என்ற கருத்து நிலவி வருகின்றது. இது பெண்களுக்கு உழைப்புச் சந்தையில் இவ்வாறான வாய்ப்பு[illegible]ழக் காரணமாக அமைந்து [illegible]கின்[illegible]. எவ்வாறாயினும், தொழில் காரணமாக பெண்களுக்கு பொருளாதார மற்றும் வேறு சுதந்திரங்கள் கிடைத்துள்ளன என்றே கூற வேண்டும். தொழிற்சாலைகளில் வேலை செய்வதால் கூட்டுப் பொறுப்புகள், கருத்துகள் ஏற்படுகின்றன. மத்திய கிழக்கிற்கு தொழில் புரியச் செல்லும் பெண்களுக்கும் இவ்வாறான நன்மையான விடயங்கள் ஏற்படுகின்றன. இதனால் பெண்களை மத்திய கிழக்கிற்குச் செல்ல தடைவிதிக்காது, வேலை நிபந்தனைகளை அதிகரிப்பது தொடர்பாக அரசு அதிக அவதானம் செலுத்த வேண்டும்.

***21ம் நூற்றாண்டை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் கூட, பெண்கள் தொடர்பான சமூகக் கருத்துக்கள் இன்னும் பெரும் மாற்றத்தை எதிர் நோக்கவில்லை அல்லவா?***

முன்னைய சமூகத்தில் பெண்களது பொறுப்புகளாக மனைவி, மற்றும் தாய் எனும் பாத்திரத்தை வகித்தலே தலையானதாக இருந்தது. பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்ற கருத்து மாற்றமுற்று இன்று பெண்கள் கல்வி கற்கின்றனர். எனினும், இதுவரை தந்தை வழி சமூகத்தினாலேயே பெண்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றனர்.

சமூகத்தின் அடிப்படை குடும்பம் எனக்கூறின் பெண்களுக்கு பெரும் அழுத்தம் ஏற்படுவது குடும்பத்தினாலாகும். பெண் குழந்தை ஒன்று பிறந்தது தொடக்கம் திருமணம் செய்து வைக்கவே அவள் ஆயத்தம் செய்யப்படுகிறாள். பெரியவர்கள் அவளை எவருக்காவது 'வழங்கவே' முயற்சி எடுக்கின்றனர். பெற்றோர், உறவினர், அயலவர் போன்ற அனைத்துப் பகுதியினரும் பெண்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். இதனைப் பெரும் துன்பமாகவே நான் காண்கின்றேன். இப் பழமையான கருத்துக்களில் எவ்வித மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை.

***எமது கலாசாரம் இந்திய அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருந்தாலும், இந்தியப் பெண்களை விட உயர் சுதந்திரத்தை எம் பெண்கள் அனுபவிக்கிறார்கள் அல்லவா?***

இந்தியா பெரும் மாறுபாடுகளைக் கொண்ட நாடு. கேரளப் பெண்கள், பிற மாநிலப் பெண்களை விட உயர் வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருக்கின்றனர். எனினும், இலங்கைப் பெண்களின் நிலை உயர்வானது. ஆனால் இந்தியப்பெண்கள் ஒரு சில துறைகளில் அடைந்துள்ள முன்னேற்றம் இலங்கைப் பெண்களிடையே ஏற்படவில்லை.

இந்தியாவினைப் போன்று சீதனக் கொடுமைகள் இலங்கையில் இல்லாத போதும் இலங்கையிலும் சீதனப் பிரச்சினைகள் உண்டு. சீதனப் பிரச்சினைகள் மோசமாக இல்லையெனக் கூறி அதனை மறைப்பது தவறானதாகும். அத்துடன் சாதிப் பிரச்சினை நமது சமூகத்தில் அதிகம் இருப்பதனையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

***பாலியல் வல்லுறவுச் சட்டங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் தொடர்பாக, உங்களது அபிப்பிராயம்?***

ஆகக்குறைந்த திருமண வயது மாற்றப்பட்டுள்ளது. காலனித்துவத்திலிருந்து நிலவி வந்த அவ்வயது வரையறை மாற்றப்பட்டுள்ளது தொடர்பாக, தற்போதைய அரசாங்கத்துக்கு நன்றி சொல்ல வேண்டும். பாலியல் சித்திரவதைகள் தொடர்பாகவும் சட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை பெண்கள் சந்தோசப்பட வேண்டிய விடயங்கள்.

***எனினும், பாலியல் வல்லுறவு தொடர்பான திறந்த நீதிமன்ற விசாரிப்புகள் பெண்களை பாதிப்புறச் செய்வது பற்றி?***

பெரும்பான்மையான நாடுகளில் திறந்த நீதிமன்றங்களில் இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. நம் நாட்டிலும் அவ்வாறான தீர்மானத்தை எடுக்க நீதிவான்களுக்கு உரிமையுண்டு. அதேபோல் பெரும்பாலான நீதிவான்களது தந்தை வழி சமூக ஏற்க்களை விமரிசனத்துக்குட்படுத்த வேண்டும். பாலியல் வல்லுறவு வழக்குகளில் பெண்ணைப் பற்றிய விசாரிப்புகள் தேவையற்றதாகும். சம்பவத்தை விட பெண்ணின் பாத்திர விசாரிப்புகள் பெரும்பாலான நாடுகளில் சட்டரீதியாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

***பிலிப்பீன்ஸ், பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற நாடுகளைப் போன்று இலங்கையிலும் நீண்டகால, துன்பகரமான அரசாங்க நிர்வாகத்தை கலைக்க, பெண்கள் தலைமைத்துவம் வழங்குவதை நீங்கள் எங்ஙனம் அவதானிக்கின்றீர்கள்?***

பொய் மாயைகளைக் கலைத்து விட்டுப் பார்த்தால், பெண்கள் மிகவும் துணிவானவர்கள். தமது பிள்ளைகளுக்கு ஏதாவது துன்பம் நேர்கையில் முன்வந்து போராடும் குணம் பெண் விலங்குகளுக்கும் உண்டு. அரசியல் உலகத்திற்குள் பெண்கள் வந்து போராடும் போது இவ்வாறான தியாகங்களைச் செய்வதைக் காண முடியும்.

***விளம்பரங்களில் பெண்கள் மோசமாகச் சித்திரிக்கப்படுவதைப் பற்றி?***

இவ் விளம்பரங்கள் நமக்கு பெரும் பிரச்சினைகளைத் தருகின்றது. கார், டயர், சவர்க்காரம் போன்றவற்றை விற்க பெண்களைப் பயன்படுத்துகின்றனர். உடைகளைக் கழுவுதல், உணவு சமைத்தல், தைத்தல் போன்றவற்றுக்கும் தான் பெண்களை பயன்படுத்துகின்றார்கள். வேறு நாடுகளில் ஆண்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதைக் காட்டுகின்றனர். எமது நாட்டில் அவ்வாறில்லை. ஒரு காப்புறுதி விளம்பரத்தில் மகனின் கல்விக்காகவும், மகளின் சீதனத்துக்காகவும் காப்புறுதியில் இணையும்படி கோரியிருந்தனர். பெண்கள் அமைப்புக்களின் தீவிர எதிர்ப்பினால் அவ்விளம்பரம் நீக்கப்பட்டது.

***பாடசாலைப் புத்தகங்களில் கூட பெண்கள் பிற்போக்கு கருத்துக்களுக்கேற்பத் தான் சித்திரிக்கப்படுகின்றார்கள் அல்லவா?***

நாம் இவ்விடயம் தொடர்பாக சுமார் 25 வருடங்களுக்கு முன்னரே கற்கையில் ஈடுபட்டோம். தாய், வீட்டைப் பெருக்குதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடும்போது தகப்பன், பத்திரிகை வாசித்துக் கொண்டிருப்பார். பாட்டியும், தாயும், தமக்கையும் கீழே நிலத்தில் அமர்ந்திருக்கும் பொழுது, மகன் கதிரையில் அமர்ந்திருந்து புத்தகம் படிக்கும் வகையில் சித்திரங்கள் தமிழ்ப் பாடசாலைப் புத்தகங்களில் தீட்டப்பட்டிருந்தன. தற்போது இந்நிலைமை மாற்றமுற்றுள்ள போதிலும், முழுமையாக பெண்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

பெரும்பாலான பழமொழிகள் கூட பெண்களுக்கு எதிரானதே. சமூகத்தில் நிலவும் இப் பிற்போக்கு நிலைமையை மாற்றுவது முக்கியமான கடமையாகும்.

***தமிழில்: ரத்னா***

***நன்றி :ராவய***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







'மணிக்கொடி தமிழகத்தின் சிறுகதைத் துறைக்கு எப்படி ஒரு உத்வேகத்தைக் கொடுத்ததோ அதே போல் 'மறுமலர்ச்சி' ஈழத்தின் சிறுகதைத் துறைக்கு அளித்த பங்களிப்பு முக்கியமானது.
மறுமலர்ச்சிக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் அ.செ.முருகானந்தன், தி.ச. வரதராசன், ச. பஞ்சாட்சரசர்மா ஆகியோர்.
1946 இலிருந்து 1948 வரை வெளியான 24 இதழ்களில் மொத்தம் 52 சிறுகதைகள் பிரசுரமாகியிருந்தன.
அவற்றுள் 16 படைப்பாளிகளுடைய 25 சிறுகதைகளை செங்கை ஆழியான் தொகுத்திருக்கிறார். வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, அமைச்சு 'மறுமலர்ச்சி சிறுகதைகள்' என்ற தலைப்பில் அவற்றைப் பதிப்பித்திருக்கிறது.
அதிலிருந்து அ.செ.மு. வின் 'மாடு சிரித்தது' என்ற கதையை நன்றியுடன் பிரசுரம் செய்கின்றோம்.
ஆ-ர்

# மாடு சிரித்தது

அ.செ.முருகானந்தன்



பல நாட்களுக்குப் பிறகு வண்டிக்காரக் கார்த்திகேசுவை மறுபடியும் சந்தித்தேன். ரயிலடிக்கு யாரையோ கொண்டுபோய் விட்டுவிட்டு வெறும் வண்டியோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் என்னைக் கண்டதும் வண்டியை நிறுத்தி என்னை ஏறிக்கொள்ளச் சொன்னான். 4 1/2 மைல் தூரத்துக்கும் கால் - கோச்சில் போக நடந்து கொண்டிருந்த நான் இந்த வசதியைத் தப்ப விடுவேனா? ஏறிக் கொண்டேன்.

கார்த்திகேசுவின் வண்டியில் ஏறினால் என்னால் பேசாமலிருக்க முடிவதில்லை. வண்டியில் உட்கூடாரத்திலே ஒரு ஓரமாக ஒட்டியிருந்த எலக்ஷன் நோட்டீஸ் ஒன்று கண்ணில் பட்டதும் பேச்சைத் தொடங்கினேன்.

''ஓஹோ! கௌன்சிலுக்கு ஆள்பிடி வேலை வெகு மும்முரமாக நடக்கிறது போலிருக்கிறதே! நீ யார் பக்கம் அண்ணே? உன்னுடைய குறிச்சியில் இந்த அமளிகள் எப்படியிருக்கிறது?'' என்று இரண்டு மூன்று கேள்விகளோடு பேச்சை ஆரம்பித்து வைத்தேன்.

மடியிலிருந்த புகையிலையில் ஒரு துண்டைக் கிள்ளி உருட்டி வாய்க்குள் குதப்பிக் கொண்டு ஓர் அலட்சியமான சிரிப்போடு, ''பக்கமாவது, பரிசாவது தம்பி, எங்களுக்கு இதைப்பற்றியெல்லாம் என்ன தெரியும்? பரியாரியார் என்ன சொல்லுகிறாரோ அந்தப்படி செய்கிறதுதான். அவர்தான் இந்த நோட்டீஸைக் கொண்டு போய் ஒட்டச் சொல்லித் தந்தார். அவர் எனது நெற்றியிலே ஒட்டச் சொன்னாலும் ஒட்டிக் கொள்வேன். புண்ணியவான் கனகாலம் இருக்க வேண்டும்!'' - என்று இரண்டு கையும் எடுத்து மேலே பார்த்துக் கும்பிட்டான்.

அவன் பராக்காயிருப்பது அவனுடைய மாடுகளுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவை சற்றே உல்லாச நடைபோடத் தொடங்கின. கார்த்திகேசு எனக்குப் பதில் சொல்லிவிட்டு முன்னே குனிந்து அவைகளுக்குச் சத்தம் காட்டி மறுபடியும் முறுக்கி விட்டான். வண்டி கடகடத்துக் கொண்டு சென்றது.

''யார் அது, கந்தையாப் பரியாரியார்தானே? உனக்கும் அவருக்கும் அதிகம் கடமை உண்டு போலே'' என்று மெல்லக் கிளறினேன். ''கடமையாவது கடமை, தம்பி நீங்கள் எல்லோரும் சின்னப் பிள்ளைகள். உங்களுக்கு அந்த மனுஷரைத் தெரியாது. பூலோகத்திலே பரியாரியாரைப்போல ஒருத்தர் இரண்டு பேர் இருக்கிறபடியால்தான் மழை பெய்கிறது, என்று நினைத்துக்கொள். கார்த்திகேசு இன்றைக்கு உயிரோடிருக்கிறது அந்தப் பிரபுவாலே தான். இல்லாவிட்டால் இவ்வளவுக்குச் செத்த இடத்தில் புல்லுக் கூட முளைத்துப் போயிருக்கும்!''

''ஓகோ, அப்படியோ? அவ்வளவு பெரிய காரியமா அதென்ன?''

''எனக்கு ஒன்றுமில்லை, தம்பி, என்னுடைய பெண்சாதிக்குத்தான் ஒருமுறை ஒரு வருத்தம் வந்தது. வருத்தமாவது வருத்தம். இரண்டு வருஷத்துக்கு முன்னம் என் பெண்சாதிக்கு வந்த வருத்தத்தைப் போல உலகத்திலே யாருக்கும் வந்து நான் பார்க்கவில்லை. வைத்தியர்மார் எல்லோருமே கைவிட்டு விட்டார்கள். மானிப்பாயிலே கூட வீட்டுக்குக் கொண்டு போகச் சொல்லி விட்டார்கள். வீட்டிலே ஏழு நாளாய் அடுப்பு மூட்டவில்லை. பிள்ளை குட்டிகள் எல்லாம் ஏங்கிப்போய்க் கிடந்தன. வீட்டுக்கு லட்சுமிபோல இருந்தவள். அவளுக்கு இப்படி ஒன்று என்றால் எனக்குப் பாதிப்பிராணனே போயிருநத சமயத்தில்தான் இந்தப் புண்ணியவாளன் வந்து சேர்ந்தார், அப்பா ஒரு நாளை மருந்து. ஒரே ஒரு நாளை மருந்து தம்பி. ஒரு கிழமை அறிவு நினைவில்லாமல் கிடந்த என் பெண்சாதி அந்த மூன்று நேர மருந்துக்குப் பிறகு கண்முழித்துப் பார்த்து என்னைக் கூப்பிட்டாள், தம்பி! ஆகா! அதை மறக்க முடியாது. தெய்வம்தான் வந்துவிட்டது போலிருந்தது எனக்கு. இருந்த ஆனந்தத்தில் மற்றநாள் பரியாரியார் வீட்டுக்கு வந்தபோது அவரை விழுந்து கும்பிட்டேன், தம்பி. என்ன இருந்தாலும் அந்தக் காலத்துப் பரியாரிமார்கள் தெய்வப் பிறவிகள்தான் செத்துப் போனாலும் அவர்கள் பூங்காவனத்தில் தான் இருப்பார்கள்....''

அவனது நா தழதழத்தது. கண்கள் கலங்கின. பழமை உணர்ச்சியில் ஆழ்ந்து போய் விட்டான். பாவம்!

எனக்கு அவனைப் பார்க்க ஒரு பக்கம் வருத்தமாயுமிருந்தது. அவனைப் பார்க்காமால் முகத்தைத் திருப்பிக் கொண்டாலோ சிரிப்புப் பொங்கிக்கொண்டு வந்தது.

கொஞ்சத் தூரம் வண்டி போன பிற்பாடு பேச்சைச் சாவகாசமாகத் தொடங்கினேன்.

''அப்போ இந்தக் கௌன்சில் அடிபிடியிலே நீ பேரம்பலம் பக்கமுமில்லை. பெரியண்ணர் பக்கமுமில்லை. பரியாரியின் பக்கம் என்று சொல்லு'' என்று தூண்டினேன்.

''ஏன் பரியாரியார் பெரியண்ணர் பக்கம்தானே வேலை செய்கிறார்...!! தெரியாதோ?'' என்று திருப்பிக் கேட்டான் அவன்.

''அந்த நோட்டீஸைப் படித்துப் பார்த்தால் அவர் யார் பக்கமென்று தெரியும்'' என்றேன்.

அதை நான் படித்துப் பார்க்கவில்லைத் தம்பி, எனக்குத் தெரியும், எப்படியும் பரியாரியார் பெரியண்ணர் பக்கம்தான் வேலை செய்வார் என்று?

''அதெப்படி?'' என்று வெகு ஆவலோடு கேட்டேன்.

''நீ என்ன தம்பி எடுத்ததுக்கெல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாய்? உலகத்திலே நடக்கிறது ஒன்றுமே உனக்குத் தெரியாது போலிருக்கு. கொஞ்ச நாளைக்கு முந்தி நடைபெற்ற அந்த வேலைக்காரப் பெண் கொலை வழக்கில் - பெரியண்ணர் அப்புக்காத்து, அவ்வளவு பாடுபட்டு சட்டவித்தை பேசி வெல்லாவிட்டால் பரியாரியார் செய்த வேலைக்கு அவர் கழுத்தில் கயிறு அல்லவா மாட்டியிருப்பார்கள் கோட்டில?''

''ஓகோ, அதற்காகவா? அப்படியானால் அவர் நிற்பது சரிதான். பெரியண்ணர் செய்த உதவிக்கு இதுவும் செய்யலாம். இன்னமும் செய்யலாம்'' என்று அவனோடு சேர்ந்து பாடிவிட்டேன்.

இப்படி நான் சொன்னபோது என்னுடைய முகத்தில் எதைக்கண்டு கொண்டானோ தெரியாது, தன்னுடைய பிரசாரத்தை என்னிடமுங் கொஞ்சம் காட்டத்தொடங்கி விட்டான்!

''ஏன் தம்பி, பெரியண்ணர் மகாகெட்டிக் காரரும், நல்லவரும் என்று சொல்லுகிறார்களே. நீ அறியவில்லையா? யுத்தக் காலத்திலே ஏழை மக்களுக்கு அநேகம் உதவிகள் செய்திருக்கிறாராம். தீனி இல்லாமல் சாகக் கிடந்த மாடுகளுக்குச் சீமையிலேயிருந்து பருத்திக் கொட்டையும், பிண்ணாக்கும் எடுப்பித்துக்கொடுத்தாராம். நாங்கள் அவருக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறோம். பரியாரியாருடைய மகனுக்குக் கொழும்பில் வேலையாக்கி விட்டது யார் என்று நினைக்கிறீர்? என்னுடைய பொடியனையும் நெடுகப் படிப்பிக்கச் சொல்லியிருக்கிறார் பரியாரியார்'' என்று மேலும் பேச இழுத்தான்.

''அடடே உனக்கும் இதெல்லாம் தெரிந்து விட்டது போலிருக்கே. எங்கே அந்த நோட்டீஸை இங்கே எடு பார்ப்போம். என்று அதைக் கேட்டு வாங்கிப் பார்த்தேன். எனக்குப் பெரும் வியப்பாயிருந்தது. ஏன்?

அது பெரியண்ணருக்கு மாறாக அவரது எதிர்க் கட்சியினர் அவர் மீது வசை புராணம் பாடி வெளியிட்ட நோட்டீஸ்!

''என்ன அப்பா இது? யார் பக்கத்து நோட்டீஸ் நீ கொண்டு திரிகிறாய்?'' என்று, கேட்டதும் கார்த்திகேசு திடுக்கிட்டு விட்டான். நான் விஷயத்தைச் சொன்னேன்.

''அடடா மாறிவிட்டேன் போலிருக்கிறது. வண்டியில் இதை யாரோ கொண்டு வந்து விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள். அதைக் கிழித்தெறிந்து விடு தம்பி! என்று பரபரப்பாக என்னிடம் வாங்கித் தூள் தூளாகக் கிழித்தெறிந்தான்.

''கார்த்தி அண்ணே! நீ பள்ளிக்கூடம் போனதில்லையா சிறுவயசில்?'' என்று அவனை நான் கேட்கவில்லை. மாட்டின் கழுத்திலிருந்த சலங்கைகள் கலகலத்தன. அது 'மாடு சிரித்தது' போலிருந்தது எனக்கு! ஏன் சிரித்தது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய நிர்வாகத் துறைகள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை எடுத்தாளுகின்றபோது இலங்கையின் எதிர்காலம் எங்குபோய் முடியுமோ என்றொரு அச்சம் கலந்த ஆதங்கமும் "DISTINATION UNKNOWN BUT DICLINE IS WELK NOWN" என்ற ஹூட் றோவில்சனின் வாசகமும் ஞாபகம் வருகின்றது. கடந்த ஒரு தசாப்தமான இலங்கையின் அரசியல் நெருக்கடி நம்மை எல்லாத் துறைகளிலும் பின்தங்க வைத்துள்ளது. நிறுவன ரீதியான சீர்கேடுகளின் தொடர்ச்சியான புறக்கணிப்பின் எதிர் விளைவுகளாகவே இவை இருந்து வருகின்றன. இந்த வகையில் இலங்கையின் சுகாதாரத் திணைக்களமும், மருத்துவவியலும் எதிர்நோக்குகின்ற வைத்திய ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினைகளைக் கள ஆய்வுடன் கூடிய தகவல்களோடு முன்வைப்பதே இப்பத்தியின் குறிக்கோளாகும்.

தற்போதைய இலங்கையின் வைத்தியவியல் கொண்டுள்ள நெருக்கடிகள் ஒரு பெரும் கட்டமைப்பு மாற்றத்தினை வேண்டி நிற்கின்றது. வெறுமனே சட்டங்களால் நிறைவு செய்ய முடியாததொரு பிரச்சினையாகவே இது உள்ளது. ஏனெனில், பிரச்சினையின் தீர்வில் அரைப்பங்கை ஏற்பவர்களாக வைத்தியர்கள் விளங்குகின்றனர். எனவே அவர்களது சுயசித்தத்திலான (Free -will) மனித நேயப்பார்வைகள் இந்நெருக்கடிகளை நிவர்த்திப்பதில் பெரும் பங்காற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் டொக்டர் பிபிலே இலங்கை வைத்தியத்துறை குறித்து மேற்கொண்ட ஒரு பெரும் ஆய்வு மாற்றுப் பத்திரிகையான ''ராவய'' சிங்களப் பத்திரிகையில் வெளியானது. அவரது அவ்வாய்வின் முடிவு யாதெனில் நோய்களுக்கு நிவாரணம் வழங்கும் வைத்தியர்களும் இன்று ஒரு வகை நோயினால் பாதிப்புற்றுள்ளனர். அதுதான் வைத்தியத் தொழிலின் மூலம் அபரிமிதமான பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற அவர்களது ''பேராசை'' எனும் உளவியல் நோய் என அவர் குறிப்பிடுகிறார். உண்மையில் வைத்தியர்கள் சிலர் இத்தகு தன்மையினால் புறக்கணிப்பு மனப்பான்மையை வெளிக்காட்டுவதோடு நோயாளிக்கும், வைத்தியருக்கும் இடையில் இருக்க வேண்டிய மனிதாபிமானத் தொடர்பையும் உயர் ஒழுக்க விதிகளையும் மீறி, நடந்து கொள்கின்றனர். இதற்கு நாம் நிறைய உதாரணங்கள் குறிப்பிட முடியும். இது குறித்த கள ஆய்வின் அடிப்படையிலான சில தகவல்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும் எனக் கருதுகிறோம்.

இலங்கையின் பல பாகங்களின் வைத்திய சாலைகளில் இனவாதமும் தலையீடு செய்கின்றது. இதன் விளைவுகள் மிகவும் பாதகமானவை. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு நாவலப்பிட்டிய ஆதார வைத்திய சாலை (Base Hospital). ப்லந்தொட்ட, ஹபுகஸ் தலாவ, உலப்பனை, கொறக ஓயா, அஹஸ் வெவ போன்ற பிரதேச மக்களின் மையத் தளமாக விளங்கும் இவ்வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்களில் பெரும்பான்மையானோர் சிங்களவர்களாவர். இவர்கள் முஸ்லிம்களையும், தமிழர்களையும் பாரபட்சத்தோடும், புறக்கணிப்போடும் நடாத்துகின்றனர் என இங்குள்ள மக்கள் அங்கலாய்ப்பது இன்னுமே அரசுக்குக் கேட்கவில்லை. சிங்கள நோயாளர்களை முன்னுரிமையோடு கவனிக்கும் இச்சிங்கள வைத்தியர்களுக்கு மத்தியில் துவேசமும், இனவாதமும் இழையோடுவது பெரும் விசனத்துக்குரிய விடயமாகும்.

வைத்தியசாலை சிறந்த வசதிகளைக் கொண்டுள்ளபோதும் முஸ்லிம், தமிழ் நோயாளர்கள் கொழும்பு, கண்டி வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். சாதாரண நோய்களுக்குரிய மருந்துகளைக் கூடத் தனியார் மருந்தகத்தில் (பாமசி) பெற்றுக் கொள்ளுமாறு வெறும் மருந்துத் துண்டுகளை மாத்திரம் எழுதிக் கொடுக்கின்றனர். சுகாதார அமைச்சராக ஏ.எச்.எம். பௌஸி இருந்த காலப்பகுதியில் கூட இந்தத் துவேச மனப்பான்மையைச் சிங்கள வைத்தியர்கள் வெளிக்காட்டியுள்ளனர். இந்நிலை மகப்பேற்றுப் பகுதியிலும் (Maternity Home) தொடர்வது இன்னும் வேதனைக்குரிய விடயமாகும். இந்தப்பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடையாத இங்குள்ள மக்கள் யோகநாதன் நேர்ஸிங் ஹோம் (Yokanathan Nursing Home) போன்ற தனியார் மருத்துவ மனைகளை நாடுகின்றனர். வயிற்றையே கழுவிக்கொள்ள வழியில்லாதவர்களுக்குத் தனியார் வைத்தியசாலை வசதி செய்யுமா என்பது இங்கு எழுகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

இதை நூறு வீதம் ஒத்த பிரச்சினை அம்பாறை மாவட்ட வைத்தியசாலையிலும் (District Hospital) நிலவுகின்றது. முஸ்லிம் நோயாளிகள் தாமதித்தே கவனிக்கப்படுவதும், அதிகமான நோயாளர்களை பதுளை மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதும் இங்கு தாண்டவமாடுகின்ற இரு பெரும் நெருக்கடிகளாகும். இங்கு வைத்தியர்களின் வருகையின் தா்மதத்தால் நோயாளிகள் இறந்த சம்பவங்கள் கூட நிகழ்ந்துள்ளது.

மருத்துவவியலில், இனவாதத்தின் தலையீட்டிற்கான மற்றொரு உதாரணம், அண்மையில் காலி கறாப்பிட்டிய மாகாணப் பொது போதனா வைத்திய சாலையில் (Provincial General Teaching Hospital) நிகழ்ந்தேறியது. நாவின்ன பிரதேசத்தில் ஒரு சிங்களக் காடையர் முஸ்லிம் இளைஞர் ஒருவரைத் தாக்கிக் கொண்டிருந்ததைக் கண்ட மற்றொரு முஸ்லிம் அத்தாக்குதலைத் தடுக்க முயன்ற போது அவர் அச்சிங்களக் காட்டுமிராண்டியினால் காடைத்தனமாகத் தாக்கப்பட்டுக் கறாப்பிட்டிய மாகாண பொதுப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இரத்தக் காயங்களுக்குட்பட்ட அம் முஸ்லிம் இரண்டாவது நாளே மருத்துவமனையிலிருந்து நிர்ப்பந்தமாக வெளியேற்றப்பட்டார். பெரும் காயங்களே ஆறாத நிலையில் வைத்தியர்கள் ஏன் இவரை வெளியேற்றினர் என்பது மக்களுக்கு மத்தியில் பெரும் ஆச்சரியத்தையும், ஆவேசத்தையும் ஏற்படுத்தியது. சிங்கள வைத்தியருக்கும், அக்காடையருக்கும் இடையிலான உறவுமுறை தான் இம் மர்மத்திற்கான காரணம் எனப் பின்னர் தெளிவானது.

இனவாதத்தின் கோர நகங்கள் எல்லாப் பரிமாணங்களையும் கீறிக்கொண்டிருக்கும் அபாய ஒலியை மேற்போந்த சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதேபோன்று இலங்கையின் கிராமப் புறங்களிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரியில் தொழில் புரியும் வைத்தியர்கள் மிகவுமே பொடுபோக்காக நடந்து கொள்கின்றனர். உயர் அதிகாரிகளின் கண்காணிப்பு எதுவும் இல்லாததால் அதிகாரம் முழுவதும் தமக்கே என்ற கர்வ மனப்பான்மையோடு நோயாளிகளைத் தகுந்த முறையில் கவனிக்கத் தவறுகின்றனர்.

இறக்காமம் அரசாங்க ஆஸ்பத்திரி (Gorvernment Dispensary)யில் கடமையாற்றுபவர் ஒரு சிங்கள வைத்தியர். காலை எட்டு மணி முதல் நோயாளிகள் கால் கடுக்கக் காத்துக் கொண்டிருந்தாலும் சுமார் பதினொரு மணிக்கு வருகை தரும் இவர் அடுத்த இரண்டு மணித்தியாலங்களுக்கிடையில் தீகவாபிக்குப் புறப்பட்டு விடுவார். ''விரால் இல்லாத மடுவுக்குக் குரட்டை மீன் அதிகாரியாம்'' என்று சொல்லும் கிராமத்துப் பழமொழி போல் குறைந்தது M.B.B.S. கூட இல்லாத இவ்வைத்தியருக்கு அரை குறைத் தமிழும் தெரியாததால், நோயாளிகளுக்கு பொருத்தமில்லாத மருந்துகளைக்கூட சிபாரிசு செய்வதாக ஏற்கெனவே பல புகார்கள் மாவட்ட வைத்திய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டும் பதில் ஏதும் கிடைக்கவில்லை.

இலங்கையின் இன்றைய மருத்துவவியல் எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சினை தான் வைத்தியர்கள் நோயாளியை ஒரு பண்டமாகப் பார்க்கும் போக்காகும். பல வைத்தியர்கள் நோயாளியை மனிதர்களாக நோக்க மறுக்கின்றனர். இது ஒரு முதலாளித்துவ மனோபாவத்தின் வெளிப்பாடாகும். நவீன கால மருத்துவ ஒழுக்கவியல் (Medical Ethics) சார்ந்த பிரச்சினையின் மையமாக, பண்டமாகப் பார்க்கும் நோக்கு விளங்குகின்றது. எரிக் ஃப்றொம் (Erick Fromm) அவரது "Medicine and the Ethical Problem of Modern Man" என்ற கட்டுரையில் மனிதன் ஒரு பண்டம் அல்ல. அவனை நீ பண்டமாக மாற்ற முனைந்தால் அவனுக்கு நீ தீங்கு செய்கிறாய் எனக் குறிப்பிடுகிறார். நோயாளியை அதிகாரத் தோரணையில் விசாரிப்பதும், கடுகடுப்பான வார்த்தைகளோடு முகத்தில் பாய்வதும் இவ்வகைப் போக்கின் பிரதிபலிப்புக்களே. வைத்தியர்களே சாவையும், வாழ்வையும் நிர்ணயிக்க முடியும் என்ற மனிதக் கடவுள் மனோ நிலையில் (Man God- Mentality) வைத்தியர்கள் செயற்படுவது மனித நேயத்திற்கு முரணானதாகும். மேலும் ஒருவர் நோயாளி தானே என்ற உணர்வில் அவரை எப்படியும் எது செய்தும் குணப்படுத்தினால் சரி என்ற போக்கையும் வைத்தியர்கள் கையாளக் கூடாது. ஏனெனில் நோயாளி என்பவர் ஒரு பரிசோதனைப் பொருளன்று. அவரை மனிதராகப் பார்க்கும் உயர் ஒழுக்கப் பார்வை மருத்துவத் துறையினருக்கு அவசியமாகும். எரிக் ஃப்ரொம் குறிப்பிடுவது போல் அன்பு, கருணை, பிறர் வேதனையைத் தன்வேதனைபோல் உணர்தல் போன்ற பண்புகள் ஒரு வைத்தியருக்கு இருக்க வேண்டும். அவ்வுயர் பண்புகளினூடாகவே அவர் நோயாளியை அணுக வேண்டும். தனிப்பட்ட குரோத, விரோதம், பக்கச்சார்பு, இனவேறுபாடு என்பதெல்லாம் இங்கு இம்மியளவேனும் தலையிடுவது வைத்திய தர்மத்திற்குப் புறம்பானதாகும். முடியுமானவரை மரணத்தைத் தள்ளிப் போடுவதும், நோயாளியை மனோ ரீதியாக ஆறுதல் படுத்துவதும் ஒரு வைத்தியரின் தார்மீகக் கடமையாகும்.

டொக்டர் பிபிலே குறிப்பிடுவதுபோல் பணத்தைக் கறந்து கொள்ள வைத்தியர் காட்டும் ஆர்வத்தை நோயாளிகளைப் பரிவோடு பராமரிப்பதில் இன்று காண முடியாதுள்ளது. இது சமீபத்திய இலங்கைத் தனியார் மருத்துவமனைகளில் அதீதமாக நிலவும் பிரச்சினையாகும். சில வைத்திய உயர் அதிகாரிகளிடத்தில் கூட இந்நிலை காணப்படுகின்றது. அக்கரைப்பற்றில் தனியார் மருத்துவமனை நடாத்தும் பல முஸ்லிம் வைத்தியர்களிடம் இந்நிலை நிலவுவது ஆதங்கத்துக்குரியதாகும். இன்னும் சில வைத்தியர்கள் போதைப்பொருள் உட்கொண்ட நிலையிலும் வைத்தியம் செய்யவும் துணிந்துள்ளது மற்றொரு வினோதமான ஆனால் விசனமான விடயமாகும். மாத்தளை மெடிக்கல் சென்ரர் (Matale Medical Center) என்னும் தனியார் மருத்துவமனையின் வைத்தியர் ஆனந்த குடிப்பழக்கத்தோடு மருத்துவம் செய்வதாகும். இதனால் நோய்க்குப் பொருத்தமில்லாத மாற்று மருந்துகளைச் சிபாரிசு செய்வதாகவும் இங்குள்ள மக்கள் அங்கலாய்க்கின்றனர். இது போன்ற இன்னும் பல உதாரணங்கள் எமது கள ஆய்வினூடாகக் கிடைக்கப் பெற்றது.




உண்மையில் மருத்துவம் என்பது பரிசோதனைக் குழாய்களினூடான பகுத்தறிவு மயமாக்கலோடும், நோயாளியை ஒரு பண்டமாக நோக்கும் முதலாளித்துவப் பார்வையுடன் சுருங்கியதன்று. எல்லாவற்றையும் போல் அதற்கும் பிரத்தியேகமான ஒழுக்கவியல் கோவைகளும், சட்ட விதிகளும் உண்டு. கி.மு. 4ம் நூற்றாண்டில் ஹிப்ரோக்கிரடீஸினால் உருவாக்கப்பட்ட வைத்தியத்துறை ஒழுக்கவியல் விதிகள் முதல் நவீன காலம் வரையிலான உலக சுகாதார அமையத்தின் வைத்திய ஒழுக்கவியல் பிரமாணங்களும் வைத்தியத் தொழிலில் ஈடுபடுவோரது கடமைகளையும், கடப்பாடுகளையும் ஒழுக்கம், சமயம், தூய எண்ணம் போன்றவற்றின் சார்பில் வலியுறுத்துகின்றது. ஆனால், பல நாடுகளில் இவை இன்னும் ஒரு கோட்பாட்டு நிலைப்பட்ட விடயமாகவே இருந்து வருகின்றது.

இன்று The Geneva Convention code of Medical Ethics (The International Council of Nurses - 1953) "International Code & Nursing Ethics" போன்ற பல ஒழுக்கவியல் கோவைகள், வைத்தியர்கள் பின்பற்ற வேண்டிய உயர் ஒழுக்க விதிகளை உள்ளடக்கியுள்ளன.

பம்பாய் ஜஸ்லாக் வைத்தியசாலையின் முன்னாள் இயக்குநர் ஆர்.டி. லேலே வைத்தியத்தொழில் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். மனிதராகப் பிறந்தவருக்கு வாழ்வில் டாக்டர் ஆவதைப் போலப் பெரிய வாய்ப்பும், பொறுப்பும், கடமையும் வேறு கிடையாது. அல்லல் படுவோருக்குச் சேவை செய்ய அவர்களுக்கு அறிவியல் ஞானம் தேவை. மனிதாபிமானமும் தேவை. இவற்றைத் துணிவுடனும், பணிவுடனும், விவேகத்துடனும் பயன்படுத்துகின்ற போது அவர்கள் (மருத்துவர்கள்) மக்களுக்கு இணையற்ற சேவை செய்கின்றனர். *(இந்தியா டுடே 1995 டிசம்பர்)*

ஜெனிவா மாநாட்டு வைத்திய, ஒழுக்கவியல் பிரமாணங்களின் சுருக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. *''மனித குலத்துக்கு சேவையாற்றுவதே எனது கடமை என்று நான் முறையாக வலியுறுத்துகிறேன். நான் எனது தொழிலை மனச்சாட்சியுடனும், பெரும் மதிப்புக்குரியதாகவும் செய்வேன். எனது நோயாளியின் ஆரோக்கியமே எனது முதற் கரிசனையாகும். என்னை நம்பிச் செயல்பட்ட ரகசியங்களை நான் பாதுகாப்பேன். வைத்தியக் தொழிலின் கௌரவத்தையும், உன்னத மரபையும் பாதுகாக்க எனது முழுச் சக்தியையும் பயன்படுத்துவேன். எனது சக வைத்தியர்கள் எனது சகோதரர்கள். எனது கடமையில் நோயாளிகளுக்கிடையில் சமயத்திற்கோ, இனத்திற்கோ, கட்சி அரசியலுக்கோ அவை போன்றவற்றிற்கோ இடம் தர மாட்டேன். எந்த அச்சுறுத்தல் வந்தாலும் கருவானதிலிருந்து மனித உயிருக்கு நான் அதியுயர் மதிப்பளிப்பேன். மனித நெறிமுறைகளுக்கு மாறாக நான் எனது வைத்திய அறிவைப் பயன்படுத்த மாட்டேன்.''*

மேற்போர்ந்த வாசகம் ஒழுக்கவியல் ரீதியான வைத்தியர்களது கடமைகளை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. எனினும், மூன்றாம் •உலக நாடுகளில் வைத்திய ஒழுக்கவியல் தலைகீழ் அர்த்தம் பெறுகிறது.

இலங்கையில் பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீட மாணவர்களுக்கு வைத்திய ஒழுக்கவியல் தொடர்பான பிரமாணங்கள் போதிக்கப்படுவது இன்னும் மந்த கதியிலே உள்ளது. பேராதனை மருத்துவப் போதனை வைத்தியசாலையிலோ அல்லது றாகம மருத்துவமனையிலோ, கறாப்பிட்டிய வைத்தியசாலையிலோ வைத்திய தொழிநுட்பத்திற்கு வழங்கும் முக்கியத்தில் கால்வாசிப்பகுதியாயினும் வைத்திய ஒழுக்கவியல் போதனைக்கு வழங்கப்படவில்லை என சமீபத்திய ஆய்வுக் குறிப்புகள் கூறுகின்றன. இலங்கை வைத்தியவியல் துறையில் நிலவும் பிரச்சினைகளைக் கீழ்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. நடைமுறை அனுபவமில்லாத வைத்தியர்களின் புதிய பிரவேசம் சார்ந்த பிரச்சினைகள்.
2. வர்த்தக மயப்பட்ட வைத்தியர்களின் முதலாளித்துவ லாப நோக்கம் அரச மருத்துவமனைப் பணியை விடத் தனது சுய முயற்சியிலான வைத்தியர்களின் கரிசனை தொடர்பான பிரச்சினைகள்.
3. மொழி, இனம் வேறுபாட்டுப் பின்புலத்துடனான வைத்தியர்களின் குறுகிய சார்பு மனப்பான்மை குறித்த சிக்கல்கள்
4. நோயாளிகளைப் பண்டமாகப் பார்க்கும் மனித - கடவுள் மனோபாவம் தொடர்பான பிரச்சினைகள்.

இத்தகு பிரச்சினைகளை வெறுமனே வரண்ட சட்டங்களினால் மாத்திரம் நிவர்த்திக்க முடியாது. நிவர்த்தித்தாலும் அது நிரந்தரத் தீர்வாக அமையாது. மனிதாபிமானத் தேட்டமும், மனிதநேயப் பார்வைகளும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் நிர்ணயகரமான பங்காற்ற வேண்டியுள்ளதால் வைத்தியர்களே இதில் பெரிதும் பங்கு கொள்ள வேண்டியுள்ளது.

ஜனநாயகம் என்ற அரசியல் நோக்கிற்கும், கம்யூனிசம் என்ற சமூக, சமத்துவக் கருத்தியலுக்கும் இன்னும் சில படிகள் தாண்டி மனிதநேயம், பரிவு, கருணை போன்ற மனிதாபிமான அணுகு முறைகள் மூலமே மருத்துவத்துறை சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

ஸ்திரமற்ற அரசியல் நிலைப்பாட்டினால் கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தின் விளைவாகப் பல நோயாளிகள் மாண்டு மடிந்தனர். இந்த அவலநிலை இன்னும் சில பகுதிகளில் இன்னும் தொடர்வது மருத்துவத் துறையிலான இலங்கையின் பின்னடைவைத் துல்லியமாய்ச் சொல்லிவிடுகின்றது.

நாடு போகும் போக்கைப் பார்த்தால் எங்குபோய் முடியுமோ என்ற ஆதங்கம் மீண்டும் எழுகின்றது. as the King so are the Subjects என்ற பழமொழி சொல்வதுபோல் நம்மை ஆளுகின்றவர்களை நாம் ஆற்றுப்படுத்ததாவரை இருந்தத் துயரம் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஏனெனில் மூளையில் கோளாறை வைத்துக் கொண்டு தலையில் தைலம் தடவுவதால் எந்தப் பயனும் விளையாது.

இறக்காமம் றஊப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிர்பார்த்த துயரம் இறுதியில் நிகழ்ந்தது

-சேரன்-





*''எதிர்பார்த்த துயரம்*
*இறுதியில் நிகழ்ந்தது....''*

- எம்.ஏ.நுஃமான்

''சற்றடே றிவியூ'' பத்திரிகையின் ஆசிரியராக நான்கு வருடங்கள் பணிபுரிந்தவரும் இலங்கையின் மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளர்களில் முதன்மையானவருமான காமினி நவரத்ன அவர்கள் காலமானார் என்ற தகவல் கிடைத்ததும் நுஃமான் அவர்களது கவிதையொன்றின் வரிகள்தான் துயரத்துடன் நினைவுக்கு வந்தன. காமினி நவரத்ன நாற்பதாண்டுகளுக்கும் மேலான பத்திரிகைத்துறை அனுபவம் பெற்றவர். The Times of India வின் இலங்கைச் செய்தியாளராக நீண்டகாலம் பணிபுரிந்தவர். இலண்டனில் மையங் கொண்டிருக்கும் Gemini தகவல் நிறுவனத்தின் இலங்கைக் கட்டுரையாளராக இறுதிவரை பணிபுரிந்து வந்த காமினி நவரத்ன ஆரம்பத்தில் Times of Ceylon, Sun போன்ற பத்திரிகைகளிலும் பணிபுரிந்தவர். அவருடைய பல கட்டுரைகள் தமிழில் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் ''சற்றடே றிவியூ'' வார இதழின் ஆசிரியராக 1983-1987வரையான நான்கு வருடங்கள் பணியாற்ற முடிந்தமை, காமினி நவரத்னவின் வாழ்க்கையிலும், அரசியல் நோக்கிலும், சிந்தனையிலும் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்தது என்று பல சந்தர்ப்பங்களில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ், முஸ்லிம் மக்களோடு ஒரு நெருங்கிய பிணைப்பை அவர் வளர்த்துக் கொண்டமைக்கும் இந்தக் காலப் பகுதி பெரிதும் உரம் கொடுத்தது.

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பிற்பாடு கொழும்பு திரும்பிய காமினி நவரத்ன பெரிதும் நோய் வாய்ப்பட்டவராகவே கடந்த பல வருடங்களாக இருந்தார்.

அவருடைய வருத்தங்களுக்குப் பிரதானமான காரணியாக இருந்தது, தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தமும், இணக்கமான ஒரு தீர்வு சாத்தியப்படாது என்ற அவருடைய துன்பகரமான நம்பிக்கையும்தான் என்று சொல்லத் தோன்றுகிறது.

✱

1983 ஜூலை படுகொலைகளை யொட்டிய காலத்தில் ''சற்றடே றிவியூ'' அரசினால் தடை செய்யப்பட்டது. அதுவரை காலமும் ஆசிரியராக இருந்து வந்த எஸ். சிவநாயகம் அவர்கள் தலைமறைவாக நேர்ந்தது. பத்திரிகை மீதான தடை நீக்கப்பட்டதும் பத்திரிகையைப் பொறுப்பேற்று நடாத்துவதற்குப் பலரும் முன்வரத் தயங்கினர். கொழும்பிலிருந்த சில 'பத்திரிகையாளர்கள் விரும்பிய போதும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர் பொறுப்பை நிர்வகிப்பதற்கு எவருமே முன்வராத நிலையில் தான் காமினி பத்திரிகைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ''உன்னால் முடியா விட்டால் வேறெவராலுமே இதனை நடாத்த முடியாது'' என்று எஸ். சிவநாயகம் அவர்கள் காமினிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அது உண்மையுங் கூட.

காமினியின் எழுத்துக்கள், யாழ்ப்பாண ஆங்கில வாசகர்களுக்குப் புதியன அல்ல. சற்றடே றிவியூவின் ஆரம்ப காலத்திலிருந்தே காமினி அதற்குத் தொடர்ச்சியாக எழுதி வந்திருக்கிறார். அவருடைய Political Causerie என்ற தலைப்பிலான அரசியல் அலசல் பிரபல்யமான ஒரு அம்சமாகச் சற்றடே றிவியூவில் இடம்பெற்று வந்தது. காமினியின் பத்திரிகைப் பணி, எழுதும் பாங்கு என்பன ஒருவகைத் தனித்துவம் வாய்ந்தவையாக இருந்தன. எளிமையான, இலகுவான் மொழி, மிகவும் நளினமான முறையில் வெளிப்படும் அங்கதச்சுவை இவற்றோடு இடைக்கிடை இணையும் காமினியின் 'கிறுக்குத்தனம்' இவையெல்லாம் ஒன்று சேர்கிற போது கிடைக்கிற தனித்துவம் தான் அது.

இவற்றோடு ஒட்டியதாக ஆனால் பல சந்தர்ப்பங்களில் காமினியின் தனித்துவம் ஏற்படுத்திய இடைவெளிகளைக் கலாபூர்வமாக நிறைவு செய்தது துணை ஆசிரியராகப் பணிபுரிந்த ஏ.ஜே கனகரத்தினவின் இலக்கிய ஆளுமையும், அழகியல் நுண்ணுணர்வும் ஆகும். 83க்குப் பிற்பாடு சற்றடே றிவியூவின் இயல்பை வடிவமைத்தவை இந்த அம்சங்கள் தான். இலங்கையின் அரசியல் பத்திரிகைத் துறையில் மிகச் சிறப்பான ஒரு இடத்தை சற்றடே றிவியூ பெற முடிந்தமைக்கு இதுவும் ஒரு காரணம்.

காமினி ஆசிரியராகப் பணிபுரிந்த காலங்களில் பெரும் பகுதி சற்றடே றிவியூ தணிக்கைக்குள்ளாகியிருந்தது. ஏனைய பத்திரிகைகள் எதுவுமே தணிக்கை செய்யப்படாமல் வெளி வந்து கொண்டிருந்த வேளை சற்றடே றிவியூ மட்டுமே பிரத்தியேகமான தணிக்கைக்குள்ளாகியிருந்தது. காமினியின் கடமையை பல வழிகளிலும் இது பாதித்தது மட்டுமன்றி பத்திரிகையை வழி நடத்துவதில் விரக்திக்குள்ளாகும் ஒரு சூழலும் இதனால் உருவாக நேர்ந்தது. விளம்பரங்களைக் கூடத் தணிக்கைக்கு அனுப்ப வேண்டிய சூழல். மேலும் கொழும்பிலோ, யாழ்ப்பாணத்திலோ வேறு எந்தப் பத்திரிகைகளோ, பத்திரியாளர் சங்கங்களோ இதனைப் பெரிது படுத்தித் தணிக்கைக்கு எதிராகப் போராடவும் முன் வரவில்லை. அரசாங்கமும், கொழும்புப் பத்திரிகைகளும் வடக்கு கிழக்கு நிலைமை தொடர்பாக எழுதி வந்த பொய்களை அடிக்கடி அம்பலப்படுத்திக் கொண்டிருந்ததிலேயே நிறையப் பக்கங்கள் போக நேர்ந்தன.

காமினியின் எழுத்தும், பங்கும், துணிச்சலும் இந்த அம்சத்தில் அளப்பரிய பங்களிப்பாற்றின. நான்கு வருடங்களாக இலங்கை இராணுவத்தின் படுகொலைகளையும், அட்டூழியங்களையும் இயலுமானவரை, உடனுக்குடன் வெளிக்கொண்டு வந்ததன் மூலம், உலக அரங்கில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள், தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை ஆகியவற்றை அம்பலப்படுத்துவதில் காமினி நவரத்னவுக்கு இருந்த பொறுப்பும் பங்கும் என்றென்றும் நினைவு கூரப் படவேண்டியன.

✱

காமினி நவரத்னவைப் பற்றி நான் முதன் முதலில் அறிந்து கொண்டது, ஈழநாட்டில் வெளிவந்த அவருடைய கட்டுரையொன்றினூடாகத்தான். நீண்ட காலத்துக்கு முன்பு அவர் யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கிச் சென்றதைப் பற்றி அவரது மனப்பதிவுகள் கட்டுரையில் இடம்பெற்றிருந்தன. யாழ்ப்பாணத்தில் ஓடித் திரிந்த பொலிஸ் வாகனங்களில் 'பொலிஸ்' என்று சிங்களத்தில் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்த போது தனக்கு ஏற்பட்ட மன நிலையை அவர் விவரித்திருந்தார்.

*''முற்று முழுதாகத் தமிழ் மொழி பாவனையிலிருக்கிற இடத்தில் இத்தகைய திமிர்த்தனமான சிங்களத் திணிப்பு, இந்த அரசு சிறுபான்மை மக்கள் தொடர்பான எவ்விதமான புரிந்துணர்வும் அற்றது என்பதற்கு நல்ல உதாரணம்; நான் ஒரு தமிழனாக இருக்கும் பட்சத்தில், சந்தர்ப்பம் கிடைத்தால், இத்தகைய தனிச் சிங்களத்தின் மீது சேறு தான் பூசுவேன்; எனக்குத் தமிழ் மக்களுடைய மனநிலை இப்போது நுணுக்கமாக விளங்குகிறது''.*

*''முற்று முழுதாகத் தமிழ் மொழி பாவனையிலிருக்கிற இடத்தில் இத்தகைய திமிர்த்தனமான சிங்களத் திணிப்பு, இந்த அரசு சிறுபான்மை மக்கள் தொடர்பான எவ்விதமான புரிந்துணர்வும் அற்றது என்பதற்கு நல்ல உதாரணம்; நான் ஒரு தமிழனாக இருக்கும் பட்சத்தில், சந்தர்ப்பம் கிடைத்தால், இத்தகைய தனிச் சிங்களத்தின் மீது சேறு தான் பூசுவேன்; எனக்குத் தமிழ் மக்களுடைய மனநிலை இப்போது நுணுக்கமாக விளங்குகிறது''.*

இந்த ''நுணுக்கமான விளக்கம்'', மற்றும் ஏனைய இனத்துவ மக்களின் தரப்பிலிருந்தும், அனுபவத்திலிருந்தும் நிலைமைகளையும் பிரச்சினைகளையும் பார்ப்பது என்ற அம்சம் தான் காமினியை மற்றைய சிங்கள முற்போக்கு, இடதுசாரி நண்பர்களிடமிருந்து தனித்துவமாக்கியது. வடக்கில் வாழ்ந்த அனுபவங்கள், சற்றடே றிவியூ, மற்றும் ஏராளமான குண்டு, ஷெல் வீச்சுக்கள் போன்றவற்றிற்கும் முகம் கொடுக்க நேர்ந்தமை அனைத்துமாகச் சேர்ந்து காமினியை இனப்பிரச்சினை தொடர்பாக மிகுந்த உணர்திறன் கொண்ட ஒருவராக மாற்றிவிட்டிருந்தது. வெறுமனே பத்திரிகை ஆசிரியராக மட்டும் இல்லாது, இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்குத் தன்னாலான முயற்சிகளையும் செய்து பார்க்க வேண்டும் என்று உந்தித்தள்ளியது இந்த உணர்திறன் தான்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிறிமா பண்டாரநாயக்கா உட்பட பல முக்கியமான சிங்கள அரசியல் தலைவர்களுடன் காமினிக்கு நல்ல பரிச்சயம் இருந்தது. இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களோடு மிகுந்த நல்லுறவும் இருந்தது. (சற்றடே றிவியூவின் நான்காம் ஆண்டு நிறைவைக்குறிக்க வெளியிடப்பட்ட சிறப்பு இதழுக்காக இவர்கள் அனைவரிடமிருந்தும், எல்லாத் தமிழ் இயக்கங்களிடமிருந்தும் ''வாழ்த்துச் செய்தி'' கேட்டிருந்தார். விடுதலைப் புலிகளையும், ஜே.ஆரையும் தவிர ஏனையோரிடமிருந்து ''வாழ்த்துக்கள்'' கிடைத்தன!)

காமினிக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் நீண்டகாலப் பரிச்சயம் இருந்தது. இது பற்றி காமினிக்கு எந்தவிதமான ஒளிவு மறைவும் இருக்கவில்லை. தான் நினைத்தவற்றை நினைத்தபடி எழுதுவதற்குத் தடையில்லாதவரை தனக்கு எவரிடமும் பிரச்சினை இல்லையென்பது பத்திரிகை தொடர்பாக காமினியின் நிலைப்பாடாக இருந்தது. சற்றடே றிவியூ பத்திரிகைக்குப் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பு தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதும்படி ஜே.ஆர் காமினியைக் கேட்டிருந்தார். காமினியும் அதனை ஏற்றுக்கொண்டு சில அத்தியாயங்களை எழுதினார். எனினும் காமினியின் அணுகுமுறை ஜே.ஆருக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர். நடாத்திய பாதயாத்திரை குறித்து காமினியின் தீவிரமான விமர்சனப் பார்வை தனது வாழ்க்கை வரலாற்றில் இடம்பெறக் கூடாது என்று ஜே.ஆர். வலியுறுத்தினார். காமினிக்கு அது உடன்பாடானதாக இருக்கவில்லை. இந்தப் பாதயாத்திரை தொடர்பாக காமினிக்குத் தனிப்பட்ட அனுபவங்கள் இருந்தன. பாதயாத்திரையை எதிர்த்து இம்புல்கொட என்ற இடத்தில் எஸ்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் பலர் மறியல் போராட்டம் செய்த போது காமினியும் அதில் பங்கு பற்றியிருந்தார்.

*''நானும் எக்கச்சக்கமாகப் பாத யாத்திரைக்குக் கல் எறிந்தேன். எனவே நானும் ஒரு 'இம்புல்கொட வீரயா' தான்!''* என்று நகைச்சுவையாகக் கூறுவது அவருடைய வழக்கம்.

ஜே.ஆருடைய வாழ்க்கை வரலாற்றைப் பின்னர் எழுத மறுத்து விட்டார் காமினி. எனினும் பரஸ்பரம் கௌரவத்துடன் கூடிய ஒரு நட்பை இருவரும் பேணிவந்தனர். இந்த விஷயம் தான் பல சந்தர்ப்பங்களில் காமினியை ஐ.தே.க. உளவாளி என்றும், ஜே.ஆரின் ஏஜண்ட் என்றும் சற்றடே றிவியூ மற்றும் காமினிக்கு எதிரானவர்களால் யாழ்ப்பாணத்தில் அவ்வப்போது பிரச்சாரம் செய்யப்பட்டது. எனினும் இந்தப்பிரச்சாரம் வெற்றியளிக்கவில்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலை இயக்கங்களுக்குமிடையே பேச்சு வார்த்தைகள் ஏற்படுவதற்கு முன்னோடியாகச் சென்னை சென்று எல்லா இயக்கத் தலைவர்களையும் காமினி சந்தித்தார். அவரால் பிரபாகரனைச் சந்திக்க முடியவில்லை. எனினும் 1984-1987 காலப்பகுதியில் ரஹீம், கிட்டு ஆகியோருடன் அவருக்கு நல்ல பிணைப்பிருந்தது. 1986இல் பெங்களூரில் ஜே.ஆர். - ராஜீவ் சந்திப்பிற்கு முன்பாக ஜே.ஆர்., பிரபாகரனுடன் தொடர்பு கொள்ள விரும்பினார். பெங்களூர் சந்திப்பின் போது, இனப் பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் பூர்வாங்கத்திட்டம் கையெழுத்தாவதாக இருந்தது. ஏற்பாடுகள் எல்லாம் சுமூகமாக இடம்பெற்றால் பிரபாகரனை பெங்களூருக்கு அழைத்து வருவது என்றும் தீர்மானமாகியிருந்தது. இத்தகைய ஒரு சூழலில் தான் ஜே.ஆர்., காமினி மூலமாகப் பிரபாகரனுக்குத் தகவல் அனுப்ப விரும்பினார். தகவலின் சாராம்சம் இதுதான்: பிரபாகரன் விரும்பினால் வடக்கு முழுவதையும் அவர் எவ்வளவு காலத்துக்கும் எடுத்துக் கொள்ளலாம். அவர் முதல் அமைச்சராகக் கூட இருக்கட்டும்!

→18

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓவியர் ஆசை.இராசையாவின் யதார்த்தவாதம்: வரட்சியிலிருந்து முயற்சிக்கு!



தா. சனாதனன்

மாறி மாறி நிகழ்ந்துவிட்ட அன்னிய ஆக்கிரமிப்புகளால் தனித்து வமும் தொடர்ச்சியுமுள்ள, மரபு வழிவந்த ஓவியத்தினூடான தொடர்பாடல் அறுபட்டுப் போயிற்று. இந்த இடைவெளியில் ஆங்கிலேயரின் கல்வி முறையினூடு ஓவியம் பாடவிதானத்தில் ஒரு பாடமாகவும், ராஜா ரவிவர்மாவின் ஓவியங்களின் பதிப்போவியங்களும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எமக்கு மீண்டும் அறிமுகமாயின. இவ்விரண்டும் எமது மரபுவழி வராததும் எமக்குப்புதியதுமான விக்ரோரிய யதார்த்தவாத அணுகுமுறை சார்ந்த வெளிப்பாட்டு வடிவத்தைக் கொண்டிருந்தன. இதற்கு எதிராக மரபுசார் வெளிப்பாட்டு முறைகளை சுதந்திர மற்றும் சுதேசிய இயக்கங்கள் வலியுறுத்தின. எனினும் யதார்த்தவாதமே தான் எமது மரபு என்ற மாயையை ஏற்படுத்துமளவிற்கு எம்மிடையே இது பரவியுள்ளது. இன்னும் ஓவியம் என்றால் அது ஒன்றில் பள்ளிப்பாடமாக அல்லது ரவிவர்மாவின் பாணி என்று எமக்கு அர்த்தம் தரும்.

இயற்கையை எந்த இலட்சியமயப் படுத்தல்களுமற்று அப்படியே வெளிப்படுத்தல் என்பதே யதார்த்த வாதத்தின் அடிப்படை. எனினும் எந்தளவிற்கு இயற்கைக்கு மெய்யாக இருத்தல் என்பது காலத்துக்கு காலம் ஓவியனின் தற்சார்பால் நிர்ணயிக்கப்படுகிற ஒன்றாய் இருந்திருக்கிறது. இது பல்வேறுபட்ட வெளிப்பாட்டு முறைகளில் ஒன்று; வரலாற்றில் பல தடவை இது சிறிய வேறுபாடுகளுடன் முனைப்புப் பெற்றுள்ளது.

காலனித்துவ ஆட்சியாளர்களால் கன்வசும், தைலவர்ணங்களும் கூட எமக்கு அறிமுகமாயின. இதனால் எமது சமூகத்தில் மரபு வழி வந்த சமயச் சார்பிலிருந்து மாறி ஓவியம் பண்டமாற்றுக்கும், வியாபாரத்திற்குமுரிய ஒரு பொருளாயிற்று. இந்த யதார்த்த வாதத்தையும், தைலவர்ணத்தையும் பயன்படுத்திய எம்மவர்களில் முதலானவர்கள் ராஜா ரவிவர்மாவும், முதலியார் அமரசேகரவும் ஆவர். இவர்கள் கீழைத்தேய கருப் பொருட்களுக்கு யதார்த்தம் சார் வடிவத்தைக் கொண்டிருந்தார்கள். ரவிவர்மா இந்து இதிகாச புராண, இலக்கிய பாத்திரங்களை புகைப்படங்களை ஒத்தகாட்சி நேர்த்தியுடன் படைத்தார். எனவே கனவும் கற்பனையும் கொண்ட கருப்பொருளுக்கு யதார்த்த வடிவம் கொடுத்தார். அமரசேகர சாதாரண சிங்கள மக்களைக் கருப்பொருளாகக் கொண்டதன் மூலம் கருப் பொருளிலும், காட்சிப்படுத்தலிலும் யதார்த்தப் பண்பைப்பேணினார்.

இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணத்தில் எஸ். ஆர். கனகசபை, கனக சபாபதி இராசரத்தினம் போன்ற ஓவியர்களின் மெய்யுரு (Portrait) ஓவியங்களைக் காணமுடிகிறது. ஆனால் இவர்களையும் விட மெய்யுருக்களில் மட்டுமன்றி நிலவுருக்கள் (Land Scape) மனித உருக்களின் ஒழுங்கமைப்புகள் (Composition) என்ற யதார்த்தம் சார்ந்த படைப்புகளை குறிப்பிடத்தக்களவில் படைத்திருப்பவர் ஓவியர் ஆசை. இராசையா தான்.

இராசையாவின் ஓவியங்களின் பொதுவியல்பினை யதார்த்தம் சார்ந்தவை எனப்பொதுவாகக் கூறினாலும், வெவ்வேறு படைப்புகளிலுள்ள யதார்த்தப் பண்பின் இயல்பிலும் அணுகுமுறையிலும் நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவரின் மனித உருக்களை முதன்மைப் படுத்திய படைப்புகள் ஏழ்மை, அகதிவாழ்வு, களைப்பு, தீண்டாமை போன்ற சமூகப்பிரச்சினைகள் சம்பந்தமானவை. இவற்றின் கருப்பொருட்களும் அவற்றின் உருவகப்படுத்தலும் யதார்த்த பண்புடையவை. இவற்றை சமூக யதார்த்தவாதம் சம்பந்தமானவை எனக்கொள்ளலாம். இப்பேற்பட்ட தொடக்கக் காலப்படைப்புகள் முதலியார் அமரசேகரவின் நேரடிப் பாதிப்பால் விளைந்தவையே. கிட்டத்தட்ட இவரையொத்த கருப்பொருட்களும், காட்சிப்படுத்தலும் ஆரம்ப கால இராசையாவின் ஓவியங்களில் காணப்படுகின்ற ஒல்லாந்து ஓவியரான Rembrandtஇன் இருண்ட கன்வசுக்களை இவை எமக்கு ஞாபகப் படுத்துகின்றன. இந்த இருட் தன்மையே இராசையாவின் படைப்புகளுக்குரிய கட்புல ஆழத்தையும், வெளிப்பாட்டு ஆழத்தையும் கொடுக்கிறது. பின்னாளைய படைப்புகளில் இந்த இருள் தன்மை அற்றுப்போய் பின்னணியும், மறைவெளியும் வெண்ணிறத்தாலும் அது சார் நிறங்களாலும் நிரப்பப்படுகிறது. இதனால் கட்புல ஆழம் குறைவதோடு ஓவியத்தின் பின்னணியும் கடினமானதாயும், தட்டையானதாயும் மாறுகிறது. இதனால் இவை மேற்பரப்பு நிலையில் நிகழ்கின்ற வெறும் கோலச்சித்திரிப்புகள் போலாகின்றன. இதனால் Millet Daumier போன்ற ஓவியர்கள் மேற்குலகில் நவீனமயமாதலால் ஏற்படும் சமூக அரசியல் குழப்பங்களுக்குள்ளான மக்களை மிகவும் யதார்த்தமாக சிறைப்பிடித்தது போன்ற ஆழமான பலதணப்பரிமாணப்பட்ட சிறைப்பிடிப்பு இங்கு சாத்தியமற்றுப்போகிறது.


இராசையாவின் நிலவுருக்கள் அவரின் மனித உருக்களில் இருந்து பெரிதும் வேறுபடுகின்றன. இவை எந்த முற்போக்கு கருத்துக்களையும் வெளிப்படுத்தவென படைக்கப்பட்டவை எனக்கொள்ளமுடியாது. இவை முற்றான சுயதிருப்தி சம்பந்தமானவையாகப் படுகின்றன. Romanticism கால பிரித்தானிய ஓவியரான Constable எவ்வாறு பிரித்தானிய கிராமத்து நிலவுருக்களை கற்பனை கலந்து கனவுருக்களாக காட்சிப்படுத்தினாரோ, அவ்வாறு இராசையா யாழ்ப்பாணத்து நில்வுருக்களை கனவுச்சாயமேற்றி புதியதும், தனக்கே உரியதுமான நிலவுருக்களாக்குகின்றார். அம்பலவாணர் இராசையா யாழ்ப்பாணத்து நிலவுருக்களை இவருக்கு முன் அதன் யாழ்ப்பாணத் தனத்துடன் தனது ஓவியங்களில் பதித்ததிலிருந்து இது வேறுபடுகிற முயற்சியாகும். இவை பார்வைக்கு யதார்த்தமாக தோன்றினாலும் கூட உள்ளடக்கத்திலும், நிறப்பாவனையிலும் கனவும், கற்பனையும் இணைந்தவை. இவ்விடத்தில் ஓவியர்களான Van Gogh, Cezanne போன்றவர்கள் நிலவுருக்களின் ஒழுங்கமைப்பில் அனுபவித்த சுதந்திரம் தன்னைக் கவர்ந்ததொன்று என இராசையா குறிப்பிடுகிறார். இவ்வோவியங்களில் Constable இன் வெள்ளைநிற திட்டுக்களை ஒத்த திட்டுக்கள் ஒளியையும், ஈரலிப்பின் பிரதிபலிப்பையும் காட்ட பயன்படுத்தப்பட்டுள்ளன. அண்மைக்காலப் படைப்புக்களில் மற்றய வர்ணங்களும் திட்டுகளாகி பிரகாசமடைவதுடன், மனப்பதிவு வாத ஓவியமாக்கல் உத்திமுறையும் கையாளப்படுகிறது. இதற்கு Sisley, Pissarro போன்ற மனப்பதிவு வாத ஓவியர்களாலும் டொனால்ட் ராம நாயக்கவின் படைப்புக்களாலும் கவரப்பட்டது காரணமாகலாம். இத்துடன் ரவிவர்மாவின் நிறப்பாவனையும் தன்னைக்கவர்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

இவ்விரு பிரதான பிரிவுகளுமே இவரின் முற்றான ஆளுமையையும், சுயதன்மையையும் காத்திரமாக வெளிக்கொணர்பவை. இவ்விரு பண்புகளும் இணைந்த படைப்புகள் மிகக்குறைந்தளவே ஆரம்பகாலங்களில் செய்யப்பட்டுள்ளன. இதை விட இந்திய புராண இதிகாச உருக்களைச் சித்திரிக்கும் படைப்புக்களையும் இராசையா செய்துள்ளார். இவற்றுக்கு ஆனந்த விகடன், குமுதம் போன்ற தென்னிந்திய இதழ்களில் மா.செ.கோபுலு போன்றவர்களால் வரையப்பட்ட விளக்கப்படங்கள் உந்துதலாக இருந்திருக்கின்றன. அவரது பின்னாளைய இப்பேற்பட்ட படைப்புக்களில் நீலவர்ணப் பாவனையில் பெறப்படுகிற நிறத்தூய்மை எமது கணிப்பிற்குரியது. முன்னைய மண்சார் நிறங்களின் செல்வாக்கு இங்கு அற்றுப்போய் விடுகிறது. எனினும் கோடுகளை முதன்மைப்படுத்திய இந்த வெளிப்பாடுகள் முதலில் கண்ட யதார்த்தவாத வெளிப்பாட்டு தளத்திலிருந்து முற்றாக வேறுபடுகின்ற ஒரு தத்துவ, எண்ண வெளிப்பாட்டிலிருந்தே (வரலாற்றில்) தோன்றியுள்ளன. எனவே இராசையாவின் வெளிப்பாட்டுப்பரப்புள் இவை ஒரு முரண் நகையே.

வெளிப்பாட்டு முறைகள் பிரச்சினைக்குரியதாக கொள்ளப்படாத இன்றைய காலப் பகுதியிலும் கூட முறையான ஓவியப் பயிற்சிக்கு யதார்த்தவாதம் சார் அணுகுமுறை வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இன்றைய எமது கலைச்சூழலில் இந்தப்பயிற்சியும், இதனால் கிட்டும் கைவினைத் திறனும் செய்நேர்த்தியும் எல்லாத் துறைகளிலும் குன்றியே காணப்படுகிறது. இதுவே எமது அப்பழுக்கற்ற அனுபவங்கள் அடுத்த கட்டத்திற்கு கலையாக்கத்தில் நகர்த்தப்படுவதற்கு தடையாகவுள்ளன. கட்புல மொழியுடன் பரிச்சய மற்ற படிக்கத் தெரியாத பாமரத்தனமான எமது சமூகச்சூழலில் மிகவும் அழுத்தத்துக்குள்ளாகியுள்ள சொந்த வாழ்நிலையிலும், தூய ஓவியத்தையும் அதனால் கிட்டும் சுயதிருப்தியும் எச்சந்தர்ப்பத்திலும் எதற்கும் விட்டுக்கொடுக்காத இராசையாவின் இருப்பும், அவரின் ஓவியங்களும் அவற்றிலுள்ள செய்நேர்த்தியும், வறட்சியிலிருந்து முயற்சியை நோக்கிய நகர்வில் முன்னெப்போதையையும் விட இப்போ முக்கியமானவை.

**நன்றி: விம்பம்**
**ஆசை. இராசையாவின் ஓவியக் கண்காட்சி பற்றிய கையேடு**

இராசையாவின் ஓவியங்களின் பொதுவியல்பினை யதார்த்தம் சார்ந்தவை எனப் பொதுவாகக் கூறினாலும், வெவ்வேறு படைப்புகளிலுள்ள யதார்த்தப் பண்பின் இயல்பிலும் அணுகுமுறையிலும் நுண்ணிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவரின் மனித உருக்களை முதன்மைப் படுத்திய படைப்புகள் ஏழ்மை, அகதிவாழ்வு, களைப்பு, தீண்டாமை போன்ற சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமானவை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மு.பொ. வின் கவிதைப் போக்கு
## சில அவதானக் குறிப்புகள்

**பேராசிரியர் கா. சிவத்தம்பி**

மு.பொ வின் கவிதைகளை வாசிக்கும் பொழுது முதலில் எடுத்துக் கூறப்படவேண்டிய இரண்டு விடயங்கள் என் மனதில் மேலெழும்புகின்றன. - ஒன்று மு.பொவின் படைப்பு மனோநிலை, மற்றது சமகாலக் கவிதைகளின் பொருள்/மொழி இயைபு.

மு.பொவின் படைப்பு மனோநிலையை நோக்கும் பொழுது அது, 1960களில் அவரது தமையன் தளையசிங்கத்தோடு விவாதித்த ''மெய்யுள்'' என்ற வடிவத்தின்பால், அதுசுட்டு கருத்தோட்டத்தின் பால் நிற்பதாகும்.

> ''இங்கு தரப்பட்டுள்ள ஆக்கங்கள் தத்தம் விடுதலைப்பாங்கான உருவங்களையே கொண்டுள்ளன. இவற்றின் உருவாக்கங்கள் அவை தரும் கருத்தின் இயல்பால் தரிசிக்கப் பட்டவை. அதனால் உங்களுக்குத் தெரிந்த கவிதை, கட்டுரை என்கிற எல்லைக் கட்டைகளால்; வரம்பறையப் பட்ட போதும் அந்த எல்லைக் கட்டைகளைக் கொண்டே விடுதலை முகமுடைய வெவ்வேறு வரம்பு முறைகள் சுயவியக்கம் கொண்டுள்ளன என்பதையும் காணலாம். இந்த முறையைத்தான் மு.த. ''மெய்யுள்'' என்றார்.

இந்தச்சிந்தனைப்போக்கு இந்தப் பத்திக்கு முன்னரும் காணப்படுகின்றது. விடுதலை, எல்லை, எல்லையின்மை என்ற பிரயோகங்களின், வழியாகவே நான் மேற்கோளாகக் காட்டும் பத்தியில் வரும் முடிவுக்கு வருகிறார்.

இவரது இந்தப் போக்குப்பற்றிச் சிந்திக்கும் பொழுது, இந்த மன நிலையில் ஒரு இருகிளைப்பாடு இருப்பதை அவதானிக்கலாம்.

1. சூழவுள்ள யதார்த்தத்தை மறுத்தலிக்காமை.
2. அந்த யதார்த்தத்தில் இருந்து விடுபடுவதற்கான ஒரு ஆதர்சவாத மன நிலை.

இதனைச்சிலர் கற்பனாவாதம் எனலாம். ஆனால் நான் இதில் சித்தர் பாடலில் காணப்படும் மறைஞானப்பாடல்களின் (Mystic Poetry) சில எச்சசொச்சங்களைக் காண்கின்றேன்.

இந்த ஒரு மன நிலை காரணமாகவே, சொல் தரும் கருத்துக்கு அப்பாலே, அந்தச் சொற்கள் சுட்டும் ''சித்த நிலையை'' அவாவி நிற்கும் தன்மையை அவர் கவிதைகளில் காணக்கூடியதாகவுள்ளது. இந்த மனப்போராட்டத்தை ''இனிதனாய் மேலெழு'' எனும் கவிதைப்பொருள் நன்கு சுட்டுகிறது.

> ''இந்தப் பாழாகிப்போன சுரத்துக் கெட்ட சொற்களோடு தான் இன்னும் நாம் மலுக்கட்ட வேண்டுமா''

சமகாலத் தமிழின் சொற்களோடு ஏற்படும் இந்த மோதுகை நமக்கு இன்னொரு முக்கிய உண்மையை எடுத்துக் காட்டுகிறது.

> சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதையில் இத்தகைய ஆத்ம உயிர்ப்புள்ள சிந்தனைத் தேடல் குறைவு. இது முக்கியம்.

சமகாலப் புதுக்கவிதைகள் யாப்பு எனும் வரையறைக்கு அப்பாலான கவிதா மன நிலைகளைக் காட்டுகின்றன என்பது உண்மை எனினும், எங்களது கவிதைகள் எமது ஆத்ம உயிர்ப்பு பற்றிய, அதாவது உண்மையான (Spiritual) ஸ்பிரிச்சுவல் பற்றிய தேடல்கள் மிகக்குறைவாக உள்ள ஆக்கங்களாகவே உள்ளன.

கவிஞன் தனக்குள்ள சொற்களோடு தனது சொற் களஞ்சியத்தின் பொருள் வரையறையோடு சண்டைபோடுகிற போது தான், Metaphors முக்கியமாகின்றன. Metaphorsஐ நாம் உருவகங்கள் என்று சொல்லும் ஒரு வழக்கு உண்டு. உண்மையில் Metaphors என்பதற்கு அதனிலும் சற்று மேலே போக வேண்டும். (சொல்லொரு பொருளான கருத்துத் தராது சொல் சார்ந்த கற்பிதங்களை உணர்த்துவது)

Metaphors எனும் பதத்தின் கருத்தே ''மேலே கொண்டு செல்வது'' என்பது தான். இது நமது உருவகத்துக்கு சமமானதாக இருக்கலாம். ஆனால், உருவகம் மாத்திரம் அல்ல.

மு.பொவின் கவிதைகளில் இந்த மேலே கொண்டு செல்லுகையையே Metaphors நான் நிறைய காண்கிறேன்.

அந்த வகையில் இவரது கவிதையின் மொழி நடை மிக உன்னிப்பாக ஆராயப்பட வேண்டியதாகும்.



காலி லீலை
(கவிதைத் தொகுப்பு)
மு. பொன்னம்பலம்
வெளியீடு:
த்வனி
சென்னை
விலை:
ரூபாய் 150.00

''காலி'' என்ற பதமே இதற்கு நல்ல உதாரணமாகும். ''காலம்'' என்பதையே இவர் ''காலி'' யாகக்கொள்கிறார் போலத் தெரிகிறது. ஆனால் ''காலி'' எனும் சொல்லில் சமகாலப் பரிமாணங்கள் சிலவற்றை உணராத ஒரு நிலையும் இதற்குள் காணப்படுகிறது. இக்கவிதையை வாசிக்கும் எமக்கு நிச்சயமாக இது ஒரு இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. (காலியின் வருகை)

ஆனால் இந்த விடயம் நான் சொல்ல' விரும்புவதை அழுத்தமாகக் காட்டுகிறது. அதாவது மு.பொ. சொற்களை Metaphors ஆகவும் அதற்கு மேல் ஒரு Mystic Power உணர்வானதாகவும், (சித்தப்பலம்) பயன்படுத்துவதைக் காண்கின்றேன்.

சமகால தமிழ்க் கவிதைகளில் இந்தப் போக்கு எவ்வாறு அமைந்துள்ளது என்று நோக்குதல் அவசியம் என்று கருதுகிறேன். முருகையன் இடத்து இந்தப் பண்பு உண்டு. அவர் ஒரு புலமைத்துவ கவிஞன். சண்முகம் சிவலிங்கத்தின் அண்மைக்கால கவிதைகளில் இந்தச் சொற்களுக்கு அப்பால் உள்ளவற்றை உணர்த்தும் தன்மையைக் காணலாம். தமிழகத்தில் வைத்தீஸ்வரன், அப்துல் ரகுமான் முதலியவர்களைக் கூறலாம். இவர்களில் அப்துல் ரகுமானிடத்து குணங்குடி மஸ்தானின் செல்வாக்கு உண்டு என்று கருதுகிறேன்.

எனவே, இந்த விரிந்த விடயத்தை சுருக்கிக் கூறுவதாக இருந்தால், முபொ.வின் கவிதை மொழி கிளப்பும் பிரச்சினைகள் முக்கியமானவையாகும்.

இந்தப் பண்வை விடுத்து நோக்கும் பொழுது. இந்தக் கவிதைத் தொகுப்புக்குள் நண்பர் மு.பொ. அடிப்படையில் ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டக்கூடிய ஒரு முக்கிய உண்மை குத்திட்டு நிற்கிறது.

> அது இதுதான் - (Our Soual being determines ourbConsciusness) *''எமது - சமூக இருக்கை எமது பிரக்ஞையைத் தீர்மானிக்கிறது. இது மார்க்சின் கூற்று.''*

இத்தொகுதியில் உள்ள 1960-1970 காலக் கவிதைகளுக்கும் 1980 -90காலக் கவிதைகளுக்கும் உள்ள வேறுபாட்டில் இதை நன்கு காணலாம்.

1980 -90ல் விடுதலையின் புதிய எல்லைகள் பற்றிப் பேச வேண்டிய தேவை ஏற்படுகின்றது. 'தியாகம் எனும் புது யோகம்'' என்ற கவிதை நல்ல உதாரணமாகும். இதனை வாசிக்கும் பொழுது எனக்கு பாரதியின் கடைசிக்கால கவிதைகளில் ஒன்றான உயிர்பெற்ற தமிழரின் பாட்டில் வரும்

''ஊருக்குழைத்திடல் யோகம்'' என்ற வரிகளே நினைவிற்கு வருகின்றன.

எம்மிடையே இன்று நடைபெறும் போரின் முறைமையை, தன்மையை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ள மு.பொ. (அதற்கு ஒரு அகண்ட பரிமாணம் வேண்டும் என்கிறார்) மனித இன்னல்களை, மனித அவலங்களை கண்கூடாகக் காணும் பொழுது, ''விடுதலைத் தாயை வேண்டுதல்'' தவிர்க்க முடியாததாகிறது.

இந்தக் கவிதைத் தொகுதியூடே மு.பொவின் மாற்றங்களையும், தொடர்ச்சியையும் அவதானிக்க முடிகிறது.

கவிஞர் எனும் வகையில் மு.பொவின், பலம் அவரது நுண்ணிய மனப் படலங்களாகும். ஒரு சிறு விபரத்தைத் தானும் விட்டுவிடாத பதிகை (Recording) போல மன உணர்வில் சகல சிலிர்ப்புக்களும் இவரது கவிதைகளில் இடம் பெறுகின்றன.

ஆனாலும் ஒன்று, இவர் கவிதைக்கும், (Poetry) கவிதா நிலைச்சிந்தனைக்கும் (Poetic thought) உள்ள வேறுபாட்டை உணர வேண்டும்.

1970-80 காலப்பகுதியில் வருபவனவற்றுள், பல கவிதைகளே அல்ல. பல கவித்துவம் உடைய கூற்றுக்கள், மேலும் சில வெறும் கூற்றுக்களே.

மு.பொவின் கவிதை அவர் ஒத்திசைவோட்டத்துடன் (Rhythmic flow) எழுதும்பொழுது தான் பொலிவு பெறுகின்றன.

புதுக்கவிதைக்குரிய ''ஒத்திசைவுக்கப்பாலான பொருள் தேடல்'' இவரது சிந்தனைப்போக்குக்கு இயைந்ததாயினும், இவரிடத்து புதுக்கவிதையிலும் பார்க்க சந்தக்கவிதையே, நன்கு மிளிர்கிறது.

இது மு.பொவின் ஆளுமைபற்றிய ஒரு உண்மையையும் எடுத்துக்காட்டுகிறது.

மு.பொ. தனது மன உலகில் அது தரும் ஒத்திசைவினுள் இயைந்து நிற்கிறார். இந்த ஒத்திசைவு நம்மைச்சூழவுள்ள யதார்த்தத்துடன் இயையாதவை.

அதுதான் மு.பொவின் தன்மை. இது மு.த.விடமும் இருந்தது. இந்த வித்தியாசத்துக்காகவே நான் மு.பொவைப் பாராட்ட விரும்புகிறேன். அவரை மதிக்கிறேன். எல்லாவேளைகளிலும் அவருடன் ஒத்துப்போக முடியாவிட்டாலும், இது அவரது கவித்துவ தனித்துவம் என்பதை மதிக்கிறேன். என்றாலும், காலி லீலைகள் என்பதற்குப் பதிலாக இன்னொரு தலைப்பை தந்திருக்கலாம் என்ற எண்ணமே எனக்கு மேலோங்கி நிற்கிறது.

✱

மு.பொவின் படைப்பாக்க அமிசங்கள் (மனநிலை/ மொழி) பற்றியே இந்தக் குறிப்பில் எடுத்து மொழிய முனைந்தமையால், இவரது கவிதைகளைப் பற்றிய எனது மனப்பதிவுகளுக்கு உரிய இடத்தைக் கொடுக்க முடியாமல் போயிற்று. அது பற்றிப் போகிற போக்கிலாவது குறிப்பிட வேண்டும்.

1. தனிக் கவிதை சிலவற்றினது கவிதா வசீகரம்.
2. இவர் கவிதைகளின் எடுத்துரைப்பு முறைமை (Narrative Mode).

மு.பொ ஒரு சிறுகதை ஆசிரியர் என்பது உண்மை எனினும், இவரது கவிதைகளிலேயே கருத்தும், கவித்துவமும் இணைந்து செல்லும் முறையை நோக்கும் பொழுது கவிதையே இவரது பிரதான வெளிபாட்டுச் சாதனம் என்பது தெளிவாகிறது. அதற்கு மு.பொவை ஒரு கவிஞராகக்கொள்வதே பொருத்தமானது போல தெரிகிறது. இதற்கு ஒரு நல்ல உதாரணம். ''சமயவாதியும், சமய ஞானியும்'' என்ற கவிதையின் இறுதிப்பகுதி. இது ஒரு கவிதை நாடகமாகவே அமைந்துள்ளது.

மு.பொவின் கவிதை எடுத்துரைப்பில் பாரதியிடத்து விருத்தம் பெற்ற முதிர்ச்சி நினைவுக்கு வருகிறது. பாரதி சுயசரிதை, பாரதி அறுபத்தாறு முதலிய பாடல்களில் வரும் எடுத்துரைப்பு ஓட்டம் (Narrative flow) இவரது பாடல்களிலேயே தெரிகிறது.

ஈழத்துத் தமிழ்க் கவிதையின் அண்மைக்கால செழுமைப் பாட்டில் மு.பொவிற்கும் ஒரு இடம் உள்ளது. ○

## எதிர்பார்த்த..

(சந்திரிகா பத்து வருடங்களுக்கு வடக்கைக் கொடுக்க முன் வந்தமைக்காக இவ்வளவு கூச்சல் போடும் ஐ.தே.க மற்றும் சிங்கள பௌத்த தீவிரவாதிகளை நினைக்கும் போது ஒரு மெல்லிய புன்னகை வரத்தான் செய்கிறது!)

''வடக்கு என்னிடம் தான் இருக்கிறது. கிழக்கைத் தருவதைப் பற்றி வேண்டுமானால் பேசலாம்''' என்று பிரபாகரன் அபிப்பிராயப்பட்டதாக காமினி தெரிவித்திருந்தார். பெங்களூர் சந்திப்பும் தோல்வியிலேயே முடிந்தது.

✱

விடுதலை இயக்கங்களுக்கும் அரசுக்குமிடையே இணக்கப்பாட்டைக் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கையை காமினி பின்னர் இழந்து விட்டார். பிரச்சினையைத் தீர்க்க தன்னாலான முயற்சிகளுக்குப் பலன் இல்லாமல் போயிற்றே என்பதும் அவரது தீராத கவலையாக இருந்து. அவரது உடல் நலத்தைப் பாதித்தது. ''பேசாமல் சற்றடே றிவியூவை நடாத்திக் கொண்டிருங்கள்; பேச்சுவார்த்தை விவகாரங்களை விட்டுவிடுங்கள்'' என்பது தான் அவரது நெருங்கிய நண்பர்களது ஆலோசனை என்றாலும் காமினி இவற்றைப் பொருட்படுத்தியதில்லை.

தமிழ் இயக்கங்களை அப்பழுக்கற்ற, புனிதமான போராளி இயக்கங்களாகவே காமினி நம்பியிருந்தார். 1985இல் அநுராதபுரத்தில் 145 சிங்கள மக்கள் விடுதலைப்புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது, இச்செயலை எந்தத் தமிழ் இயக்கமும் செய்திராது; மொஸாட்டின் ஆலோசனையின் பேரில் இலங்கை இராணுவம்தான் செய்திருக்கிறது என்று அவர் நம்பினார்; அப்படியே எழுதினார். எனினும் அநுராதபுரப் படுகொலைக்குப் புலிகளே பொறுப்பு என்று தீலிபன் மூலமாக எனக்குத் தெரிந்திருந்தது. எனவே அவ்வாரத்தைய சற்றடே றிவியூவில் காமினி எழுதியிருந்த கட்டுரையொன்றை பிரசுரத்துக்கு அனுப்பவில்லை. பத்திரிகையின் இறுதிநேர வேலைப் பொறுப்பு அனைத்தும் என்னிடமிருந்தபடியால் ஆசிரியராக இருந்த போதும் காமினியின் கட்டுரையை நிற்பாட்டியாயிற்று. இது குறித்து காமினிக்கு மிகுந்த அதிருப்தி என்றாலும் நிலைமையை அவருக்கு விளக்க வாரங்களாயிற்று. இந்தச்சம்பவம் எனக்கு மிகுந்த வெட்கத்தை ஏற்படுத்தியதொன்றாகும். படுகொலைகளை புலிகளோ அல்லது வேறெந்தக்குழுவோ செய்திருக்கமாட்டா என்று உறுதியாக நம்பும் ஒரு மெல்லிதயங்கொண்ட, தமிழ் மக்களின் நீதியான போராட்டத்துக்குத் துணை செய்கின்ற ஒரு சிங்களப் பத்திரிகையாளர் ஒருபுறம்-இல்லை, இப்படுகொலைகளை விடுதலை இயக்கம் எனப்படுகிற புலிகள் தான் செய்துள்ளனர் என்று சொல்ல நேர்கிற தமிழர் மறுபுறம்!

நல்ல காலம் 1987இல் புலிகள் காமினியைக் கைது செய்து ஒரு வாரம் தடுத்து வைத்திருந்த போதும் பின்னர் விடுதலை செய்து விட்டனர்.


*''துன்பம் சூழ்கையில் தனித்திருந்து நீ கவிதை எழுதப் போகலாம். நான் எங்கே போவது?''* என்று காமினி ஒருமுறை என்னைக் கேட்ட ஞாபகம் இப்போது என்னை வருத்துகிறது. காமினி, இனி எங்கேயும் போகத் தேவையில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தலையை மேலே வைத்து காலைக் கீழே பதியுங்கள் !



சரிநிகர் 141ல் வ.ஐ.ச. ஜெயபாலனின் எட்டாவது பேய் கவிதை பற்றி (சரிநிகர் இதழ் - 135) வெளிவந்த எம்.ஆர்.ஸ்ராலினின் விமர்சனம் பற்றிச் சில குறிப்பீடுகள்.

எம்.ஆர்.ஸ்ராலினுடைய விமர்சனம், ஜெயபாலன் யாழ். முஸ்லிம் மக்கள் கலைக்கப்பட்டது பற்றியும், அவர்களின் மீள் வருகை பற்றியும் எழுதிய மேற்படி கவிதை பற்றியது மாத்திரமல்லாது அவர் மீதான தனிப்பட்ட தாக்குதலுடனும் வெளிவந்திருந்தது.

எனது வாசிப்பின்படி கவிதையில் ஜெயபாலன் வடக்கு முஸ்லிம் மக்களுக்கு விளைவிக்கப்பட்ட அநீதிக்கு [illegible]ராகத் தமிழ் மக்களின் ஆன்மா[illegible] குரலாக நின்று மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டு அவர்களைத் திருப்பி அழைத்திருந்தார். எம்.ஆர். ஸ்ராலின், ஜெயபாலன் கவிதையில் முஸ்லிம்களைக் கலைத்தது புலிகள் எனக் குறிப்பிடாததால் அவரை ஒரு புலிக் கவிஞர் போலவும் சோடித்திருந்தார்.

வடக்கு முஸ்லிம்களைக் கலைத்தது புலிகள் என்பது உலகறிந்த விடயம். ஆனால், உண்மையில் முஸ்லிம்கள் கலைக்கப்பட்டதற்கு முழுக்க முழுக்கப் புலிகள் தான் காரணமா? எம்.ஆர். ஸ்ராலின் கூறுவது போல் தமிழ் மக்களுக்கு அதில் சற்றேனும் சம்பந்தம் இல்லையா? பலகாலமாகத் தமிழ் மக்களிடத்தில் இருந்து வந்த முஸ்லிம் எதிர்ப்பு மனப்பான்மை இல்லாதி[illegible]திருந்தால், புலிகளால் இவ்வளவு இலகுவில் முஸ்லிம் மக்களை வெளியேற்றியிருக்க முடியுமா? தமிழ்த் தேசியவாதம் ஆயுதம் தரிக்க முன்னரே யாழ். தமிழரிடத்து முஸ்லிம் எதிர்ப்பு மனப்பாங்கு இருந்ததல்லவா? நாம் இன்னும் ஒருபடி மேலே போவோமாகில் இந்த மன இணக்கமும், மனத்தளமும் இவ் வெளியேற்றத்திற்கு ஒரு காரணம் அல்லவா? இல்லாது போனால் புலிகளிடம் மாத்திரம் அல்ல சகல தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் அனைத்திலும் காணப்பட்ட முஸ்லிம் விரோதப் போக்கை எப்படி விளங்கிக் கொள்வது? புலி இயக்கத்தினர் தான் முஸ்லிம் மக்களைக் கலைக்கக் கூடிய அதிகார அமைப்புப் பலத்தைக் கொண்டிருந்தனர் அவ்வளவு தான். உண்மையில் ஜெயபாலன் தனது கவிதையில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்குப் புலிகள் தான் தனியே காரணம் எனக் காட்டியிருப்பாரேயாயின், அது வரலாற்றுப் பொய்யாகும் பழியை, முழுக்க முழுக்கப் புலிகள் மேல் போட்டு விட்டுத் தப்புவதால் தமிழ் முஸ்லிம் உறவு சீரடையாது; மாறாக விரிவே வளரும்.

முட்களை அகற்றாமல் அஸ்ஸலாமு அலைக்கும் என்பது பயன்தராது. புலிகளால் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது மக்கள் பலர் மௌனமாகக் குமுறி அழுதது உண்மை தான். ஆனால் மக்களால் அதைத் தடுத்திருக்க முடியுமா என்பது 1986/87ல் புலி இயக்கம் தமிழ்ச் சிவில் சமூகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த பின் சந்தேகத்திற்கு விடப்பட வேண்டிய ஒன்றே. யார் செய்தாலும் எமது சமூகத்தின் பெயரால் நடந்த அனர்த்தங்களுக்கு நாமே பொறுப்பு எடுக்க வேண்டும். இப்பழியை எமது தலைமுறை மாத்திரம் அல்ல இனிவரும் தலைமுறையும் சுமக்க வேண்டியது கட்டாயம். இதே பொறுப்பு முஸ்லிம், சிங்களச் சமூகத்திற்கும் உண்டு.

மற்றும்படி வேலணைத் தீவுச் சிங்கம் போன்றோரின் நெகிழ வைக்கும் நடவடிக்கைகள் மதிக்கப்பட வேண்டியதும் போற்றப்பட வேண்டியதும் தான். ஆனால் அதையே தப்பித்துக் கொள்ளும் பாணியாகப் பாவித்து எமது கைகளைச் சுத்தமாக்கப் பார்க்கும் எம்.ஆர். ஸ்ராலினின் செயல் துரோகத்தனமானது. 'ஜெயபாலனின் கவிதை அகண்ட பார்வை உடையதாகவும், தூரப்பார்வை உடையதாகவும் அமைந்துள்ளது. வரலாற்றில் கவிஞர்கள் / கவிஞைகள் ஒரு சமூகத்தின் Moral Instance ஆகவும் இருந்து வந்திருக்கிறார்கள். தமது சமூகத்தில் அல்லது தமது சமூகத்தின் பெயரால் நடத்தப்பட்ட, நடந்த அட்டூழியங்களுக்குப் பாதிக்கப்பட்ட சமூகத்திடம் மண்டியிடடு மன்னிப்புக் கேட்பது கவிஞர்/ கவிஞைகளின் தார்மீகக் கடமை. முஸ்லிம் - தமிழருக்கிடையான ஒற்றுமை தனியே அரசியல் பொருளாதார மட்டத்தில் மாத்திரம் கட்டியெழுப்பக் கூடியது அல்ல. மாறாக உள அடிப்படையிலும் செய்யப்பட வேண்டியது இது. இதற்குக் கவிஞர் / கவிஞைகளின் பங்கு முக்கியமானது. மற்றும்படி கவிதைகளோ, மீள் குடியேற்ற நடவடிக்கைகளோ இழைக்கப்பட்ட கறையை அகற்றி விடாது. மறறும், எம்.ஆர்.ஸ்ராலின், ஜெயபாலனின் கவிதை மீதான விமர்சனத்துடன் மாத்திரம் நில்லாது அவரின் நேர்மை உள சுத்தி பற்றியும் தனிப்பட்ட, ரீதியில் தாக்கியதுடன் அவரை ஒரு புலிக் கவிஞர் போலவும் சித்திரித்திருந்தார். இது போலவே, பாரிஸில் இருந்து வெளிவரும் சமர் சஞ்சிகையும் பாரிஸில் நடந்த இலக்கியச் சந்திப்பில் ஜெயபாலன் புலிகளுக்குப் பிரச்சாரம் செய்தார் என்ற பொய்யான தகவலை வெளியிட்டிருந்தது. எனக்குத் தெரிந்ததன்படி ஜெயபாலன் தனியே வெளிநாட்டில் மாத்திரம் வாழ்பவரல்ல. செய்தி வெளிவந்த போது, அவர் கிழக்கு மாகாணத்தில் இருந்தார். சும்மாவே புலியெனச் சுடும் பூமி எம்மது. இந்நிலையில் மேற்படி பொய்யான தகவலை வெளியிட்டதன் மூலம் சமர் ஜெயபாலனை Free to Shoot நிலைமைக்கு ஆளாக்கியிருந்தது. அதே மாதிரியான தகவலை வெளியிட்டு அந்நிலைமையை மேலும் அதிகரித்து வைத்தது சரிநிகர். தனிப்பட்ட அவதூறுகளுக்கும் தாக்குதலுக்கும், தளம் அமைத்துக் கொடுப்பதில்லை என்ற முடிவைச் சரிநிகர் எடுத்திருந்ததாக ஞாபகம். இம் முடிவு தனியே சரிநிகருக்குள் இருப்பவர்களுக்கு மாத்திரம் இல்லாமல், மற்றவர்களையும் சரிநிகர் சமானமாக மதித்து வெளியில் உள்ளவர்கள் விடயத்திலும் கடைப்பிடித்தால் நன்று.

கடைசியாக, ஸ்ராலின் என்ற (புனை) பெயரை உடைய ஒருவர் புலிகளின் அட்டூழியங்களை விமர்சிப்பது என்பது வரலாற்றின் பரிகாசம் தான்.

பிற்குறிப்பு : வெளிநாட்டில் ஓரளவு பாதுகாப்புடன் இருந்து கொண்டு கருத்து முதல்வாதத் தன்மையுடன் நாட்டு யதார்த்தத்துடன் தொடர்பற்று, வார்த்தை தீவிரவாதத்தை விதைத்துத் திரியும் Post புரட்சியாளர்கட்கு ஒரு வேண்டுகோள், தலையை மேலே வைத்துக் காலைக் கீழே பதியுங்கள்.

***ஸ்பாட்டகஸ்தாசன், ஜேர்மனி***

## ஆட்சியில் மட்டுமே ஆசை !

சரிநிகர் இதழ் 142ல், சிறாஜ் மஃஷூர் அவர்களால் ''கடந்த பத்தாண்டுகளில் முஸ்லிம் காங்கிரஸ் சாதித்தது என்ன...?''எனும் வாசகக் கேள்விக் கணையோடு எழுதிய குறிப்புக்களை வாசித்த போது உண்மையில் எனது மனதை அது நெருடிவிட்டது. சில யதார்த்த உணர்வுகளை நமக்குள் அடக்கி விடாமல் சொல்லித் தான் ஆறுதலடைய முடியும். நம்மவர்கள் என்று சும்மா பார்த்துக் கொண்டிருந்தால், ஈற்றில் மீதப்படுபவர்களும் நம்மவர்களே.

இந்த நாட்டு அரசியல் வரலாற்றில் மிகவும் உச்சக் கட்டமாக முஸ்லிம்கள் அரசியலில் முகங்காட்டக் கூடிய ஒரு ஸ்திர நிலையை தற்போதுள்ள முஸ்லிம் காங்கிரசில்தான் உள்ளது. இன்னும் பத்து வருடங்களுக்குப் பிறகோ, அல்லது அதற்குப் பிறகோ முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவமும், அதன் உயர் பீடங்களும் மாறுபடலாம் அல்லது கலைந்து விடலாம். ஆனால், வட கிழக்கு மண்ணிலும், அதற்கு வெளி நிலைகளிலும் பிறக்கப் போகின்ற குழந்தைகளுக்கும், இருக்கின்ற மக்களுக்கும் எதிர்கால நலன் கருதிப் பலம்மிக்க ஒரு கௌரவமான, சுயமாக இயங்கக் கூடியதுமான ஒரு தீர்வொன்றினை ஏற்படுத்தி விட்டுச் செல்ல வேண்டியது முஸ்லிம் காங்கிரசின் தலையாய பொறுப்பாகும். இதனையெல்லாம் விட்டுப்போட்டு, அரை குறை அபிவிருத்திகளுக்கும், சொற்பமான ஆசைகளுக்கும், தங்களை அர்ப்பணித்து மேடைகளில் முழங்கிக் கொண்டு வலம் வருவது தான் ஒரு சுவாரஷ்யமான விடயம்.

முன்பு ஒவ்வொரு முஸ்லிம் காங்கிரஸ் மேடைகளிலும், அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் ''முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்படும் போது நான் எனது ராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்து ஒதுங்கவும் தயாராக இருக்கிறேன்'' என முழங்கி விட்டு தற்போது மௌனப்பிரசங்கம் நிகழ்த்தும் மாயை தான் என்ன?

ஹஜ் பெருநாள் விடுமுறையை இல்லாமல் செய்தது, பொன்னன்வெளி விவகாரம் போன்ற இன்னோரன்ன முஸ்லிம்களின் உரிமைகள் இன்னும் முழுமைப்படுத்தப்படாத அரைத் தீர்வாகவே இழுபட்டுக்கொண்டிருக்கிறது/ எனவேதான் முஸ்லிம் காங்கிரஸ் கோரும் உரிமைகள் என்று கூறும் அம்சங்கள் யாவை? என்பது தான் இன்னும் தெளிவில்லாமல் வரையறுக்க முடியாத அவலமாக உள்ளது. என்னென்ன உரிமைகள் என்றாவது இனித்தெரியப்படுத்துவார்களா எனச் சராசரி அரசியல் விளங்கும் மக்கள் தமக்குள்ளே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரம்ப கால நகர்வுகளில் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன்வைத்த காங்கிரஸ் படிப்படியாக அதனையும் கைவிட்டது. தற்போது தென் கிழக்கு மாகாண முஸ்லிம் அலகு எனும் வாசகப் பொறியினை முன்நிறுத்தி வருகிறது. இந்தத் தென் கிழக்கு அலகு சம்பந்தமாக வட கிழக்கு மண்ணுக்கு வெளியே செறிந்து வாழும் முஸ்லிம்களின் நிலை பற்றிச் சிறிதும் ஆராயப்படவில்லை. இருந்தும் இந்தத் தென் கிழக்கு முஸ்லிம் அலகு சம்பந்தமாக யாருக்கும் அநீதி ஏற்பட்டு விடுமேயானால் நாங்கள் அதனையும் கைவிடவும் தயார் எனவும், மீளவும் முஸ்லிம் காங்கிரஸ் முழங்குகிறது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, ஆட்சிக்கு வரும் முனைப்புத் தான் இவர்களிடம் பரந்து கிட்க்கிறது. ஈற்றில் மீதமாகப்பட்டது காலந் தாழ்த்தல் என்பதே.

***மருதூர் விஜாஸ்***

## அகழ்வாரய்ச்சிக்கு அவசியம் என்ன?

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சூழ்நிலைகளில் புதைபொருள் ஆராய்ச்சி செய்ய வேண்டிய எண்ணம் யாரேனுக்கும் தோன்றுமா? ஆனால் சிங்களக் கல்விமான்கள் சிலருக்கு யாழ்ப்பாண மண்ணை அகழ்வாராய்ச்சி செய்ய ஆசை மேல் ஆசையும், அவசரமும் ஏற்பட்டிருக்கின்றது. ஏன் இந்த அவசரமும் ஆசையும்? யாழ்ப்பாண மக்கள் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருப்பது உலகறிந்த விடயம். சொல்லொணாத் துயரங்களையும், பொருளாதார, அரசியல், இராணுவ நிர்ப்பந்தங்களையும் தாங்கி, வெந்துருகிப் போயிருக்கும் யாழ் மண்ணிற்குத் தற்போது அகழ்வாராய்ச்சி தேவை தானா? இந்த அகழ்வாராய்ச்சியைச் செய்ய முனைபவர்கள் யார்? அத்தியாவசிய தேவையை நிறைவு செய்ய, தமிழ் மக்கள் போக்குவரத்துக் கஷ்டங்களை எதிர்கொள்கின்ற போது இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு இலகுவாகப் பிரயாணஞ் செய்வதற்கு அனுமதி கொடுத்தது யார்? அரசு தானே! இங்கே தான் ஒரு விழிப்புணர்வு தமிழர்கள் மத்தியிலே தேவை. அம்பாறை மற்றும் திருமலையின் பல பிரதேசங்கள், மணலாறு என்பனவற்றை விழுங்கி ஏப்பம் விட்ட சிங்களப் பேரினவாதம், யாழ்ப்பாணத்தையும், ஏனைய தமிழ் வாழ் பிரதேசங்களையும் விழுங்கி ஏப்பம் விடாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. எனவே இந்த அகழ்வாராய்ச்சி என்பது அநியாயத் திட்டமொன்றிற்குரிய ஆரம்பமாகவே இருக்கலாம். தமது தாயகப் பகுதியில் ஆய்வு செய்யக் கூடிய தமிழர்கள் எவரும் இல்லையா? ஏன் பௌத்த பிக்குகளான இவர்கள் செல்ல வேண்டும்? இந்தப் பிக்குமார்களான கல்விமான்களின் பின்னணியைப் பார்த்தால், இவர்கள் தான் சிறி ஜெயவர்த்தனைபுரப் பல்கலைக்கழகத்தில் இருந்து தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கின்ற அணியினைச் சேர்ந்தவர்கள் என்பது புரியும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இச் சக்திகள், தமிழர்களை வந்தேறு குடிகளாகச் சித்திரிப்பதில் முன்னின்று செயற்படுபவர்கள். எனவே இவர்கள் குறித்த விழிப்புணர்வுடன் தமிழர் தரப்பு செயற்பட வேண்டும். ஏனெனில் பல வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பல புத்தர் சிலைகள் புதைக்கப்பட்டுப் பின்னர் தாங்களே அவற்றைத் தோண்டியெடுத்துச் சிங்கள பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததாகப் பொய்யான வரலாற்றுத் திரிபை ஏற்படுத்தினர்.

எனவே இவர்கள் ஏதேனும் அகழ்வாராய்ச்சி செய்தால் நிச்சயம் பல புத்தர் சிலைகள் மண்ணிற்குள் இருந்து முளைக்கும். சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள், பௌத்த மதம் கோலோச்சி இருந்தது என்றெல்லாம் வாயாரச் சொல்லி வரலாறு எழுதக் காத்திருப்பார்கள். கட்டுக்கதை வரலாறுகளைத் தமிழர்கள் மீது திணிப்பதற்கு ஏற்ற சூழல் யாழ்ப்பாணத்தில் நிலவுகின்றது. எனவே யாழ். பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையினர் இந்த விடயத்தில் புத்தி பூர்வமாகச் செயற்பட வேண்டும்.

***எஸ்.வி. இராகவன்***

## தொண்டா..

8. காந்தீய வழியில் செல்வதாக சொல்லிக் கொண்டு தொழிலாளர் சந்தாப் பணத்தில் கட்டிய தொழிற்சங்கக் காரியாலயக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் 'வெனு' என்ற பெயரில் 'இரவு விடுதி' நடத்த விடுதிக்கான அனுமதி வழங்கியமை.
9. அரசியல் செல்வாக்கு மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மலையகத்தில் சாராயத் தவறணை உத்தரவுப் பத்திரங்களைப் பெற்று மேலும் மலையக மக்களை சுரண்டி, பிற்போக்கு நிலைக்குத் தள்ளியமை.
10. தன்னுடைய ஸ்தாபனத்தில் கடமையாற்றும் முழுநேர ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை செலுத்தாமல் சுரண்டி வருவது.
11. கந்தப்பளை, கொங்கோடியா தோட்டத்தில் நிறுவப்பட்டுள்ள 'Aitilen', ஹோட்டலில் மலையக தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு கிட்டும் என பொய்யான வாக்குறுதிகளை முன்வைத்துவிட்டு பின்னர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல், வெளியார் நியமனம் பெற்றதை ஆட்சேபிக்காமல் இருப்பது.
12. பெருந்தோட்டத் துறையில் இருந்து ஓய்வு பெற்ற சிங்களத் தோட்டத் துரைமார்களை தனது அமைச்சில் நியமனம் செய்துவிட்டு, படித்த, திறமை பெற்ற மலையக இளைஞர்களை இவ்வாய்ப்பிலிருந்து ஒதுக்கியமை.
13. தனது சுயரூபத்தை வளர்த்திட தனது பேரனை உயர்வு செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள், மேற்படி இ.தொ.காவுக்குள் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் துரோகம்.
14. காலி துறைமுக கேள்விப்பத்திர விடயத்தில் நடைபெற்றுள்ள ஊழல், எயார் லங்காவில் நடைபெற்றுள்ள ஊழல் மலையக மக்களுக்கு ஏற்படுத்தும் அபகீர்த்தியில் நிலை கொண்டுள்ள துரோகம்.
15. பயங்கரவாத தடுப்புச்சட்டத்தால் துன்புறுத்தப்படும் மலையக மக்களின் வாழ்வுக்கு, பாதுகாப்புக்கு முட்டுக் கட்டையாக செயல்படுவது மற்றுமொரு துரோகம்.

***எஸ்.செண்பகராமன், கந்தப்பளை***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்


இரு வாரங்களுக்கு ஒரு முறை

**இல. 04, ஜயரத்ன வழி,**
**திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு 05.**

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.

E-mail : sari@sri.lanka.net

## சார்ள்ஸ் காலமானார் !



இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துவத்துக்குமான இயக்கத்தின் (மேர்ஜ்) தலைவரும், அரச கருமமொழி திணைக்களத்தின் முன்னாள் தலைவருமான சாள்ஸ் அபேசேகர அவர்கள் (72) ஏப்ரல் மூன்றாம் திகதி அன்று திடரென ஏற்பட்ட சுகயீனமும், அதைத் தொடர்ந்த மாரடைப்பும் காரணமாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காலமானார்.

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர் என்ற வகையில் அவர் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம், இன்போம் (INFORM), மனித உரிமைகள் பணிக்குழு ஆகிய அமைப்புகளில் முக்கிய பங்காற்றி வந்தார். பாங்கொக்கிலுள்ள 'மனித உரிமைகட்கான ஆசிய கூட்டமைப்பு' மற்றும் கொழும்பிலுள்ள 'சமூக விஞ்ஞானிகள் சங்கம்' என்பவற்றை உருவாக்கியவர்களில் சாள்ஸ் அபேசேகர அவர்களும் ஒருவராவர். நீண்டகாலமாக இலங்கை நிர்வாக சேவையில் ஈடுபட்டிருந்த அவர் 1977இல் இளைப்பாறும் போது இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தார்.

திரு. அபேசேகர அவர்கள் ஒரு முக்கிய கலைத்துறை விமர்சகரும், கலாசாரம், பண்பாடு என்பவை குறித்து எழுதி வந்த ஒரு எழுத்தாளருமாவார். தொடர்பு சாதனச் சுதந்திரத்திற்கும், வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் அயராது பாடுபட்ட அவர் சரிநிகர், யுக்திய ஆகிய பத்திரிகைகளைக் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றினார்.

இவர் சமகால அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக வெளியிடப்பட்டு வரும் 'பிரவாத' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் இணையாசிரியர்களில் ஒருவருமாவார்.

சிங்கள, பௌத்த பேரினவாதத்துக்கு எதிரான, உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த சாள்ஸ் அபேசேகர அவர்கள், இனவாதிகளின் இடையறாத தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருந்தார். ஆயினும், அவர் தன்னுடைய கருத்திலிருந்து சற்றும் பின்வாங்கிவிடவில்லை. அண்மையில், பாக்கியசோதி சரவணமுத்து அவர்களுடன் சேர்ந்து, அவர் எழுதிய சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கைக்கு ஓர் பதில் என்ற ஆங்கில மொழி நூல் வெளிவந்தது. இந் நாட்டில் இனங்களுக்கிடையே ஒரு சௌஜன்ய உறவு நிலவ வேண்டும் என்று மனமார விரும்பிய சாள்ஸ் அபேசேகர அவர்கள், இனப் பிரச்சினை அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தனது இறுதிக்காலம் வரை செயற்பட்டு வந்தார்.

மேர்ஜ இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் சரிநிகர் பத்திரிகையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு அவர் எப்பொழுதும் ஆதரவாக இருந்து வந்துள்ளார். அவரது இழப்பு மனித உரிமைகள் மற்றும் சமூக-ஜனநாயக இயக்கங்களைப் பொறுத்தவரையில் ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

## வவுனியா:பாஸ் செய்த கொடூரம்!

வவுனியாவில் இருந்து நாட்டின் தென் பகுதிக்குச் செல்வதில் உள்ள பாதுகாப்பு நடை முறையான பாஸ் பெறவேண்டிய நடைமுறையி னால், வவுனியாவில் மனிதாபி மானம் செத்து விட்ட[illegible] என்று சந்தேகிக்க வேண்டிய [illegible]லமை தோன்றியுள்ளது.

மார்ச் 26 வியாழன் அன்று இரா ணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் உள்ள கரப்பாங்கண்டல் எனும் இடத்திலிருந்து கமலாதேவி என்ற 28 வயது தாய் ஒருவர் தனது 6 மாதக் குழந்தையை வவுனியா வைத்தியசாலைக்கு வயிற்றுக் கோளாறு மற்றும் சத்தி காரணமாக நோயுற்றிருந்த தனது குழந்தையை சிகிச்சை பெறுவதற்காகக் கொண்டு வந்திருந்தார். இரண்டு மூன்று தினங்கள் சிகிச்சை அளித்தும் பயன் ஏற்படாத காரணத்தினால், அவரை மேல் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் அனுராதபுரத்திற்கு அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பி வைத்தார்கள்.

மார்ச் 31 திங்களன்று கொண்டு செல்லப்பட்ட சந்திரவதனி என்னும் பெயருடைய இக்குழந்தை அனுராதபுரம் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதும் உயிரிழந்து விட்டது. குழந்தை உயிரிழந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல், தாய் தவித்துக் கொண்டிருந்த வேளையில், அவரை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டி வவுனியாவுக்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமாகியதும், அங்கிருந்த வர்கள் இளம் பெண்ணான அந்தத் தாய் அனுராதபுரம் வைத்திய சாலையில் இரவு தங்கி நிற்க முடியாது எனக் கூறி, அப்படி நின்றால், தமிழரான அவரைப் பொலிஸார் கைது செய்யக் கூடும் எனத் தெரிவித்துள்ளார்கள். இதனால், குழந்தையைப் பறி கொடுத்த நிலையில் மனம் குழம்பி இருந்த தாயார் என்ன செய்வது எனத் தெரியாத நிலையில், அம்புலன்ஸ் வண்டியிலேயே வவுனியாவுக்குத் திரும்பி வந்து விட்டார்.

கையில் பணம் இல்லை. உதவி புரிவதற்கு ஒருவரும் இல்லாத நிலையில், வவுனியாவில் உள்ள கோழிக்கூட்டு முகாமிற்குச் சென்று அனுராத புரத்திற்குச் செல்வதற் காக பிரயாண பாஸ் கேட்டு விண்ணப்பித்துள்ளார். தனது குழந்தை இறந்து விட்ட நிலையில் அதனை அப்படியே விட்டு விட்டு வந்ததை எடுத்துக் கூறியும் 'அங்கிருந்த அதிகாரிகள் இரக்கம் காட்ட வில்லையாம். மாறாக, அவர் எவ்வாறு அனுராதபுரத்திற்கு கோழிக்கூட்டு முகாமின் பாஸ் இல்லாமல் சென்று எவ்வாறு திரும்பி வந்தார் என்பது குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று அதிகாரத் தோரணையில் தெரிவித்துள்ளார்கள். இதனால் மேலும் குழப்பமடைந்த அவரை யாழ் வீதியில் உள்ள [illegible]ர்வுண் கம்பனி கட்டிடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் சென்று பாஸ் பெற்றுச் செல்லுமாறு அனுப்பி இருக்கின்றார்கள்.

அங்கு சென்ற அவரை வவுனியாவுக் குத் தெற்கே செல்பவர்களுக்குக் கோழிக் கூட்டு பொலிஸார் தான் பாஸ் வழங்குவது வழக்கம் என விளக்கம் அளித்து வேண்டுமானால், உயிலங்குளம் ஊடாக, வன்னிக்குத் திரும்பச் செல்வதற்கான பாஸ் வழங்க முடியும் எனக் கூறியதை அடுத்து கண்ணீரோடு, அனுராதபுரம் வைத்தியசாலைக்குத் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு தனது இறந்த குழந்தையை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு கூறிவிட்டு வன்னிக்குத் திரும்பிச் சென்று விட்டார்.

இடம் பெயர்ந்த நிலையில் வன்னிப் பகுதியில் இருந்து வந்த தமிழ்ப் பெண் என்ற ஒரே காரணத்திற்காக தனது குழந்தையின், இறுதி கிரிகைகளை மேற்கொள்ள முடியாத ஒரு கையறு நிலையில் கைவிட்டு வரவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து வவுனியாவில் உள்ள எந்த ஒரு பொது அமைப்பும் கூட கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல், இந்த அவலச் சம்பவம் தொடர்பான செய்திகள் வெளியான பின்பும், இங்குள்ள மக்களுக்கு சேவை யாற்றுகின்றோம் எனக் கூறிக்கொள்ளும் எந்த ஒரு கட்சியும் கூட அது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனோ அல்லது பிரிவின ருடனோ தொடர்பு கொண்டதாகத் தெரியவில்லை.

இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த வவுனியா வைத்திய சாலை அதிகாரி ஒருவர் குறிப்பிட்ட தாய் வைத்தியசாலை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பின் உரிய நடவடிக்கையைத் தாங்கள் மேற்கொள்ள முயற்சித்திருப்போம் எனத் தெரிவித்தார்.

இதே வேளையில், இச்சம்பவம் பற்றி அறிந்த வவுனியா அரசாங்க அதிபர், வவுனியா வைத்தியசாலை அதிகாரிகளிடம் இது குறித்து உத்தியோக பூர்வமான விளக்கத்தைக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது. அது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட அந்தப் பெண்மணிக்கு ஏன் உரிய கடிதம் வழங்கப் படவில்லை என்பது குறித்தும் வினவியுள்ளதாகத் தெரிகின்றது.

மனிதன் உயிரோடு இருக்கின்ற போது கவனிக்கா விட்டாலும், உயிரிழந்த பின்பாவது அனுதாபம் காட்டி, இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கான உதவிகளை மனிதாபிமான அடிப்படையில் செய்ய மனம் வராத பாதுகாப்புப் பகுதியினரும், அதிகாரிகளும் தான் பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்பட்டு பொது மக்களுக்குச் சேவையாற்ற விடப்பட்டுள்ளாகள். இத்தகையவர்களை நம்பி இருக்கும் இந்த நாடு எவ்வாறு உருப்படப் போகின்றது என்பது தெரியவில்லை.

வவுனியாவில் உள்ள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட (?) மூன்று பா.உக்களும் வவுனியா முகாம்களில் முதலைக் கண்ணீர் வடித்து பத்திரிகையறிக்கை வெளியிட்டது தான் மிச்சம். சிறைக்கைதிகள் போல் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த மக்களுக்காக இந்தத் தமிழ் கட்சிகள் தெருவில் இறங்கி போராட்டம் நடத்தினால் என்ன? அதற்கும் அடுத்த தேர்தல் வரை காத்திருக்கத்தான் வேண்டுமா?

## ஜனநாயக மரண தண்டனை !

மார்ச் 7ம்திகதி ஏறாவூர் தளவாயிலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செபஸ்தியான் புஸ்பராணி (38) செபஸ்தியான் சுபாஜினி ஆகியோரைச் சுட்டுக் கொன்ற இராசிக் குழுவைச் சேர்ந்த சிங்கராஜா கண்ணனுக்கு(நிதி) ராசிக், ஜனநாயக முறைப்படி 28ம்திகதி மரண தண்டனை வழங்கியுள்ளார்.

28ம் திகதி அதிகாலை தளவாய் காட்டுப் பகுதிக்கு சென்றிருந்த வேளையில் கண்ணன் அங்கு மறைந்திருந்தார். அவரை நாங்கள் கைது செய்து வைத்திருக்கின்றோம். இக் கொலைஞனை பார்ப்பவர்கள் வந்து பார்க்கலாம் என்று பத்திரிகையாளர்களிடம் குறிப்பிட்டிருந்தனர் ராசிக் குழுவினர். அவர்கள் பி.ப.3 மணியளவில் ராசிக்கின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட போது இங்கு அவ்வாறான ஒருவரையும் கொண்டு வரவில்லை என்று கூறி விட்டார்கள். அன்று மாலை 6மணியளவில் கண்ணனின் பிரேதம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டது.

தளவாய் காட்டுப் பகுதியில் கண்ணன் மறைந்திருப்பதை அறிந்து நாங்கள் அங்கு சென்று சுற்றி வளைத்த போது கண்ணன் ஓடினார். சிறிது நேரத்தில் அங்கு சென்ற திசையில் வெடிச்சத்தம் கேட்டது. எங்களது குழுவினர் அங்கு சென்று பார்த்த போது கண்ணன் கைக்குண்டை வெடிக்க வைத்து இறந்து கிடந்தார் என்று கூறி எல்லோருக்கும் 'ஜனநாயக' விளக்கம் கூறிவிட்டார் ராசிக்.

## புதிய தடைகளை..

ஐ.தே.க.வின் விருப்பத்துக்கோ, அனுமதிக்கோ மட்டுப்படுத்தக் கூடியதல்ல. இதனை ஐ.தே.க. ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக இதனைத் தூரவீசியிருந்தால் இந்நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு செய்யும் பெரும் துரோகமாகும். எனவே ஐ.தே.க. எதிர்த்தாலும் இதனைச் செய்தே ஆக வேண்டியிருக்கும்.

*தற்போதைய கைதுகளின் காரணமாக அப்பாவித் தமிழர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நேர்க்குகிறார்கள். இன்றைய கெடுபிடிகள் தமிழர்களை இலக்கு வைத்தல்லவா மேற்கொள்ளப்படுகிறது?*

ஒரு புறத்தில் ஆம், இன்னொரு புறத்தில் இல்லை. ஆம் என்பதன் பொருள், இன்றைய தமிழ் மக்களின் ஒரு பிரிவினர் தான், பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். கைதுகளின் போது தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் இடையூறுகளை உணர முடிகிறது. ஆனால் இதனைக் கூடியளவு குறைப்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறோம். மறு பக்கம் இன்று தமிழ் பேசும் மக்களும் கூட கைது செய்யப்படுகிறார்கள். சில சிங்களவர்கள் புலிகளின் சேவகர்களாகவும் இருக்கிறார்கள். 1987-1989களில் தென்னிலங்கை சிங்கள இளைஞர்களுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு உள்ள பொறுப்புத் தான், இந்தக் குண்டு வெடிப்புகளையும் பயங்கரவாத நடவடிக்கைகளையும் நிறுத்தக்கோரி புலிகளுக்கு அறை கூவுவது. இக் காரியத்தை நாங்கள் விரும்பிச் செய்யவில்லை. குண்டுகள் தமிழ், சிங்களவர்கள் என்பதைப் பார்ப்பதில்லை. வெடித்தால் எல்லோரும் தான் பலியாகின்றோம்.

*ஆனால் அண்மைய கைதுகள், தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள் முன்னைய அரசாங்கத்தை விட அதிகரித்திருப்பதாகப் பல்வேறு மனித உரிமைகள் நிறுவனங்கள் தெரிவிக்கின்றனவே?*

எங்களுக்கு அதற்கு மாறான கருத்துக்கள் தான் கிடைக்கிறது. பாதுகாப்புத் தரப்பில் சிலர் செய்யும் லஞ்சம், ஊழல், கொடுர நடத்தைகள் என்பன குறித்தும் நாங்கள் கேள்விப்படுகிறோம் ஆனால் எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு இதற்கெதிரான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

வெளிவரவிருக்கிறது.

**திருப்பம்**

அரசியல், கலை, இலக்கிய, சமூக மாத ஏடு

| | |
|---|---|
| அரசியல்நோக்கு | வி.ரீ.தமிழ்மாறன் |
| முஸ்லீம் தலைமைகள் | சிராஜ் மஸ்ஹுர் |
| கல்வியும் சமூகமும் | பேராசிரியர் எஸ்.சந்திரசேகரன் |
| பண்பாட்டறிவு | பேராசிரியர் கா.சிவத்தம்பி |
| பாற்சமத்துவம் | கலாநிதி செல்வி திருச்சந்திரன் |
| சுதந்திரமெனுஞ் சொல் | சு.வில்வரத்தினம் |
| சிறுகதை | எஸ்.ரஞ்சகுமார் |
| திறனாய்வு | மு.பொன்னம்பலம் |
| இவை மட்டுமல்ல | இவர்கள் மட்டுமல்ல |

பொருள் புதிது! சுவை புதிது!!

புத்தாண்டு புலர்ந்ததும் உங்கள் வாசலுக்கு வருகிறது

ஏக விநியோகஸ்தர்கள்:

லங்கா புத்தகசாலை.F.L.1: 14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு-12. தொலைபேசி: 341942

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்